# மட்டக்களப்பு வரலாறு

## பூர்விக குடிகளும் குமார தெய்வ வழிபாடும்

பண்பாட்டு வரலாற்றினடியாக ஓர் உசாவல்

எ.விஜயரெட்ண (விஜய்)



எ. விஜயரெட்ண (விஜய்) மட்டக்களப்பு, கிரான் எனும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். 1980 களில் தேசிய விடுதலைப்போராட்டச் சூழலில் அது சமூக விடுதலைக்கான போராட்டமாகவும் மாற்றப்பட வேண்டும் என்ற கருத்தியலுடன் செயற்பட்டவர். மட்டக்களப்பில் நிலவிய அசாதாரண சூழலால் மலையகத்திற்கு இடம்பெயர்ந்து அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றுகிறார். பண்பாடு, வழிபாட்டுமுறைகள், தொன்மங்கள் போன்றவற்றில் ஆய்வுகள் மேற்கொண்டும் எழுதியும் வருகின்றார்.

# மட்டக்களப்பு வரலாறு

## பூர்விக குடிகளும் குமாரதெய்வ வழிபாடும்

பண்பாட்டு வரலாற்றினடியாக ஓர் உசாவல்

# மட்டக்களப்பு வரலாறு

## பூர்விக குடிகளும் குமாரதெய்வ வழிபாடும்

### பண்பாட்டு வரலாற்றினடியாக ஓர் உசாவல்

எ. விஜயரெட்ண (விஜய்)

*இவர் மட்டக்களப்பு, கிரான் எனும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்பக்கல்வியைக் கிரான் மகாவித்தியாலயத்திலும் உயர்கல்வியை வந்தாறுமூலை மத்தியகல்லூரியிலும் பட்டப்படிப்பினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்துள்ளார். 1980 களில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டு இயங்கியவர். 1985களில் ஆயுத இயக்கங்களின் அராஜகப்போக்கு வெளிப்படத் தொடங்கியதனை அடுத்து, அதற்கெதிராகச் செயற்பட்டவர்.*

*அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளுக்கான அமைப்பொன்றின் களப்பணியாளராக இருந்து போர்க்கால மனித அழிவுகளைப் பதிவுசெய்யும் பணியில் ஈடுபட்டதுடன் மக்கள் விடுதலையை வலியுறுத்தி மக்கள் மத்தியிலான கலாசாரப்பணிகளிலும் முழுமையாக ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வந்தவர். பின்னர் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறி, மட்டக்களப்பில் மனித உரிமைகள் அமைப்பின் களப்பணியாளராகப் பணியாற்றியவேளையில் இந்திய இராணுவம் மற்றும் துணைக்குழுக்களின் நெருக்குதல்களினால் அங்கிருந்தும் வெளியேறி மலையகத்திற் பெருந்தோட்டப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். அண்மைக் காலமாகச் சமூக, அரசியல் சார்ந்து கட்டுரைகளை எழுதி வருகின்றார். பண்பாடு, வழிபாட்டுமுறைகள், தொன்மங்கள் போன்றவற்றில் ஆய்வுகள் மேற்கொண்டும் எழுதியும் வருகின்றார்.*

# மட்டக்களப்பு வரலாறு

## பூர்விக குடிகளும் குமாரதெய்வ வழிபாடும்

பண்பாட்டு வரலாற்றினடியாக ஓர் உசாவல்

எ. விஜயரெட்ணா (விஜய்)

எழுநா வெளியீடு

PRICE : 50 INR, 100 SLR, 6 USD, 4 EUR

மட்டக்களப்பு வரலாறு * ஆசிரியர் : எ. விஜயரெட்ண (விஜய்) * © ஆசிரியருக்கு * பக்கம்: 78 * முதல் பதிப்பு : ஏப்ரல் 2013 * வெளியீடு: எழுநா ஊடக நிறுவனம், No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom * தொலைபேசி : 0044 79 155 55 458 * மின்னஞ்சல் : info@ezhunamedia.org * அட்டை வடிவமைப்பு : சத்யன் * வடிவமைப்பு : எழுநா * அச்சாக்க ஒருங்கிணைப்பு : சுவடி, சென்னை– 5.

எழுநா ஊடக நிறுவன வெளியீடு : 8

maddakkaLappu varalAru * Author : E. Vijayaretna (Vijay) * © Author * Pages: 78 * First Editon: April 2013 * Published by Ezhuna Media Foundation, No:4, Kettering Road, Isham, Kettering, NN141HQ United Kingdom * Phone: 0044 79 155 55 458 * e-mail: info@ezhunamedia.org * Cover Design: Sathyan * Layout Design : Ezhuna * Printing Co-odination: Chuvadi, Chennai - 5.

Selling rights in India :

Discovery Book Palace (P)Ltd
No.6, Magavir Comlex, 1st Floor Munusamy Salai,
K K Nagar West, Chennai - 600078
Phone: 0091 44 65157525
Mail: discoverybookpalace@gmail.com

ISBN : 978-93-80244-97-6

அன்பு, அயரா உழைப்பு, பிறர் நலனுக்காக
வாழ்தல், புரிந்து கொள்ளல், தெளிவான
எண்ணங்கள் கொண்ட என் பாட்டி மரகதம்
அவர்களுக்கு

இந்நூலின் உரைப்பகுதி Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) உரிமத்தின் கீழ் வெளியாகிறது. அதனை விட உரிமை கூடிய விதத்தில் பயன்படுத்த விரும்புவோர் பதிப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம். இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் 2015 டிசம்பர் வரை முழுப் பதிப்புரிமைக்கு உட்படுகிறது. 2016 இல் இந்நூலின் தளக்கோலமும் வடிவமைப்பும் Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) உரிமத்திற்கு மாற்றம் பெறுவதோடு, திறந்த அணுக்கத்தில் வெளியாகும்.

The Text within this book is available under the Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported (CC BY-NC-SA 3.0) licence. If anyone wants to use the content of the book with less copyright restrictions, please contact the publisher. The design and layout of the book are under copyright upto December 2015. In 2016, layout and design will accommodate to Creative Commons Attribution-NonCommercial-NoDerivs 3.0 Unported (CC BY-NC-ND 3.0) and a digital copy of this book will be made available sans access restrictions.

For more information :
http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/
http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/

BY NC ND    BY NC SA

## குமார காவியம்

திருமருவு மதிய நயவதனமும்
இலங்க திடர் மேவு மார்விலா
வரணமதுமின்ன மருமேவுபரி
மளர்சுவந்தமும் மின்ன மணிமே
வுபாத நூல்புயமது குலுங்க
உருவேமுயானைமா
முகமதுகுலுங்க உலகேளு கலையின்
மகள் உடலதுகுலங்க உருவாகி
ஒருகோடும் இருசெவியும் இசையவளும்
குடை வயிறநார் பாதம் மனதில் மறவோமே

*0 0*

வில்லம்பு சொல்ல நற்க்கை அம்பின்
னுடனே வெடியம்பு துவள் ளீட்டி
இடிஅம்பு சமுஷம் அங்கலவாள் வருசை
அழகாய் அணிந்து வரும் அனுராசது
ரைஏ பில்லி ஒரு தம்பிரேதப்பசா
சை பிடித்தே நிலத்தில் அடித்தே
உருட்டி இல் உல எண்ணாமலே(?)
எங்கள்க்கு வரம் நல்கும் ஈசநார் தெ
ய்வத்தை நாளும் மறவோமே.

கிரான் குமார கோவில் சடங்கில் பாடப்படும் குமாரகாவியம் எனும் பாடற்தொகுதியில் இருந்து இரு பாடல்கள்.

## பதிப்புரை

**மே**ற்கத்தேய கல்விப்புலத்தில் வரலாற்றெழுதியல் என்னும் துறை யானது பலவித தளங்களில் தன்னை விருத்தி செய்துகொண்டுள்ளது. இதன் தாக்கம் கீழைத்தேய கல்விப் புலங்களிலும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டுகொண்டிருக்கின்றோம். முக்கியமாக, தமிழ்நாட்டில், கல்விப்புலத்தில் மட்டுமல்லாது சிற்றிதழ்ப்பரப்பிலும் இதன் தாக்கத்தை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இனத்துவ அடிப்படையிலான, சட்டகத்திலான வரலாற்றெழுதியலுக்கு மாற்றாக இதர வரலாற்றெழுதியல் அணுகுமுறைகள் தோற்றம் பெற்றன. இவற்றின் ஓர் அம்சமாக, பண்பாட்டு வரலாற்றெழுதியலைக் குறிப்பிடலாம்.

ஈழத்தைப் பொறுத்தவரை, வரலாற்றெழுதியலானது இனத்துவ அடிப்படையிலான அணுகுமுறைகளைத் தாண்டி அடுத்தகட்டத்திற்கு நகராத நிலமையையே இன்றும் காணலாம். இனத்துவ அடிப்படை யிலான முரண்பாடு தொடர்ச்சியாக முன்னிலையிலிருந்த காரணத்தால், ஈழத்துக்கல்விச்சூழலுங்கூட இனத்துவச்சட்டகத்தைத் தாண்டமுடியவில்லை. இனத்துவ அடிப்படையிலான பொதுமைப் படுத்தலுக்கு மாற்றீடான அணுகுமுறைகளின் அவசியத்தை உணர்ந்து கொள்ளமுடியாத நிலமையே இன்றுவரைக்கும் தொடர்கின்றது. பண்பாட்டு அடிப்படையிலான புலமைத்துவ மரபுக்கும் ஈழத்திற்கும் நீண்ட காலத்தொடர்பும் உறுதியான அத்திவாரங்களும் இருந்த போதிலும் அவை தொடரப்பட முடியாமல் போனது துரதிர்ஷ்ட வசமானது.

ஈழத்தமிழர் வரலாறு என்பதைக் கவனத்தில் கொண்டால், பெரும் பாலும் யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றையும் அதன் நீட்சியில் அமைந்த இனத்துவ வரலாற்றையும் கருதும் போக்கே காணப் படுகின்றது. பிற்காலங்களில் 'மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் 'மட்டக்களப்பு தமிழகம்' போன்ற பிரதிகளை முன்வைத்து மட்டக் களப்புப்பிரதேச வரலாறு அணுகப்பட்டு வந்தாலும், பண்பாட்டு

அடிப்படையிலான வரலாறு என்னும்போது பெரும்பாலும் யாழ்ப்பாணப் பண்பாட்டை அடியொற்றியதாகப் பொதுமைப்படுத்தி அணுகும் போக்கே இன்றுவரைக்கும் தொடர்கின்றது.

இவ்வகையில், விஜய் (எ) விஜயரத்தின அவர்கள் மட்டக்களப்பு சமூகத்தின் வழிபாட்டு முறைகளை அடிப்படையாகக் கொண்டு, இப்பிரதியை ஆக்க முனைந்துள்ளார். மட்டக்களப்பின் பூர்விக வழிபாட்டு முறைகளில் ஒன்றான குமார தெய்வவழிபாடு, மட்டக் களப்பு மக்களுக்குரிய தனித்துவ வழிபாட்டு முறையாகும். மட்டக் களப்பின் கிரான் பகுதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த விஜய் அவர்கள் தன்னுடைய சமூகத்தில் நீண்ட காலமாக நிலவி வந்து, தற்போது அருகிக் கொண்டிருக்கும் வழிபாட்டு முறையை தனது சக்திக்குட்பட்ட வகையில் ஆய்வு செய்து எழுத்தில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

பண்பாடு சார்ந்த அம்சங்களைக் கொண்ட வரலாற்றெழுதியல் முறைமை என்றபோதிலும், பெரும்பாலான தர்க்கங்களும் தகவல் மூலங்களும் கடந்தகால ஆவணங்களில் இருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக, தன்னுடைய அனுபவம் சார்ந்தும் களஆய்வு சார்ந்தும் பெற்றுக்கொண்ட தகவல் களை நேர்மையாக முன்வைத்துள்ளார். குமாரதெய்வ வழிபாட்டு முறைக்கும் கிழக்கு மாகாண வழிபாட்டு முறைக்கும் கிழக்கு மாகாணத்தை அண்டியுள்ள சிங்கள சமூகங்களுடைய பூர்விக வழிபாட்டு முறைக்குமுள்ள ஒற்றுமைகளையும் தன்னுடைய ஆய்விலே தயங்காமல் வெளிக்கொணர்கின்றார். இதிலிருந்து, இவர் பண்பாட்டுக் கூறுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு தன்னுடைய ஆய்வு முறையை வடிவமைத்துள்ளார் என உறுதியாகக் கூறமுடிகின்றது.

இதுவரை காலமும் இனத்துவ அடிப்படையிலான வரலாற் றெழுதியல் புலமைத்துவ மரபும் அதனூடாகக் கட்டமைக்கப்பட்டிருந்த சட்டகமும் இவ்வணுகுமுறையை, ஆரோக்கியமாக எதிர்கொண்டு முன்னகர்த்த வேண்டும். இந்நூலைப்போன்ற பண்பாட்டு வரலாற் றெழுதியல் முறைமைகளின் அறிமுகமானது, பிற வரலாற்றெழுதியல் முறைகளையும் ஊக்குவித்து வரவேற்கும் என்று கருதுகின்றோம். அதுமட்டுமல்லாது, பண்பாட்டு அம்சங்கள் சார்ந்த ஆய்வுகளுக்கான ஊக்கியாகவும் அமையும் என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியராகக் கடமையாற்றும் விஜய், ஆய்வை முழுநேரப்பணியாகக் கொண்டவர் அல்ல. தனது பல்கலைக்கழகக் காலத்தில் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டு செயற் பட்டவர்களுள் ஒருவர். பிற்காலத்தில், இயக்க அரசியலில் இருந்து விலகி மனித உரிமைச் செயற்பாட்டாளராகப் பணியாற்றியவர். அவருடைய ஆய்வு, தனது சமூகம் மீதான நேசத்துடனான தேடலிலிருந்தே வெளியாகின்றது. மட்டக்களப்பு மக்களின் தனித்துவமான பண்பாட்டுக் கூறுகளை அடிப்படையாகக் கொண்ட

இவருடைய ஆய்வுகள், இன்னுமின்னும் அதிகளவான தகவல் களுடனும் கள ஆய்வின் மூலமும் விருத்தியாகவேண்டும். பண்பாட்டு வரலாற்றெழுதியலின் ஆரம்ப முயற்சி என்ற வகையில் இப்பிரதியைப் பதிப்பிக்கின்றோம். இப்பிரதி உருவாக்கும் அசைவியக்கம் எதிர் காலத்தில் இவ்வாய்வு முறைமை விருத்தியாகவும் மேலும் பல புதிய ஆய்வாளர்கள் தோன்றவும் வழிசமைக்கும் என்றும் நம்புகின்றோம்.

**எழுநா**
**ஜனவரி 2013**

## என்னுரை

மட்டக்களப்பு வரலாறு தொடர்பான கட்டுரை ஒன்றினை எழுதி எனது வலைத்தளத்தில் வெளியிட்டிருந்தேன். அக்கட்டுரையினை வாசித்த நண்பர் யோகன் கண்ணமுத்து (அசோக் — பிரான்ஸ்) “இனியொரு” இணையத்தில் அதனை வெளிவரச்செய்தார். நண்பர் யோகன் கண்ணமுத்துவும், இனியொரு சபா நாவலனும் தந்த உற்சாகத்தினால் மட்டக்களப்பு வரலாறு தொடர்பாக தொடர்ந்தும் எழுதத் தொடங்கினேன். அஃது, ‘இனியொரு’வில் தொடராக வெளி வந்தது. இத்தொடரே ‘மட்டக்களப்பு வரலாறு’ என்னும் பெயரில் எழுநா ஊடக நிறுவன ஏற்பாட்டில் நூலுருவில் வெளிவருகிறது.

எனது கட்டுரைகள் இனியொருவில் வெளிவந்த காலத்தில், பின்னூட்டங்கள் வழியாக பல நண்பர்கள் வழங்கி வந்த உற்சாகமான வரவேற்பும், கருத்துப் பரிமாற்றங்களும் கட்டுரையைச் சிறப்புற எழுத உதவி புரிந்தன. எனது பாடசாலைக் கால நண்பரும், ‘மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்’ நூலாக்கக்குழுவில் இருந்தவருமான அஜந்தா ஞானமுத்து, கட்டுரைப்பொருள் குறித்து அதிக ஈடுபாடு கொண்டவர்களான அன்ரன் ஜோசாம்பி, சீவகன் பூபாலரெட்ணம் போன்றோர் எனது தொடர்புகளைத் தேடிப் பெற்றுக்கொண்டு, நேரடியாகத் தொடர்புகொண்டு கட்டுரைகள் சிறப்பாக அமைய ஆலோசனைகளையும், தேவையான தகவல் களையும் தந்து உதவியாக இருந்தனர்.

மட்டக்களப்பில் களப்பணிகளை மேற்கொண்டு விடயம் குறித்து தகவல்களைப் பெற வேண்டிய நிலையேற்பட்ட போது, அதற்கான எந்த அடிப்படை வசதிகளும் இல்லாதிருந்த நிலையில், எனது நீண்ட கால நண்பரான ரெட்ணம் கஜேந்திரகுமார் (கண்ணன்) அதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தந்தார். எனது சகோதரரும் அவருடைய துணைவியாரும் பல உதவிகளைச் செய்தனர்.

கட்டுரைப் பொருள் குறித்து, குறிப்பாக பூர்விக குடிகள் — வேடர்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டு முறைகள் குறித்து

மட்டக்களப்பில் தேடலை ஆரம்பித்து தடுமாறிய வேளையில், நண்பர்களான ஜீவராஜா, நல்லதம்பி, நந்தகுமார் ஆகியோர் மறைக்கப்பட்டும் ஒதுக்கப்பட்டும் இருந்த பல இடங்கள், சம்பவங்கள் பற்றி தகவல்களைத் தந்து அவற்றை அறிந்து கொள்ள வழிகாட்டினார்கள். நண்பர்களான சௌந்தரராஜன், குமார் பல்வேறு இடங்களுக்கும் என்னை அழைத்துச் சென்று தகவல்களைப் பெறுவதற்கு பேருதவி புரிந்தார்கள். குமார கோவில்களின் பணிகளுடன் தொடர்புபட்ட அன்பர்கள் பல தகவல்களைத் தந்து உதவினார்கள்.

எனது முயற்சி பற்றி அறிந்த சிதம்பரநாதன், பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் நூலை வாசிக்கத் தந்தமை தற்செயலான தொரு நிகழ்வாயிருந்தபோதும், அந்த நூலே எனக்கு ஒரு தற்றுணிவினையும் புதிய வழிகாட்டலையும் தந்தது. பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் கட்டுரைப்பொருள் குறித்து விரிவானதொரு விளக்கத்தினைத் தந்ததுடன், எனது கட்டுரைகள் வெளிவந்தபோது அவற்றை வாசித்துப் பாராட்டுக்களையும் தெரிவித்து வந்தார். எனது கட்டுரைகள் பெருமளவிற்கு மௌனகுரு அவர்களின் வழித்தடத்திற்றான் சென்றிருக்கிறன.

கட்டுரைகள் வெளிவந்த காலத்தில்தான் நான் எழுதுகின்ற விடயம், வரலாறு சார்ந்தும் பண்பாட்டியல் சார்ந்தும் சமூகவியல் சார்ந்தும் முக்கியமானதொன்று என்ற உணர்நிலை ஏற்படத் தொடங்கியது. அந்த உணர்நிலையைச் சபா.நாவலன், நூலகம் அமைப்பின் சசீவன் ஆகியோர் தொடர்ந்து நடாத்திய கலந்துரையாடல்கள் மூலம் ஏற்படுத்தினர்.

ஆரம்பத்தில், மட்டக்களப்பின் வரலாறு தொடர்பில் நிலவிய சர்ச்சைகள், மயக்கங்கள் குறித்து ஆர்வம் கொண்டிருந்ததனால், அவற்றை மையமாகக் கொண்டு எழுதும் நோக்கிலேயே எழுதத் தொடங்கினேன். ஆயினும் மேலே விபரிக்கப்பட்ட முறையிலமைந்த தொடர்புகள் என் நோக்கினை மாற்றியமைத்தன. அதனாற்றான் கட்டுரைகள் மட்டக்களப்பின் பூர்விகுடிகள் எனும் விடயத்திற்குள் வரையறைப்பட்டன. அதிலும், வரலாற்றை ஆராய்வதற்கப்பால் பண்பாட்டம்சங்கள் குறித்து ஆராய்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. எனவே, இந்தக் கட்டுரைகள் பலருடைய கூட்டு விருப்பினால், கூட்டு முயற்சியினால் அமைந்தவை என்றே கூறமுடியும்.

கட்டுரைகள் வெளிவந்த காலத்தில், பலரும் அதனை நூல் வடிவில் கொண்டு வரவேண்டும் என்ற விருப்பத்தினை வெளிப்படுத்தியிருந்தனர். அதற்கான முழு உதவிகளையும் புரிவதாகவும் கூறியிருந்தார்கள். சபா நாவலனும் சசீவனும் தொடர்ந்து கொடுத்து வந்த உத்வேகத்தினால், கட்டுரைகளை நூலுருவில் வெளியிடச் சம்மதித்தேன். ஆயினும் கட்டுரைகள் நூல்வடிவில் வெளிவருவதற்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டிருக்கவில்லை. 'இனியொரு'வில் கட்டுரை தொடர்பான பின்னூட்டங்கள், மற்றும் விமர்சனங்களைக் கருத்திற் கொண்டு, அவற்றிற்கான தெளிவைக் காணும்வகையில் பின்னர் வந்த

கட்டுரைகள் அமைக்கப்பட்டிருந்தன. முன்னைய கட்டுரைகளிற் பேசப்பட்ட விடயங்கள் குறித்தும் பின்னர் வந்த கட்டுரைகளில் பேசப்பட்டுள்ளது. பல கேள்விகளுக்கான விடைகள் முன்வைக்கப் பட்டிருந்தன. பல வினாக்கள் முன்வைக்கப்பட்டுமிருந்தன. எனவே, கட்டுரைகளை நூலுருவிற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கட்டுரைகளைத் திருத்தி மாற்றியமைத்த போது, அது வழமையான ஒரு வரலாற்றுநூல் அமைப்பில் அமைந்திருந்தது. எனவே, இனியொருவில் வெளிவந்த அமைப்பிலேயே, ஆனால், சில மாற்றங்களையும் திருத்தங்களையும் செய்து கட்டுரைகளை நூலுருவிற்கு ஏற்ற வகையில் அமைத்துள்ளேன்.

ஆயினும், இஃது ஒரு முழு நிறைவான முயற்சியாகப்படவில்லை. பல விடயங்கள் இன்னமும் வினாக்களாகவே உள்ளன. களஆய்வும் முழுமையானதொன்றல்ல. திருப்தியானது எனவும் கூறமுடியாது. பல புதிய தகவல்களைக் கொண்ட கட்டுரைகளும் பின்னர் வெளி வந்துள்ளன. இருப்பினும் இக்கட்டுரைகள் எழுநா ஊடாக வெளிவருகின்றன.

கட்டுரைகளை எழுதிய சந்தர்ப்பத்திலும், இந்த நூல் வெளிவரும் சந்தர்ப்பத்திலும் இருவரை நினைவுகூரவேண்டியுள்ளது. மட்டக்களப்பு வரலாறு தொடர்பில் எனக்கு ஆர்வத்தினை ஏற்படுத்தியவரும் தொடர்ந்து சந்தித்தவேளைகளில் மட்டக்களப்பு வரலாறு தொடர் பான கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்தவரும் என் முன்னாள் நண்பரும் பின்னாளில் கொள்கையிலும் நடைமுறையிலும் நேரெதிர் நிலையில் முரண்பட்டு நின்றவருமாகிய அமரர் டி.சிவராம் ஒருவர்.

மற்றவர், இலங்கையின் முதுபெரும் எழுத்தாளரும் கவிஞரும் முற்போக்கு இயக்கங்களின் முன்னோடியும் சர்வதேச ரீதியில் மக்கள் சார்பான எழுத்துலகிலும் இலக்கிய அமைப்புக்களிலும் தொடர்பு கொண்டவரும் மொழிபெயரப்பாளரும் வாழ்வை தனது கொள்கையின் அடிப்படையில் வாழ்ந்துமுடித்தவருமான கேகணேஷ் அவர்கள். எனது எழுத்துக்களின் பாணி அவருடைய செல்வாக்கிற்கு உட்பட்டது. எழுத்துக்கள் சாதாரண வாசகர்களும் விளங்கும் வண்ணம் எளிமை யாக இருக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி அவ்வாறு எழுதச் செய்தவர் அவர்தான். கண்டியில் 'அறிவியல் கழகம்' சார்ந்த வெளியீடு களுக்கு, எழுதியவற்றைப் பொறுமையாகவிருந்து திருத்தி எளிமையாக்கம் செய்துதந்து வழிகாட்டியவர் கே.கணேஷ் அவர்கள்.

கணனி தட்டச்சுபணி கடினமானதொன்றாக இருந்தது. கட்டுரை களை தட்டச்சு செய்வது, பிழை திருத்தம் செய்வது போன்றவை எனக்கு இலகுவாக இருக்கவில்லை. அதிக நேரத்தினைச் செலவிட வேண்டியுமிருந்தது. அகால வேளைகளிற் பணியாற்ற வேண்டியுமிருந்தது. அப்பணிகளில் எனது துணைவி சிவனேஸ்வரியும் மகள் தஷீகாவும் உதவியாக இருந்தனர் என்பது மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இக்கட்டுரைகளின் ஆக்கத்திற்கும் வெளியீட்டிற்கும் நூலுருவாக்கத்திற்கும் நூல் வெளியீட்டிற்கும் உதவியவர்களுக்கு இத்தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இந்நூல் கூறும் விடயம் எனது கிராமம் சார்ந்தது.

நான் பிறந்து, வளர்ந்த பண்பாட்டுச் சூழல் பற்றியே இந்நூல் விவரிக்கிறது. குமாரர் ஆலயச்சடங்கு இளமைக்காலம் முதல் எங்கள் வாழ்வின் ஒரு முக்கியமான அங்கம். இன்று அவற்றைப் புதிய பார்வையில் நோக்குவதற்கும், அவற்றை எழுதிப் பதிவு செய்வதற்கும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இது மனமகிழ்வுக்குரிய விடயமே.

கட்டுரைகளை எழுதும் போது, கட்டுரை ஒரு சமூகம் சார்ந்தது என்பதனை மனதில் நிலைநிறுத்திக் கொண்டு, தவறான கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் கூடுதலான கவனம் செலுத்தியிருந்தேன். அதனால், தனிப்பட்ட விமர்சனங்களை முன்வைக்கவில்லை. இருந்த போதிலும், மட்டக்களப்பின் பூர்விககுடிகள், வேடர்கள் என்ற கருத்து கட்டுரையில் முன்வைக்கப்பட்ட போது பல விமர்சனங்கள் தோன்றவே செய்தன. எனினும் வரலாற்று உண்மைகளை மறைத்து எழுதிவிடமுடியாது.

குமார தெய்வம் மற்றும் குமார சடங்குகள் குறித்து முக்கியப்படுத்துவதனைச் சிலர் முக்கியமானதாக கருதவில்லை; விரும்பவும் இல்லை. களப்பணிகளை ஆரம்பித்தபோது மட்டக்களப்பில் தற்போது குமார தெய்வவழிபாடு நடைபெறுவது இல்லை என்ற கருத்தே முன்வைக்கப்பட்டது. மாறாக, பிரதான சில கோவில்களுக்கும், அவற்றின் பழம்பெருமைக்கும், பெருந்தெய்வ வழிபாட்டிற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தே வலியுறுத்தப்பட்டுவருகிறது. கண்ணகி வழிபாட்டிற்கு வழங்கப்படுகிற முக்கியத்துவங்கூடக் குமார தெய்வச்சடங்கிற்கு வழங்கப்படுவதில்லை. பல இடங்களில் குமார தெய்வமும் சடங்கும் தற்போது அருகி வருவதனையே காண முடிகிறது. 'குமாரர்' ஒதுக்கப்பட்டு வருவதனைக் காணமுடிகிறது. புதிய தலைமுறையினர் இந்த வழிபாட்டுமுறைகள் குறித்து ஆர்வம் அற்று இருப்பதனையே காணமுடிகிறது.

ஆயினும் அந்த வழிபாட்டுமுறையை மட்டக்களப்பு சமூகம் இன்னமும் முற்றாகக் கைவிடவில்லை. மறந்துவிடவுமில்லை. கால மாற்றங்களை எதிர்த்து நின்று இன்னமும் தொடர்கிறது. அதனைப் பின்பற்றி வருகிறவர்கள் சமூகநிலையில் வலுவற்றவர்களாக இருப்பதனால் இத்தகைய பண்பாட்டம்சங்களின் எதிர் காலம் கேள்விக்குரியதே. கடவுள் குற்றம் தொடர்பாக நிலவி வருகிற நம்பிக்கைகள், யுத்தகால அழிவுகள் இத்தகைய வழிபாட்டுமுறையில் மக்களை ஈடுபட வைத்திருக்கிறது என்பது துயரத்திற்குரியதே.

மட்டக்களப்பு மக்களின் பிரதான பண்பாட்டம்சங்களாக இருந்த இத்தகைய கூறுகளே மட்டக்களப்பு மக்களைத் தனித்துவமான

தொரு சமூகமாக அடையாளப்படுத்தியிருந்தது. அந்தப் பண்பாட்டம்சங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகிவரும் காலத்தில், இந்நூல் காத்திரமானதொரு பதிவாகவும் புதிய போக்கொன்றின் தொடர்ச்சியாகவும் அமையும் என்றே கருதுகிறேன்.

மட்டக்களப்பு மக்களின் பண்பாட்டம்சங்கள் குறித்து ஒரு விழிப்புணர்வை இந்நூல் ஏற்படுத்துமானால் அதுவே இம்முயற்சியின் வெற்றியாக அமையும். அதுவே, இம்முயற்சியுடன் இணைந்து நின்றவர்களை மகிழ்வடையச் செய்யும்.

**எ.விஜயரெத்தின (விஜய்)**

# பொருளடக்கம்


**மட்டக்களப்புப் பிரதேசம்**

அறிமுகம் 21

**மட்டக்களப்பு வரலாறு**

வரலாற்று மூலங்களும் வரலாற்றின் பருமட்டான வரைபும் 23

மட்டக்களப்பின் பூர்விகக்குடிகள் 30

மட்டக்களப்பில் நிகழ்ந்த குடியேற்றங்கள் 31

**மட்டக்களப்பின் பூர்விகக்குடிகள்**

அறிமுகம் 34

**பூர்விகக்குடிகளின் குமாரதெய்வ வழிபாடு** 43

**இலங்கை வரலாற்று ஆவணங்கள் தரும் தகவல்கள்** 58

இலங்கையின் தொல்லியற்சான்றுகள் தரும் தகவல்கள் 58

இலங்கையின் வரலாற்று நூல்கள் தரும் தகவல்கள் 60

நான்கு புத்தர்களின் வருகை 62

பகவன் புத்தரின் வருகை 65


விஜயன் காலம் 66

பாண்டு அபயன் காலம் 72

துஷ்டகாமினி காலம் 73

பொலன்னறுவைக்காலம் 75

**உசாத்துணைகள்** 77



Administrative Boundaries
Batticaloa District
District Boundary
DS Division Boundary
Grama Niladari Division Boundary
DS Division Capital
District Capital
10 Kilometers
Trincomalee District
Polonnaruwa District
Koralaipattu North
Koralaipattu Central
Koralaipattu West
Koralaipattu South
Batticaloa
Ampara District
Monaragala District
Badulla District

## 1. மட்டக்களப்பு பிரதேசம்

### அறிமுகம்

**இ**லங்கையின் கிழக்குக் கரையோரத்தில் கிழக்கு மாகாணத்தின் மத்தியில் அமைந்துள்ள மட்டக்களப்புப் பிரதேசத்தின் எல்லைகள் காலத்திற்குக் காலம் மாற்றமுற்று வந்துள்ளன. பண்டைய மட்டக் களப்பானது வடக்கே வெருகலாற்றையும் கிழக்கே வங்காள விரிகுடா வினையும் மேற்கே ஊவா மலைத்தொடர் வெல்லஸ பிரிவினையும் தெற்கே மாணிக்க கங்கையினையும் கொண்ட ஒரு பரந்த நிலப் பிரதேசமாக விளங்கியதுடன் மட்டக்களப்பு தமிழகம் எனவும் அழைக்கப்பட்டது. கிழக்கே அமைந்துள்ள நீண்ட கடற்கரைப் பிரதேசங்கள் நெய்தல் நிலமாக கொள்ளப்படுகிறது. மேற்கில் அமைந் துள்ள பரந்த பிரதேசம் காடு, வயல், சிறு குன்றுகள் கொண்டமைந்திருப்பதனால் அவை முல்லை, மருதம், குறிஞ்சி நிலங்களாகக் கொள்ளப்படுகின்றன.

மட்டக்களப்பின் மத்தியில் நீண்டமைந்துள்ள மட்டக்களப்பு வாவி, மட்டக்களப்பு பிரதேசத்தினை எழுவான்கரை, படுவான்கரை என இரு பிரதான பெரும் பிரிவுகளாகப் பிரித்துள்ளது. வாவியின் கிழக்கே அமைந்துள்ள பிரதேசம் எழுவான்கரை. மேற்கே அமைந்துள்ள பிரதேசம் படுவான்கரை. மட்டக்களப்பு பற்றிய எழுத்திலும் பேச்சிலும் இவ்வழக்கு பொதுவாகப் பயன்பாட்டிலுள்ளது. பண்டைய மட்டக் களப்புத் தமிழகம் புவியியல் ரீதியில் ஏனைய பிரதேசங்களிலிருந்து தனிமைப்பட்ட பிரதேசமாக விளங்கியது. மேற்கே மலைத் தொடர்கள், மகாவலி கங்கை மற்றும் அதன் கிளையாறுகள், வடக்கே வெருகல் ஆறு, தெற்கே குமுக்கன் ஆறு, கிழக்கே வங்காள விரிகுடா என்பன அமைந்திருந்தமையால் இத்தனிமைப்பட்ட புவியியல் பண்பு ஏற்பட்டது. இதனால் வரலாறு, மொழி, பண்பாடு, சமூகக் கட்டமைப்பு என்பவற்றில் தனித்துமான தன்மைகள் ஏற்பட்டன. முக்கியமாக தனித்துவமான பண்பாட்டம்சங்களை இன்றும் காணமுடிகிறது.

மிக அண்மைக்காலம் வரை மட்டக்களப்பிற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான தரை வழித்தொடர்பும் விரித்தியடைந்

திருக்கவில்லை. 1872இல் வரையப்பட்ட இலங்கைத்தேசப்படத்தில் மட்டக்களப்பிலிருந்து கண்டிக்குச் செல்வதற்கான தரைவழிப் பாதை ஒன்று மட்டுமே காட்டப்பட்டிருந்தது. மட்டக்களப்பு வாவியினால் பிரிக்கப்பட்டிருந்த பிரதேசங்களுக்கான தரை வழித்தொடர்பும் ஐரோப்பியராட்சியின் பின்னர் பாலங்கள் மற்றும் வீதிகள் அமைக்கப் பட்ட பின்னரே வளர்ச்சியடைந்தது.

கி.பி.1832 இல் கோல்புறூக் ஆணைக்குழு இலங்கையின் மாகாண எல்லைகள் குறித்து வெளியிட்ட படத்தில், கிழக்கு மாகாணத்தின் மேற்கு எல்லையாக மகாவலி கங்கையின் கிழக்குப் பக்கக் கிளை ஆறு குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் பின்னர் மீளவரையப்பட்ட படத்தில் விந்தனைப் பகுதி ஊவா மாகாணத்துடன் இணைக்கப்பட்டது. பட்டிப்பளை (கல்லோயா) ஆற்றுச் சமவெளியின் ஒரு பகுதியும் மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில்(1948) மட்டக்களப்பு 6998 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் 202,987 சனத்தொகையையும் கொண்டதொரு பிரதேசமாக விளங்கியது. 1963ஆம் ஆண்டின் இலங்கை சனத்தொகை கணிப்பீட்டில் தெற்கே குமுக்கன் ஆறு மட்டக்களப்பின் எல்லையாக குறிக்கப்பட்டிருந்ததுடன், 951.6 சதுர ஸ்மைல் பரப்பளவினைக் கொண்டதொரு பிரதேசமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு தமிழகத்தின் தெற்கில் 1952இல் கல்லோயாக் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டதுடன் பெருமளவு சிங்கள மக்களும் குடியேற்றப்பட்டதுடன், அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. அதனால் தற்போது, தெற்கே அம்பாறை மாவட்டம் எல்லையாக உள்ளது. மேற்கே பொலன்னறுவை மாவட்டம் எல்லையாக உள்ளன.

தற்போது, மட்டக்களப்பு மாவட்டம் தெற்கிலும் தென்மேற்கிலும் அம்பாறை மாவட்டத்தையும், மேற்கிலும் வடமேற்கிலும் பொலன்னறுவை மாவட்டத்தையம் எல்லைகளாகக் கொண்டும், 2633.2 சதுரகிலோ மீற்றர் பரப்பளவையும் 393,413 மக்களையும்(2004) கொண்டதொரு பிரதேசமாகவும் குறிப்பிடப்படுகிறது. அண்மைய சனத்தொகைக் கணிப்பீட்டின்படி (2012) மட்டக்களப்பு மாவட்ட சனத்தொகை 525,142 ஆகும். இதில் தமிழர்கள் 381,285 ஆகும். இது மொத்த மவாட்ட சனத்தெகையில் 72.6 சதவீதமாகும். முஸ்லிம்கள் 133,844 ஆகும். இது 25.5 சதவீதமாகும். சிங்களவர் 6,127 பேர் வாழ்கின்றனர். இவர்களின் சதவீதம் 1.2 ஆகும். மட்டக்களப்பு கடல் மட்டத்திலிருந்து 7.62 மீற்றருக்கு மேற்படாத உயரத்தினைக் கொண்ட சமதரைப் பிரதேசமாகவும் விளங்குகிறது.

## 2. மட்டக்களப்பு வரலாறு

### வரலாற்று மூலங்களும் வரலாற்றின் பருமட்டான வரைபும்

மட்டக்களப்பு வரலாற்றை விபரிக்கும் நூல்கள் மற்றும் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. மட்டக்களப்பின் வரலாறு குறித்த முதனூலாக அமைவது S.O.கனகரெத்தினம் அவர்கள் 1923ஆம் ஆண்டில் எழுதிய 'The Monograph of Batticaloa District of the Eastern Province' என்ற நூலாகும். மட்டக்களப்பின் வரலாறு மற்றும் சாதியமைப்பு பற்றி விபரிக்கும் இந்நூல், நீண்டகாலமாக மட்டக்களப்பின் வரலாற்று ஆவணமாகப் பலராலும் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இதையடுத்து முக்கியம் பெறுவது, வித்துவான் F.X.C.நடராசா அவர்களால் 1962இல் வெளியிடப்பட்ட 'மட்டக்களப்பு மான்மியம்' ஆகும். இந்நூலும் மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை விபரிக்கும் நூலாக நீண்டகாலமாக விளங்கியது. அதுமட்டுமின்றி மட்டக்களப்புத் தமிழர்களுக்கு ஒரு தொன்மையான வரலாறு உண்டு என்ற பெருமித உணர்வையும் இந்நூல் ஏற்படுத்தியிருந்தது.

ஆனால், 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் நூல் தொடர்பாக பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. முதலில் இந்நூல் விபரிக்கும் வரலாற்றுத் தகவல்கள் முரணானவையாகவும், சிக்கலானவையாகவும் அமைந்திருப்பதனைப் பின்வந்த ஆய்வாளர் பலரும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இரண்டாவதாக, இந்நூலில் பிரித்தானியர் ஆட்சிக்காலம்பற்றிய விபரிப்புக்கள் இடம் பெறுவதனாலும், மைல் (Mile), லோ (Law) போன்ற சொற்கள் இடம்பெறுவதன் காரணமாகவும், 1915ஆம் ஆண்டில் அச்சுப்பதிப்பாக வெளிவந்த 'இலங்கைச் சரித்திரம்' எனும் நூலில் உள்ள விடயங்கள் இந்நூலிலே பயன்படுத்தப்பட்டுள்ளதாலும் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தின் பின்னரே இந்நூல் எழுதப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. மட்டக்களப்பின் தொன்மையான வரலாற்றை விபரிக்கும் நூலாகக் கருதப்பட்ட 'மட்டக்களப்பு மான்மியம்' மிகப்பிற்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என்பது அதிர்ச்சிக்குரிய செய்தியாகும்.

கலாநிதி க.தா.செல்வராசகோபால் அவர்கள், 'மட்டக்களப்பு மான்மியம்' செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளை என்பவரின் 'மட்டக்களப்பின் வரலாறு' எனும் ஓலைச்சுவடியினை அடிப்படையாகக் கொண்டது எனவும், அவ்வோலைச்சுவடி 1900இற்குப் பின்னரான காலத்திலேயே எழுதப்பட்டது எனவும் தக்க ஆதாரங்களுடன் கூறியிருக்கிறார்.

இவ்வாறு முரணான — சிக்கலான வரலாற்றைப் பதிவுசெய்தது மட்டுமன்றி, பிற்காலத்தில் மட்டக்களப்பின் வரலாற்றை எழுதுபவர்கள் திசை தடுமாறிச் செல்வதற்கும் F.X.C.நடராசா அவர்களின் 'மட்டக்களப்பு மான்மியம்' வழியேற்படுத்தியிருக்கிறது. பிற்கால ஆய்வாளர்கள் ஒன்றில் 'மட்டக்களப்பு மான்மியம்' கூறும் செய்திகளின் அடிப்படையில் தவறான ஒரு வரலாற்றையே விபரிக்க முனைந்திருக்கிறார்கள் அல்லது 'மட்டக்களப்பு மான்மியம்' கூறும் வரலாற்று முரண்களில் சிக்கித் திணறியிருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மான்மியத்தினை அடுத்துப் பல நூல்கள், கட்டுரைகள் வெளிவந்திருப்பினுங்கூட முக்கியமானதாகக் கூறப்பட்டது, 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகும். இந்நூல் 2005 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' எனும் வகையில் நான்கு ஓலைச்சுவடிகள் காணப்பட்டன. இந்நான்கு ஓலைச்சுவடிகளும் முரண்பட்டுக் காணப்பட்டன. இதனால், இவற்றை ஒப்புநோக்கி நேர்த்தியான, வரலாற்று ஆய்வாளர்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த பதிப்பொன்றைக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கில் வித்துவான் சா.இ.கமலநாதனும் அவரது துணைவியார் கமலா கமலநாதனும் 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' எனும் நூலைத் தயாரித்தனர். இந்நூலின் தயாரிப்புக்கு த.சிவராம் துணைபுரிந்திருந்ததுடன் நூலிற்கான வரலாற்று அறிமுகக்குறிப்பினையும் எழுதியிருந்தார்.

"இந்த 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' நூலும் செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளை என்பவரின் "மட்டக்களப்பின் வரலாறு" எனும் ஓலைச் சுவடியினை ஆதாரப்பிரதியாகக் கொண்டே அமைந்திருந்தது; அத்துடன், அவர்கள் ஒப்புநோக்கிய ஏனைய ஓலைச்சுவடிகளும் இ.வ.கணபதிப்பிள்ளை என்பவரினாலேயே எழுதப்பட்டது" எனும் விடயத்தினைக் கலாநிதி க.தா.செல்வராசகோபால் அவர்கள் வெளியிட்டிருக்கிறார். எனவே, 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் நூலின் மறுபிரதியாகவே இந்நூல் அமைந்திருக்கிறது. இவ்விருநூல்கள் குறித்து க.தா.செல்வராசகோபால் அவர்கள், "இதுவரை 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் பெயர் சூட்டப்பட்டு இருதடவைகள் மட்டக்களப்பு மக்களிடையே பிரபல்யமாகிய அதேநூல் இப்போது 'மட்டக்களப்பு பூர்வீக சரித்திர'மாகி மீண்டும் ஒரு தோற்றத்தைத் தந்துள்ளது. இவை மூன்றிலும் உள்ள விசயங்கள் ஒன்றே என்பதையும் இதற்கான மூலப்பிரதி செட்டிபாளையம் இ.வ.கணபதிப்பிள்ளை புலவர் பனை ஓலைச்சுவடியிலே படைத்த 'மட்டக்களப்பு வரலாறு' என்பதையும்

தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளேன்" எனக் குறிப்பிட்டிருப்பதுடன், "சரியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்வரை மட்டக்களப்பு மான்மியத்திலோ அல்லது மட்டக்களப்பு பூர்வீக சரித்திரத்திலோ சொல்லப்படும் தகவல்களை எடுத்தாள்வதைத் தவிர்க்கவேண்டும்." எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இம்மூன்று முயற்சிகளுக்கு அப்பால் 'மட்டக்களப்பு வரலாறு' குறித்து முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர் கலாநிதி க.தா.செல்வராசகோபால் (ஈழத்துப்பூராடனார்) ஆவார். கலாநிதி க.தா.செல்வராசகோபால் எழுதிய 'யாரிந்த வேடர்' எனும் கட்டுரை 1965இல் வெளிவந்திருந்தது. இவருடைய 'வதனமார் வழிபாடு ஓர் ஆய்வு', '1675இல் மட்டக்களப்பில் டச்சுக்காரரை எதிர்த்த இளஞ்சிங்கன் தென்மோடி நாடகம்', 'மீன்பாடும் தேன் நாடு', 'வசந்தன் கூத்து' ஆகிய நூல்களும் வெளி வந்துள்ளன. 'யாரிந்த வேடர்' நூலில் இலங்கைக்குரிய சொந்தக்காரர்கள் காடுகளில் மறைந்து வாழும் வேட்டுவக்குலத்தவரே என ஆதாரங் களுடன் எழுதியிருந்தமையால் நூலாசிரியர் நீதி விசாரணைக்கு உட்பட்டிருந்தார் என்பதுவும் நூலின் விற்பனை தடைசெய்யப் பட்டிருந்தது என்பதுவும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

கலாநிதி க.தா.செல்வராசகோபால் (ஈழத்துப்பூராடனார்) அவர்கள் எஸ்.பி. கனகசபாபதி (கல்கிதாசன்) துணையுடன் 2005இல் 'மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள்' எனும் நூலையும், 'மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள் பாகம் 2' எனும் நூலையும் வெளியிட்டிருக்கிறார். க.தா.செல்வராசகோபால் 'மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகிய நூல்கள் பற்றி நன்கு அறிந்திருந்தார். அந்நூல்கள் தொடர்பான பல தகவல்களையும் அவரே வெளியிட்டிருந்தார். எனவே, அவற்றின் செல்வாக்கிலிருந்து விடுபட்டு மட்டக்களப்பு வரலாற்றை ஆராயும் தன்மை அவரது நூலில் காணப்படுகிறது.

வித்துவானும் பண்டிதருமான வீ.சி.கந்தையா அவர்கள் எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' எனும் நூல் 1964இல் வெளிவந்தது. அந்நூலிலுள்ள 'அரசியலும் தமிழர் குடியேற்றமும்' எனும் பகுதி மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை விபரித்துச் செல்கிறது. அந்நூலும் 'மட்டக்களப்பு மான்மிய'த்தின் செல்வாக்கிற்கு உட்பட்டுப் பல தவறான வரலாற்றுத் தகவல்களை வெளியிட்டிருக்கிறது. ஆயினும், அந்நூலில் மட்டக்களப்பு சமூகம் குறித்து பல தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணலாம்.

'மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்' எனும் நூல் தொகுப்பில் (1980) F.X.C. நடராசா அவர்கள் எழுதிய இரு கட்டுரைகள் வெளிவந்துள்ளன. அவை 'மட்டக்களப்பு வரலாற்றுச்சுருக்கம்', 'மட்டக்களப்புத்தமிழ்மக்கள்' என்பனவாகும். 'மட்டக்களப்பு வரலாற்றுச்சுருக்கம்', 'மட்டக்களப்பு மான்மியத்தைத் தழுவியது.

வெல்லவூர்க்கோபால் அவர்கள் 2005இல் 'மட்டக்களப்பு வரலாறு — ஒரு அறிமுகம்' எனும் நூலை வெளியிட்டிருந்தார். பத்தாண்டு காலத் தொடர் முயற்சியினால், தமிழ் நாடு, புதுவை, கேரளா மற்றும் ஒரிசாவிலமைந்துள்ள ஆவணக்காப்பகங்களிலிருந்து கிடைத்த தகவல் களையும் மட்டக்களப்புப் பிரதேசக் களவாய்வுத் தகவல்களையும் பயன்படுத்தி எழுதப்பட்ட இந்நூல் புதிய பல தகவல்களை வெளிக் கொணர்கிறபோதும் 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் நூலை ஆதாரமாகக்கொண்டே எழுதப்பட்டிருக்கிறது. எனவேதான் பல இடங்களில் இந்நூலாசிரியரால் 'மட்டக்களப்பு மான்மியம்' கட்டமைத்த வரலாற்றுப் பொய்மையிலிருந்து விடுபடமுடியாமற் போய்விடுகிறது.

இவை தவிர, அருள் செல்வநாயகம் எழுதிய 'சீர்பாத குலவரலாறு' எனும் நூல் சீர்பாதகுலத்தவரின் வரலாற்றை விபரிக்கிறது. இதனைவிட எஸ்.டி.ராகவன் எழுதிய, 'முக்குவ வரலாறு', ஞா.சண்முகம் எழுதிய, 'மட்டக்களப்பு குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும்' ஆகிய நூல்கள் பற்றியும் க.தா.செல்வராசகோபால் அவர்கள் குறிப்பிட்டிருக் கிறார். அவர் இந்நூல்களிலும் 'மட்டக்களப்பு மான்மிய'த்தின் 'ஆதிக்கம்' நிறையவே இடம்பெற்றுள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தொல்லியல் ஆய்வைப் பல்கலைக்கழக மட்டத்தில் கற்ற தங்கேஸ்வரி அவர்கள் எழுதிய, 'மாகோன் வரலாறு' எனும் ஆய்வு நூலும் மற்றும் அவர் எழுதிய 'குளக்கோட்டன் தரிசனம்', 'முக்குவர் வரலாறு', 'மட்டக்களப்பு வரலாற்றுப்பின்னணி' முதலிய வரலாற்று நூல்களும் மட்டக்களப்பு வரலாற்றைச் சரியான வரலாற்றாய்வு முறையில் அணுகியிருக்கின்றன எனக் குறிப்பிடப்படுகின்றன. தங்கேஸ்வரி அவர்கள் எழுதிய 'மாகோன் வரலாறு' எனும் நூல் குறித்துக் குறிப்பிடும் க.தா.செல்வராசகோபால், "பல வரலாற்று நூல்களிலிருந்து திரட்டிய தகவல்களைக் கொண்டு ஆராயும் தொல்லியல் முறையில் வெளிவந்த பெருமைக்குரியது 'மாகோன் வரலாறு'" எனக் குறிப்பிடுகிறார்.

த.சிவராம், 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' எனும் நூலிற்கு எழுதிய வரலாற்று அறிமுகக்குறிப்பில், 1960களில் வெளிநாட்டவர்களால் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் — கட்டுரைகள் பற்றிய குறிப்புக் களைத் தந்திருக்கிறார். அவற்றில், 1960களின் பிற்பகுதியில் மட்டக் களப்பில் களப்பணி செய்த அமெரிக்க மானிடவியலாளரான பேராசிரியர் டெனிஸ் பி.மக்கில்வ்ரே (மக்ஜில்வ்ரே) எழுதிய 'முக்குவ வன்னிமைகள்' மற்றும் 'மட்டக்களப்பின் தாய்வழிக்குடிமை முறை' பற்றிய நூல், கட்டுரைகள், மற்றும் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

க.சண்முகலிங்கம் அவர்களின் 'இலங்கையின் இனவரையியலும் மானிடவியலும்' (2011) எனும் நூலின் 'மட்டக்களப்பில் சாதி' எனும் அத்தியாயம், டெனிஸ் பி.மக்ஜில்வ்ரேயின் 'முக்குவர்: இலங்கையின்

மட்டக்களப்பில் தமிழர் சாதியும் தாய்க்குடிக்கருத்தியலும்' எனும் நீண்ட கட்டுரையின் (63 பக்கங்கள்) சுருக்கமான விபரிப்பாக அமைந்திருக்கிறது. மக்ஜில்வ்ரேயின் 'மோதலின் உலைக்களம்' எனும் நூல் மட்டக்களப்பு ஆய்வு தொடர்பானது. இந்நூலிலுள்ள விடயங்களை 'இலங்கையின் கிழக்குக்கரையோரத்தின் தமிழர்களும், முஸ்லிம்களும்' எனும் அத்தியாயத்தில் அறிமுகம் செய்கிறார் க.சண்முகலிங்கம். மற்றும், மக்ஜில்வ்ரேயின் இந்நூலை மிகச்சிறந்த ஒரு நூலாகவும் க.சண்முகலிங்கம் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் இவை மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை ஆராயும் நூல்களல்லாமல் மானிடவியல் சார்ந்த ஆய்வுகளாகும். மட்டக்களப்பின் குறித்த காலப்பகுதிக்குரிய சமூகவமைப்பை, முக்கியமாக, சாதியை மையமாகக் கொண்ட ஆய்வுகளாகும்.

இவை தவிர அமெரிக்கரான மார்க் விட்டர், மண்டூர் கோயிலை மையமாக வைத்து மேற்கொண்ட ஆய்வு, இலங்கையிலிருந்து பிரான்சிஸ்கன் பாதிரிமார் எழுதிய கடிதங்களில் உள்ள 1539 இலிருந்து 1542 வரையில் பிதா சைமாவே கொய்ம்ப்ரா அவர்களால் எழுதப்பட்ட கடிதங்கள், டிக்கிரி அபயசிங்க மொழிபெயர்த்து வெளியிட்ட போத்துக்கீஸ் ரெஜிமென்டோஸ், மட்டக்களப்பு — திருகோணமலை மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவிருந்த ஒல்லாந்த அதிகாரி பீட்டர் டீ கிறாவ் என்பவருடைய 8.4.1676 திகதியிடப்பட்ட ஆண்டறிக்கை, ஜோஹான்ஸ் பிராங் எனும் மட்டக்களப்புக்குப் பொறுப்பான அதிகாரியின் சுற்றுப்பயணக் குறிப்பு (1767), ஒல்லாந்தர்கள் வெளியிட்ட பிரகடனம் (1789 — இது தமிழிலும் மட்டக்களப்பில் ஒட்டப்பட்டது), ஜேகப் பேணான்ட் என்பவரின் அறிக்கை (1794) போன்றவை த.சிவராமால் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை பற்றிய ஆய்வுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

டெனிஸ் பி.மக்ஜில்வ்ரே தனது கட்டுரையில், "மட்டக்களப்பு பற்றிய மானிடவியற்குறிப்புக்களைத் தந்தவர் இயல்மன்" எனவும் "அவரது "Under the Bo Tree" (1967) எனும் நூலின் அத்தியாயங்கள் 14—15 இல் இக்குறிப்புக்கள் உள்ளன" எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

காலத்திற்குக்காலம் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்திருக்கிறபோதும் மட்டக்களப்பு வரலாறு பற்றிய தெளிவு இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. மேலாக 'மட்டக்களப்பு மான்மியம்' ஏற்படுத்திய தவறான செல்வாக்கு மட்டக்களப்பு வரலாற்றைக் கண்டறிவதிலே பெரும் தடையாகவே இருந்து வருகிறது. மட்டக்களப்பு வரலாற்றை எழுதும் இப்பல்வேறு முயற்சிகளின் பயனாக, மட்டக்களப்பிற்கு ஒரு தொன்மை வரலாறு உண்டு என்ற நிலைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது முக்கியமான விடயமாகும்.

மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை விபரிக்கும் 'மட்டக்களப்பு மான்மியமும்', 'மட்டக்களப்பு பூர்வ சரித்திர'மும் வரலாற்று நூல்களாக கருதப்படுவதில் உள்ள சிக்கல்களை ஏற்கெனவே பார்த்தோம்.

இந்நிலையில் 'மட்டக்களப்பின் வரலாற்றைக் கூறும் தொன்மையான எழுத்து ஆவணங்கள் எவை? மட்டக்களப்பு வரலாற்றை அறிவதற்கான வேறு வரலாற்று மூலதாரங்கள் எவை? அம்மூலாதாரங்கள் கிடைத்தும் ஆராயப்பட்டும் உள்ளனவா? இருக்கின்ற வரலாற்று மூலாதாரங் களைக் கொண்டு மட்டக்களப்பின் வரலாற்றைப் பருமட்டான வகையிலாவது எவ்வாறு எழுதுவது?' போன்ற வினாக்கள் முன்னெழு கின்றன. எனவே, ஏனைய வரலாற்று மூலங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.

வரலாற்றை அறிவதற்கான மூலாதாரங்களில் ஒருவகையானது, தொல்பொருட்கள், கல்வெட்டுக்கள் — செப்பேடுகள், நாட்டாரியல் வழக்காறுகள் (வாய்மொழி வரலாற்று மூலங்கள் — நாட்டார் பாடல்கள் — மரபுவழி அம்சங்கள்) என்பவை உள்ளடங்கியதாகும். இவற்றினால், கிடைக்கப்பெறும் வரலாற்றுத் தகவல் பெருமளவுக்கு ஊகங்களாகவே அமையும் என்பதுடன், இவற்றினால் அறியப்படும் தகவல் கொண்ட காலப்பகுதி வரலாற்றுக்கு முற்பட்ட காலப்பகுதி என்றே குறிப்பிடப்படும்.

மற்றொரு வகை வரலாற்று மூலதாரங்கள், எழுதப்பட்ட இலக்கியங்களும் வரலாற்று நூல்களும் குறிப்புக்களும் ஆகும். இவற்றால் அறியப்படும் தகவல் கொண்ட காலப்பகுதி வரலாற்றுக்காலம் என அழைக்கப்படும். எழுதப்பட்ட வரலாற்று நூல்களில் குறிப்பிடப்படும் தகவல், உண்மையான வரலாற்றுத் தகவலாகக் கருதப்படும் போதுங்கூட சரிதிட்டமான வரலாற்றுத்தகவலாகக் கருதமுடியாது. இலங்கையின் பண்டைய வரலாற்றைக் கூறும் வரலாற்றுநூல்கள் குறித்து முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனங்கள் (உ—ம்: வில்கம் கெய்கர்) இதனை நன்கு நிரூபணம் செய்கின்றன. எனவே, வரலாற்று நூல் களிலிருந்து உண்மையானதும் சரிதிட்டமானதுமான வரலாற்றை வேறு ஆதாரங்கள் துணையுடன்தான் அறிந்து கொள்ள முடியும்.

ஈழத்தில் எழுந்த முதலாவது தமிழிலக்கியமாக அமைவது 'சரசோதிமாலை' ஆகும். இது கி.பி. 1232இல் எழுதப்பட்ட ஒரு சோதிட நூலாகும். இந்நூல் தம்பதெனிய அரசன் நாலாம் பராக்கிரமபாகு ஆணைப்படி, தேனுவரப் பெருமாள் என்ற பண்டித போசராசன் என்பவரால் எழுதப்பட்டு, அம்மன்னன் அவையில் அரங்கேற்றப் பட்டது. இதன் பின்னர் எழுந்த தக்சண கைலாசபுராணம், வையா பாடல், கோணேசர் கல்வெட்டு ஆகிய மூன்றுமே ஈழத்துத் தமிழ் வரலாற்றுநூல்களாகும். இம்மூன்றிலும் மட்டக்களப்பு வரலாறுபற்றி விபரங்கள் இல்லை. ஆக, 'மட்டக்களப்பு மான்மியம்', 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' என்பவற்றைத் தவிர்த்தால், மட்டக்களப்பு வரலாற்றுநூல் எனக் குறிப்பிடத்தக்க பண்டைத் தமிழ்நூல் எதுவுமில்லை. எனவே, ஐரோப்பியர்கள் எழுதிய வேற்று மொழியிலமைந்த குறிப்புகள்தாம் முதல் எழுதப்பட்ட வரலாற்று ஆவணங்களாகக் கொள்ளவேண்டியனபோலத் தெரிகிறது.

இந்த நிலையில், தொல்பொருட்கள், இலங்கைச்சரித்திரநூல்கள் மற்றும் பிறநாட்டார் குறிப்புக்கள், நாட்டாரியல் அம்சங்களிலிருந்தே மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை அறிய வேண்டியிருக்கிறது.

மட்டக்களப்பின் தொன்மையான வரலாற்றுத்தகவலாக அமைவது, தொல்பொருள் சான்றாக அமையும் கதிரவெளிப்பகுதியிற் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஈமத்தாழிகள் ஆகும். ஆனால், இதுபற்றிப் போதிய தகவல் வெளிப்படுத்தப்படவில்லை.

தொல்பொருட்சான்றாதாரங்கள் அதிகம் அறியப்படாநிலையில், அவற்றைக் கண்டறிவதற்கான முயற்சிகள் இல்லாத நிலையில் ஏனைய வரலாற்று மூலங்களிலிருந்து மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை, அதுவும் ஊகித்து அறிந்து கொள்ளவேண்டும்போலத் தெரிகிறது. அவ்வகையில் முக்கியம் பெறுவது நாட்டாரியல் அம்சங்கள் (வாய்மொழி வரலாற்று மூலங்கள் — நாட்டார் பாடல்கள் — மரபுவழி அம்சங்கள்) ஆகும். "முன்னூறு வருட ஐரோப்பியர் ஆதிக்கத்தின் தாக்கத்தால் மட்டக்களப்புச் சிற்றரசுகள் மறைந்து விட்டன. இருந்தபோதுங்கூட இன்று கோவில்களிலே படிக்கப்படும் கோவில் வரலாறுகள் அவர்களின் வீரமரபையும் நாடு கைப்பற்றி ஆண்ட வரலாற்றையும் சந்தேகத்திற்கிடமின்றி நிருபிக்கின்றன" என டெனிஸ் பி.மக்ஜில்வ்ரே குறிப்பிட்டுள்ளதனைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இவ்விடத்து ஒரு விடயத்தினைச் சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது. மட்டக்களப்பின் தற்காலவழக்கிலுள்ள தெய்வ—வணக்கமுறைகள், மொழி மற்றும் பண்பாட்டம்சங்கள் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வடபகுதி தமிழர்களிடமிருந்தும் சிலவேளைகளிலே தற்காலத்தமிழ்நாட்டவர்களிடமிருந்தும் வேறுபட்டுத் தனித்துவ மானதாகக் காணப்படுவது பல்வேறு ஆய்வாளர்களின் கவனத்தினை ஈர்த்திருக்கிறது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது.

பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' *(1964)* எனும் நூலிலும் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் எழுதிய 'மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்' எனும் ஆய்வுநூலிலும் இவை பற்றிய விபரிப்பைக் காணமுடிகிறது. மட்டக்களப்பில் தற்போதும் வழக்கிலுள்ள தனித்துவமான மொழி, பண்பாட்டம்சங்கள் காரணமாகவே மட்டக்களப்பை, பண்டைத்தமிழகத்தின் ஒருபகுதியாக இருந்து பின்னர் கடற்கோள் போன்ற காரணங்களாற் பிரிந்த ஒரு பகுதியாகச் சிலரால் கருதப்படும் போக்கு காணப்படுகிறது. ஆயினும் இதற்கான சான்றுகள் போதியளவில் காட்டப்படவில்லை.

மட்டக்களப்பு வரலாற்றின் தொன்மையை இராவணனுடன் தொடர்புபடுத்திச் சிலர் குறிப்பிட முயல்கிறார்கள். அதற்கு, முதலில் இராமாயணம் பற்றிய சரிதிட்டமான ஆய்வுகள் அதாவது, அதன் வரலாற்றின் உண்மைத்தன்மை நிருபிக்கப்படவேண்டும்.

இவற்றைத் தவிர்த்தால், கலாநிதி சி.மௌனகுரு அவர்களின்

"மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" எனும் ஆய்வுநூல் முக்கியமான தொன்றாக அமையலாம் எனக் கருதவேண்டியுள்ளது. இம்முக்கியத்துவம் மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் குறித்து அவருடைய எழுத்தினால் மட்டுமன்றி, மட்டக்களப்பு வரலாறு குறித்து அவர் எழுதிய சுருக்கக்குறிப்பினாலும் வந்ததாகும். தற்போதைக்கு, கலாநிதி சி.மௌனகுரு அவர்களின் சுருக்கமான வரலாற்றுக் குறிப்பிலிருந்து மட்டக்களப்பின் வரலாற்றை ஆரம்பித்துச் செல்வதே வசதியாகவிருக்கும் போலத் தெரிகிறது.

கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" எனும் தனது ஆய்வு நூலில், மட்டக்களப்பு வரலாறு பற்றி, மேலே குறிப்பிட்ட சுருக்கமான வரலாற்றிலிருந்தும், கிடைக்கும் சான்றுகளிலிருந்தும் மட்டக்களப்பில் ஆரம்பத்தில் பூர்விகக்குடிகள் இருந்தனரென்றும், காலத்துக்குக் காலம் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மட்டக்களப்பின் பல பாகங்களிலும் பல குடியேற்றங்கள் நடைபெற்றன என்றும் இந்திய அரசர்களின் (குறிப்பாக, சோழ, கலிங்க) ஆட்சிக்கும் சிங்கள அரசர்களின் ஆட்சிக்கும் இப்பிரதேசம் உட்பட்டிருந்ததென்றும், பின்னால், ஐரோப்பியர் வருகையின் பின் புதிய மதங்களையும் கலாசாரங்களையும் பெற்றதோடு பிற பிரதேசங்களுடன் நிர்வாகரீதியாக இஃது இணைக்கப்பட்ட தென்றும் கூறுவதை அறிகிறோம்.

இவ்வரலாற்றுப் போக்கிற்கூடாகவே மட்டக்களப்பில் இன்று காணப்படும் சமூக அமைப்பு உருவாகியது. காலத்துக்குக் காலம் தத்தமக்குரிய இனங்களும் குடிகளும் தாம் குடியேறிய பகுதிகளில் தத்தமக்குரிய தனித்துவங்களுடன் வாழ்ந்தாலும் பொது ஆட்சியின்கீழ் வரும்பொழுது சில பொது விதிகளுக்கு உட்பட வேண்டியிருந்தது. இச்சமூக அமைப்பின் பிரதான அம்சம் சாதி அமைப்பு முறையாகும் (மௌனகுரு, பக். 86) எனக்குறிப்பிட்டுள்ளார்.

இவ்விளக்கம் மட்டக்களப்பின் சிக்கலான வரலாற்றை எளிமையான முறையிற் புரியவைக்கிறது. அவ்வகையில் மட்டக் களப்பின் பண்டைய வரலாற்றை, 1. மட்டக்களப்பின் பூர்விகக் குடிகள், 2. மட்டக்களப்பில் நிகழ்ந்த குடியேற்றங்கள் என்ற அடிப்படையில் அறிய முயற்சிக்கலாம் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

### மட்டக்களப்பின் பூர்விகக்குடிகள்

மட்டக்களப்பின் பூர்விகக்குடிகள் என, வேடர், புலிந்தர், இயக்கர் ஆகிய சாதியினராக இருக்கலாம் எனவும் அவர்களின் வழியில் இன்று வேடர், வேட வெள்ளாளர் ஆகிய சாதியினர் வாழ்வதாகவும் சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (பக்.100). இவர்களில் புலிந்தர் மட்டக்களப்பு பூர்வீகக் குடிகளாகக் கருதப்பட போதிய சான்றுகள் இல்லை. இயக்கரையும் வேடரையும் வேறுபடுத்தி அறியக்கூடுமா எனத்

தெரியவில்லை. எனவே மட்டக்களப்பில் இன்று வாழும் வேடர், வேட வெள்ளாளர் (இவர்கள் வேடர்கள் — வெள்ளாளர் கலப்பினால் உருவானதாகக் குறிப்பிடுவர்) ஆகியோரே மட்டக்களப்பின் பூர்விக குடிகளாகக் கருதப்படவேண்டியவர்களாவர்.

மட்டக்களப்பின் பூர்விகக்குடிகளின் தெய்வ, வணக்க முறைகளாக குமார தெய்வத்தினை முதன்மையாகக் கொண்ட சில தெய்வ—வணக்கமுறைகளைச் சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (பக்.100). குமார தெய்வவணக்கம் வேடர்மரபில் வந்தோரால் மேற்கொள்ளப்படுகிறது எனவும் வேடபாசையிலே வணக்கமுறைக்குரிய சொற்களும் பாடல்களும் அமைந்துள்ளன எனவும் இவர்களின் சடங்குகள், இவர்களின் புராதன வாழ்க்கைமுறையின் நினைவுகளாக இருப்பதாகவும் சி.மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகிறார்கள் (பக்.118).

இவ்வணக்கமுறை தளவாய், பாலமீன்மடு ஆகிய ஊர்களில் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். ஆனால், தற்போது வேடர் வாழும் ஊர்கள் இவையல்ல. எனவே, இவ்வூர்களில் உள்ள தெய்வ—வணக்க முறைகளை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதுவும் தற்போது வேடுவர்கள் மத்தியில் காணப்படும் நாட்டாரியல் வழக்காறுகள் வேறு எவையேனும் உண்டா என்பதுவும் ஆராயப்படவேண்டும்.

### மட்டக்களப்பில் நிகழ்ந்த குடியேற்றங்கள்

இக்குடியேற்றங்கள் பற்றிய தகவல்கள் சிக்கலானவையாக, சரியான ஆதாரங்களுடன் விவரிக்கப்படாததாகக் காணக்கிடக்கின்றன. தோற்றுவிக்கப்பட்ட சிக்கல்களிலிருந்து விடுபடுவது முதல் பணியாகும்.

மட்டக்களப்பில் குடியேற்றங்கள் இருவழிகளில் நிகழ்ந்திருக்க முடியும். ஒன்று, கடல்வழியில்; மற்றது, இலங்கையின் ஏனைய பகுதி களிலிருந்து தரைவழியாக.

தரைவழியான குடியேற்றங்கள் தொடர்பான தகவல்களை நாம் இலங்கை வரலாற்று நூல்களிலிருந்து அறியவேண்டும். சிங்களவரலாற்று நூல்களிலிருந்து அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆட்சிக்காலப்பகுதிகளிலிருந்த தமிழ்மன்னர்களும் தமிழ்மக்களும் மட்டக்களப்புப்பிரதேசத்திற்குக் குடிபெயர்ந்திருக்கிறார்களா என்பதை அறியவேண்டும். அதுபற்றிய தகவல் கிடைப்பின், அதனை மட்டக் களப்பு வரலாற்றுநூல்கள் கூறும் தகவல்களுடன் ஒப்பிட்டு ஆராய முடியும். இதற்கான சாத்தியப்பாடு நிலவியிருந்திருக்கலாமென்றே கருதவேண்டியுள்ளது.

சிங்கள இராசதானிகள் வளர்ச்சியடைந்தபோது (சிங்கள—பௌத்த ஆதிக்கம் ஏற்பட்ட வேளை) அங்கு வாழ்ந்த தமிழ்மக்கள் தமது பண்பாட்டம்சங்களுடன் தனித்து வாழ்வதற்கு ஏற்ற இடங்களாக, இச்சிங்கள இராசதானிகளிற்குத் தொலைவிலும் அவற்றின்

கட்டுப்பாட்டெல்லைக்கு அப்பாலுமிருந்த யாழ்ப்பாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தெரிவுசெய்து குடியேறியிருக்கமுடியும். இதே காரணத்தினாற்றான், விஜயன் காலத்திலும் இயக்கர்கள் வாழ்வதற் கேற்ற இடமாக கிழக்கு மாகாணம் அமைந்திருக்கமுடியும். தற்போதைய வேடர்களின் பிரதான வாழிடமான மகியங்கனை கிழக்கு மாகாண எல்லையில் அமைந்திருப்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. அத்துடன், "ஒப்பீட்டளவில் இது தனிமைப்படுத்தப்பட்ட பிராந்தியமுமாகும். இத்தனிமைப்படுத்தலுக்குப் புவியியல், வரலாற்றுக்காரணங்கள் உள்ளன" என டெனிஸ் பி.மக்ஜில்வ்ரே குறிப்பிட்டுள்ளதனையும் கவனத்திற் கொள்ளவேண்டும்.

தரை வழிக்குடியேற்றங்கள் எனும் வகையில், சிங்கள இரசாதானி களிற்கு வந்த தமிழ்மக்களுடன் தொடர்புபடுத்தி, மதுரை இளவரசி, அவளுடன் வந்தவர்கள், சேனன், குத்திகன், எல்லாளன் காலத்து குடியேற்றங்கள், கஜபாகுவினால் குடியேற்றப்பட்டோர், சோழ படையெடுப்புடன் தொடர்பான குடியேற்றங்கள், கலிங்க மகான் தொடர்பான குடியேற்றங்கள், சிங்கள மன்னர்களுடன் தொடர்புடைய தமிழ் குடியேற்றங்கள், கதிர்காமம் வழியாக ஏற்பட்டிருக்கக்கூடிய குடியேற்றங்கள் போன்றவை குறித்த தகவல்களை ஆராய முயலலாம்.

கடல்வழியான குடியிருப்புகள் குறித்து மட்டக்களப்பு வரலாற்று நூல்கள், மற்றும் நாட்டாரியல் வழக்காறுகள் ஆதாரங்களாக அமைய முடியும். 'மட்டக்களப்பு மான்மியம்', 'மட்டக்களப்பு பூர்வசரித்திரம்' போன்றவற்றிலுள்ள இலங்கை மன்னர் சாராத ஏனைய தலைவர்களின் குடிகளின் விபரங்களை பரிசீலிப்பதூடாக இதனை மேற்கொள்ள முடியும்.

மட்டக்களப்பில் பூர்விகமாக வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படும் மக்கள் மட்டக்களப்பின் படுவான்கரைப்பிரதேசத்தில் வாழ்ந்திருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது. தரைவழிக் குடியேற்றங்களும் படுவான் கரைப்பிரதேசத்திலே நிகழ்ந்திருக்கலாம். கடல்வழிக்குடியேற்றங்கள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் நிகழ்ந்திருக்கலாம். இதிலுள்ள சிக்கல் பூர்விகக் குடிகளுக்கும் குடியேற்றக் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த கலப்புக்கள், குடியேற்றக் குழுக்களுக்கிடையே நிகழ்ந்த கலப்புக்கள் பற்றியதாகும். மற்றொரு சிக்கல் குடியேற்றங்கள் பரவிய முறையாகும்.

ஐரோப்பியர் காலத்திற்குரிய வரலாற்றுத் தகவலை ஏனைய மட்டக்களப்பு வரலாற்றுமூலங்களிலிருந்து (ஐரோப்பியர் குறிப்புகள்) பெறலாம். இவ்வாறு, மட்டக்களப்பிற்கான தொடர்ச்சியான ஒரு வரலாற்றை நாம் கண்டறிந்து கொள்ள முடியும்.

இலங்கை வரலாற்று நூல்கள் கூறும் தகவல் தொடர்பாகவும் விமர்சனங்கள் இருப்பதனால் எச்.டபிள்யு.கொடிறின்டன் மற்றும் ஜி.சி.மென்டிஸ் ஆகியோரின் இலங்கை வரலாற்று நூல்களிலிருந்து தகவலைப் பெறுவது பொருத்தமானதாக அமையலாம். இவ்வரலாற்றுத்

தகவலுடன் தொல்பொருட்சான்றுகள் பெறப்படின், ஓரளவு சரிதிட்டமாக வரையறுத்துக் கூறிவிடலாம். போதியளவு தொல் பொருள் ஆவணங்கள் (படுவான்கரைப்பிரதேசத்தில்) இருப்பதாகக் கருதப்படுகிறது. அவை கண்டறியப்பட வேண்டும்.

இவற்றிலிருந்து நாம் ஆராயவேண்டிய மட்டக்களப்பு வரலாறு தொடர்பான விடயங்களின் பருமட்டான ஒரு வரைபு உருவாக்கினால்,

1. மிகப் பழமையான காலம்

   கதிரவெளிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஈமத்தாழிகள்

2. மட்டக்களப்பின் பூர்விகக் குடிகள்

3. குடியேற்றங்கள்.

   கடல் வழியாக நிகழ்ந்திருக்கக் கூடிய குடியேற்றங்கள்.

   தரைவழியாக நடந்த குடியேற்றங்கள்

4. ஐரோப்பியர் காலம்

5. தற்காலம்

என அமையும்.

இவை குறித்துத் தனித்தனியாக ஆய்வதினூடாக நாம் ஓரளவு மட்டக்களப்பின் வரலாற்றைக் கண்டறிய முடியும்.

ஐரோப்பியர் இலங்கைக்கு வந்தபோது மட்டக்களப்பு, தனித்துமான சமூக, பண்பாட்டம்சங்களைக் கொண்ட தமிழர்கள் வாழும் ஒரு பிரதேசமாக இருந்திருக்கிறது என்பதனை ஐரோப்பியர்களின் குறிப்புக்களால் அறிய முடிகிறது. கோவில்களில் படிக்கப்படும் கோவில் வரலாறுகள், ஐரோப்பியர் வருவதற்கு முன்னர் சிற்றரசுகள் நிலவியிருந்ததை உறுதிசெய்கின்றன. இலங்கை வரலாற்று நூல்கள் பண்டையகாலத்தில் மட்டக்களப்பில் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளைத் தருகின்றன. கிடைத்துள்ள தொல்பொருள் சான்றுகள் மிகப்பண்டைக்காலத்தில் இங்கே மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. அதற்கு மேலாக, தற்காலத்திலும் தனித்துவமான மொழி, பண்பாட்டம்சங்கள், தெய்வவழிபாட்டுமுறைகள் மட்டக்களப்பில் நிலவியும் வருகின்றன. எனவே, இந்த ஆய்வு தனித்துவமானதொரு வரலாற்றையும் பண்பாட்டம்சங்களையும் ஆழநோக்குவதாக அமைகிறது.

# 3. மட்டக்களப்பின் பூர்விககுடிகள்

## அறிமுகம்

**ம**ட்டக்களப்பின் பூர்விகவரலாறு பெருமளவுக்குக் கர்ணபரம்பரைக் கதைகள் வழியாகவே அறியப்பட்டுள்ளது. முன்னோர்களால் எழுதி வைக்கப்பட்டும், மட்டக்களப்பிலுள்ள காலத்தால் பழமையான கோவில்களின் செப்பேடுகளிலும், ஏடுகளிலும் பராமரிக்கப்பட்டும், இன்று கோவில்களில் படிக்கப்படும் கோவில் வரலாறுகள்தான் முக்கியமான வரலாற்று மூலாதாரங்களாகும். இம் மூலாதாரங்களைக் கொண்டே மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு வரலாற்றுநூல்கள் வேடர், இயக்கர், நாகர், திமிலர், புலிந்தர் அல்லது புலியர், கழுவந்தர், முக்கியர் ஆகிய குலக்குழுக்களை அல்லது சாதிகளை மட்டக்களப்பின் பூர்விககுடிகளாகக் குறிப்பிட்டுள்ளன.

மட்டக்களப்பு வரலாற்றுநூல்கள் சிலவற்றில் வேடர்கள் மட்டக் களப்பின் பூர்விககுடிகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் “மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்”(1998) எனும் ஆய்வுநூலில், மட்டக்களப்பின் பூர்விகக்குடிகள் குறித்து, “சுருக்கமான வரலாற்றிலிருந்தும் கிடைக்கும் சான்று களிலிருந்தும் மட்டக்களப்பில் ஆரம்பத்தில் பூர்விககுடிகள் இருந்தன ரென்று”(பக்.86) எனக்குறிப்பிடுவதுடன், “மட்டக்களப்பு பகுதியிலே குடியேற்றங்கள் ஏற்படமுன்னர் இங்கு சில சாதியினர் வாழ்ந்தனர் என்பதைக் கர்ணபரம்பரைக்கதைகளாலும், மட்டக்களப்பின் தெய்வ, வணக்கமுறைகளாலும் அறியமுடிகிறது” (பக்.100) எனவும் குறிப்பிடுகிறார்.

கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் மட்டக்களப்பின் பூர்விக குடிகளாக வேடர், புலிந்தர், இயக்கர் ஆகிய சாதியினரைக் குறிப்பிடு கிறார். ஆயினும், வேடர்கள் பற்றிய விபரங்களையே விபரித்துள்ளார்.

மௌனகுரு அவர்கள் பூர்விககுடிகள் பற்றி விபரிக்கையில், “இப்படி

வாழ்ந்தோர் வேடர், புலிந்தர், இயக்கர் ஆகிய சாதியினராக இருக்கலாம்" எனவும் "இவர்கள் தமக்கெனச் சில தெய்வங்களையும் வணக்கமுறைகளையும் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதை இன்றும் மட்டக்களப்புப் பகுதியில் வாழும் வேடர், வேடவெள்ளாளர் எனப்படும் சாதியினரிடம் காணப்படுகின்ற தெய்வங்களையும் வணக்க முறைகளையுங்கொண்டு அறியமுடிகிறது" எனவும் குறிப்பிடுகிறார். இவர்களை "புராதனகுலக்குழுக்க"ளாக அவர் இனங்காட்டுகிறார்.

மேலும், "வேடருக்குக் குமாரர் பிரதான தெய்வமாகவும்", "வம்சா வழியாக வந்த தெய்வமாகவும்" (பக்.111) குறிப்பிடுகிறார். வேடர் மரபில் வந்தோரால் அதாவது, வேட வெள்ளாளரால் — கடைப்பிடிக்கப்படும் குமார தெய்வத்தினை மையமாகக்கொண்ட பல புராதன தெய்வ வணக்கமுறைகளைக் கள ஆய்வுத்தகவல்மூலம் (கள ஆய்வு மட்டக்களப்பிலுள்ள தளவாயில் உள்ள பிரதானகோயிலை மையமாகக் கொண்டமைந்தது) விபரித்து (பக்.110—119), அது புராதனவாழ்க்கையைக் காட்டுகிற முறையினையும் விபரித்துள்ளார். "இச்சடங்குமுறைகள் அவர்களின் முன்னோர்களின் புராதனவாழ்க்கைமுறையின் நினைவுகளாகும். பூச்சி பிடித்தல், தேனி கொட்டுதல், யானை பிடித்தல் ஆகிய சடங்குமுறைகளில் அவர்களின் தொழில் சார்ந்த கிரியை களையும் ஏனையவற்றில் நோய்தீர்க்க ஏனைய தெய்வங்களை வேண்டும் கிரியைகளையும் காணுகிறோம்" (பக்.118) என அவர் குறிப்பிடுகிறார்.

மேலும் "இறந்த முன்னோரை வணங்கும் வழக்கம் (உத்தியாக்கள்) இவர்களிடம் இருப்பதும் இவர்களின் புராதனத்தன்மைக்கு உதாரணமாகும்."(பக்.100) எனவும் குறிப்பிடுகிறார்.

மேலும், "மட்—அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோயிலில் வேடர்களே முன்பு வேல் வைத்து வணங்கினர் என்ற கதையும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர், மண்டூர்க் கந்தசாமி ஆகிய கோயில்கள், முன்பு வேல் வைத்து வேடர்களால் வணங்கப்பட்ட கோயில்கள் என்ற கர்ணபரம்பரைக் கதையும் ஆரம்பத்தில் இவ்வணக்க முறைகளே மட்டக்களப்பில் இருந்தன என்பதை மேலும் வலியுறுத்து கின்றன"(பக்.101) எனவும் மௌனகுரு அவர்கள் குறிப்பிடுகிறார்.

மௌனகுரு அவர்கள் மட்டக்களப்பின் பூர்விககுடிகள் பற்றிய விபரங்களை இவ்வாறு விபரித்துள்ளபோதிலும் அவர்கள் வாழ்ந்த காலம் பற்றிக் குறிப்பிடவில்லை.

எஸ்.ஓ. கனகரெத்தினம் அவர்களும் 1923 ஆம் ஆண்டில் எழுதிய, "The Monograph of Batticaloa District of the Eastern Province" எனும் நூலில் மட்டக்களப்பில் பூர்விககுடிகளாக வேடர்கள் வாழ்ந்தனர் எனக் குறிப்பிடுவதுடன், "மட்டக்களப்பு ஆதிக்குடிகளின் இராச்சியம் (வேடர்களின் இராச்சியம்)" என வரோஸ் எனும் வரலாற்றாசிரியர் குறிப்பிடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். மேலும், எஸ்.ஓ. கனகரெத்தினம் அவர்கள் குறிப்பிடும் மட்டக்களப்பிலுள்ள சாதிகள் பதினேழில்

வேடுவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (வெல்லவூர்க்கோபால், மட்டக்களப்பு வரலாறு — ஒரு அறிமுகம். பக்.49).

வரலாற்றாசிரியர் வரோஸ் எத்தகவல்களின் அடிப்படையில் மட்டக்களப்பு வேடர்களின் இராச்சியமாக இருந்தது எனக் குறிப்பிட்டார் என அறிய முடியவில்லை.

வி.சி.கந்தையா அவர்கள், "மட்டக்களப்புத் தமிழகம்"(1964) என்னும் நூலில், "விஜயன் கி.மு. 540இல், பாண்டிய நாட்டிலிருந்து கொண்டு வந்த தமிழ் மக்களைக் 'கதிராகல' என்னும் மலைச்சாரலிற் குடியேற்றினான் என்றும், இப்பகுதி அக்காலத்து வேடராற் குடியிருக்கப்பெற்றதென்றும் சிங்கள வரலாற்றுநூல்கள் கூறுகின்றன. அவற்றுள் குறிப்பிடப்பெற்ற 'கதிராகல' மலைப்பகுதி ஏறக்குறைய 1200 அடி உயரமுள்ள குன்றுகளாக இத்தமிழகத்திலே மட்டுநகரின் தென்மேற்றிசையில் 17 மைல் தூரத்தே இன்றும் உள்ளது" (பக்.6—7) எனக்குறிப்பிட்டுள்ளார். வி.சி.கந்தையா அவர்கள் எந்தச் சிங்கள வரலாற்றுநூல்களிலிருந்து தகவலைப் பெற்றார் என்பதனைக் குறிப்பிடவில்லை. ஆனால், பொதுவான சிங்கள வரலாற்று நூல்களில் அவ்வாறான ஒரு கருத்து குறிப்பிடப்படவில்லை.

கதா.செல்வராசகோபால் அவர்களின் "மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டை வரலாற்று அடிச்சுவடுகள்"(2005) எனும் நூலின் முதன்மைப் பதிப்பாசிரியன் உரையில், "விந்தனை வேடரும் தம்பானையில் தாம் புலம்பெயர்ந்த தம்பன்னை எனும் இடத்தின் பெயரை மறந்து போகாமல் தாம் வாழும் இடத்திற்கு இட்டுக்கொண்ட தம்பானை வேடரும், புலிந்தரும், திமிலரும், கழுவந்தரும் முக்கிய பண்டை மட்டக்களப்பின் குடிகளாக வாழ்ந்தனர்" (இணையப்பிரதி—பக்.15) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வேடர்கள் பற்றி விபரிக்கையில், "விஜயனின் இன அழிப்புக்கு அஞ்சிய இயக்கர்கள் எனும் பண்டைய தேசிய இனத்தவர்கள்" (இணையப்பிரதி—பக்.61), "மகியங்கனையை அடுத்த விந்தனை எனும் இடத்திலும் மட்டக்களப்பு வாழைச்சேனையை அண்மித்த கழுவன்கேணியிலும் அம்பாறையை அடுத்த தம்பானை எனும் இடத்திலும் வாழ்ந்து வந்தனர்", எனவும் "இவர்களைவிடப் பெருந் தொகையானோர் இத்திசைவழியே கூட்டமாகச் சென்று மட்டக் களப்பைச் சார்ந்த சமவெளியில் தங்கலாயினர்" (இணையப்பிரதி பக்.62) எனவும் விபரிக்கப்படுகிறது.

தொடர்ந்து இவ்வாறு புலம்பெயர்ந்து குடியேறியவர்கள் பற்றிய விபரிப்பில், "..விந்தனை தம்பானை எனும் இடங்களிற் சென்றவர்கள் இருப்பிடம் மலைக்குன்றுப் பகுதிகளாக இருந்தபடியால், தமது சொந்த நாட்டில் அரச உத்தியோகங்களிலும் படைகளிலும் பணிபுரிந்தவர்களாதலால் தாம் முன்னர் வாழ்ந்த இயல்பு வாழ்க்கையை நடத்த முடியாதநிலையை அடைந்தனர். நாளடைவில்

தம்மைச் சுற்றியுள்ள காட்டு வளத்திலேயே தமது வாழ்க்கையை நடத்தத் தொடங்கினர், அதாவது, வேட்டையாடுவதைச் சீவனோபாயத் தொழிலாகக் கொள்ளலாயினர். இதனால், வேடர் என்ற காரணப் பெயரையும் பெற்றனர்." (இணையப்பிரதி—பக். 63) என விபரிக்கப் பட்டுள்ளது.

மேலும், "1911ஆம் ஆண்டு குடிசன மதிப்புக்கணிப்பின்படி வேடர்களின் தொகை முழு இலங்கையிலும் 5312 பேர் மட்டுமே. மற்றக்குலங்களான திமிலர், புலியர், முக்கியர் எனப்படுவோர் தமது அடையாளங்களை மறந்து தமிழராகிவிட்டனர். அக்காலகட்டத்தில், வேடக்குடியிருப்புகள் மகியங்கனை (விந்தனை), தம்பானை, கழுவன்கேணி எனும் இடங்களில் மட்டுமேயிருந்தன. நாளடைவில், கழுவங்கேணி வேடர்களும் தமிழர் என்ற தேசிய அடையாளத்தைப் பெற்றுக்கொண்டனர்" (இணையப்பிரதி—பக்.17) எனவும் குறிப்பிட்டுள்ளார்.

க.தா.செல்வராசகோபால் அவர்கள் அதிகளவான தகவலை முன்வைத்திருக்கிறார். தகவலை அதிகளவான சான்றுகளைக்கொண்டு நிருபிக்கவும் முயன்றுள்ளார். ஆனால், பெருமளவு ஊகங்களை அடிப்படையாகக்கொண்டே முடிவுகளை முன்வைத்திருக்கிறார்.

இவர், மட்டக்களப்பின் பூர்விககுடிகள் வேடர்கள் என்பதுடன், அவ்வேடர்கள் இயக்கர்கள் வழியில் — குவேனி வழியாக — வந்தவர்கள் எனவும் சூழ்நிலைமைகளால் வேடர்களாக மாற்றம் பெற்றவர்கள் எனவும் குறிப்பிடுகிறார். ஆரியக்குடியேற்றத்தினால் துரத்தப்பட்ட இயக்கர்கள் — குவேனி — பற்றிய தெளிவு ஏற்படுத்தப்படாத நிலையிலும் இவ்வாறு ஒரு முடிவுக்கு வருவது தவிர்க்க இயலாதது என்றே கருதலாம்.

மட்டக்களப்பின் சில வரலாற்று நூல்கள் மட்டக்களப்பின் பூர்விக குடிகள் வேடர்கள் எனக் குறிப்பிடுகிறபோதும், சில நூல்கள் இயக்கர், நாகர்களை மட்டக்களப்பின் பூர்விக குடிகள் எனக் குறிப்பிட்டுள்ளன.

வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்களால் 1962இல் வெளியிடப்பட்ட 'மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் வித்துவான் சா.இ.கமலநாதனும் அவரது துணைவியார் கமலா கமலநாதனும் தயாரித்த "மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்" (2005) ஆகிய நூல்களில், "சிறிகுலசேனனுடைய புத்திரன் கூத்திகன் மட்டக்களப்பில் குடியேற்றங்களை முதன்முதலில் உருவாக்கியவனாகக் குறிப் பிடுவதுடன், கூத்திகன் பின், மட்டக்களப்பை இராசதானியாக்கி அரசியற்றிய சேனனுடைய வமிசம் அருகிப்போக, நாகர், இயக்கர் என்னும் இரு குலத்தவர்கள் மேலெழும்பி, காலிங்கர், சிங்கர், வங்கர் என்னும் முக்குலத்தவரையும் அடக்கி, விண்டு அணையை இராசதானியாக்கி முப்பது வருசகாலமாகக் கொடுங்கோல் செலுத்தினன்" என (பக்13) குறிப்பிடப்படுகிறது. இக்காலத்தில்

அனுரதன்புரியை அரசு செய்தவன் சோரநாகன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இச்சோரநாகன் இயக்கர் துணைப்பிரியன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விபரிப்புக்களிலிருந்து, "நாகர், இயக்கர் இரு குலத்தவர்கள் மேலெழும்பி" எனும் வரியானது அவர்கள் முக்குலத்தவருக்கு முன் வாழ்ந்து வந்தவர்கள் என்ற கருத்தினையே குறிப்பாய் உணர்த்துகிறது.

மேலும், மட்டக்களப்பிலுள்ள முக்குலத்தவரில் சில நிதியத் தலைவர்கள் வேண்டுகோளின்படி இயக்கர், நாகரை அகற்ற கலிங்க தேசத்து மதிவரகாகுணன் புத்திரன் ரணாசலன் (ரணாசல் — ரஞ்சன்—நிரஞ்சன்) சைனியவீரர் முந்நூறுடன் இங்கு வந்தான் எனவும், இவன் நாகரைச் சிநேகம் பிடித்து, இயக்கர் என்னும் திமிலரை வாளுக் கிரையாக்கி, விண்டு அணையிலுள்ள இராசமாளிகையை உடைத்து, இயக்கர் அரசனையும் அவன் பிரதானிகளையும் வெட்டிக் கொன்று, மேற்கு வடக்கு மகாவலி கங்கையால் இயக்கர் குலத்திலுள்ள யாவரையும் துரத்தி எல்லைக்கல்லும் நாட்டி.." (பக்.14) என வரும் குறிப்புக்கள் இயக்கரைத் திமிலராகக் காட்டுகிறது.

பின்னால் வரும் ரணாசலன் கூற்றானது, "நான் காலிங்கதேசம் போய்க் குடிகள் கொண்டு வந்து இயக்கரிருந்த இடமெல்லாம் குடியேற்றவேண்டும்" என வருகிறது. இதிலிருந்து இயக்கர்கள் பெரும் பிரதேசத்தில் வாழ்ந்துவந்தார்கள் என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது.

இதேவேளை, ரணாசலன் அனுரதன்புரியை அரசு செய்த சோரநாகனுடன் இணைந்து, "இலங்கையை பன்னிரெண்டு பாகமாய்ப் பிரித்து, எட்டுப்பங்கை விசயதுவீபத்தோடு சேர்த்து மண்ணாறு, மணற்றிடரிரண்டையும் குருகுல நாகருக்கீந்து, தெட்சனாபதியை இயக்கர் குலத்திமிலருக்கீந்து, மட்டக்களப்பை ரணாசலனேற்றுக் கொண்டுஞ்" என வரும் செய்திகள் கவனத்தில் கொள்ளத்தக்கன. இதன்மூலம் பின்னாளில் இயக்கர் வாழிடம் தெட்சனாபதியாக இருந்தது எனக் காட்டப்படுகிறது.

இதே வேளை இந்நூலிலுள்ள குலவிருதக்கல்வெட்டில் "நாணி வில்லம்பு நாட்டிலுள்ள வேடுவர்க்கு" என்ற குறிப்பும், சாதித் தெய்வக்கல்வெட்டில் "வேடருக்கு கன்னிகளாம்" என்ற குறிப்பும் (பக்77) (மௌனகுரு அவர்கள் குமார தெய்வச்சடங்கில் இணைந்துள்ள சடங்கில் கன்னிமார் சடங்கு நிகழ்வதனையும் குறிப்பிடுகிறார். (பக்.118)) காணப்படுகிறபோதும் சாதிகள் பற்றிய குறிப்பில், வேடர்கள்பற்றிக் குறிப்பிடவில்லை. அதாவது, சிறைக்குடிகள்—ஊழியம் செய்யும் சாதிகளில் வேடர்கள் பற்றிக்குறிப்பிடப்படவில்லை. இதன்மூலம் அவர்கள் தனித்துவமான சாதிகளாக இனங்காட்டப்படுவது தெரிகிறது.

'மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகிய மட்டக்களப்பின் இரு பிரதான வரலாற்றுநூல்கள் குறித்தும் கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும்,

அந்நூல்களில் குறிப்பிடப்படும் தகவல்களை நாம் ஒதுக்கிவிட முடியாது. மட்டக்களப்பின் பண்டைய வரலாற்றை விபரிக்கும் பழைய ஏட்டுப்பிரதிகளின் அச்சுவடிவமாக இந்நூல்கள் கொள்ளப்படுகின்றன.

இவ்விருநூல்களிலும் இயக்கர், நாகர் மட்டக்களப்பின் பூர்வீக குடிகள் எனக் கூறப்பட்டுள்ளதுடன் அவர்கள்பற்றிய விபரங்கள் சிலவும் காட்டப்பட்டுள்ளன. அத்துடன் இயக்கரைத் திமிலர் எனவும் குறிப்பிட்டுள்ளது. இத்தகவல்கள் கர்ணபரம்பரைக்கதைகளாக நிலவியவை என்பதனால் தகவல்களை உறுதிப்படுத்தமுடியாதுள்ளது. நூலிலும் அதற்கான முயற்சி ஏதுமில்லை.

வெல்லவூர்க்கோபால் அவர்கள் "மட்டக்களப்பு வரலாறு—ஒரு அறிமுகம்" (2005) எனும் நூலில், மட்டக்களப்பின் பூர்விககுடிகளாக இயக்கர், நாகரைக் (வேடர்) குறிப்பிடுவதுடன், அவர்கள் காலத்தினை கி.மு.500க்கு முற்பட்டதாகவும் குறிப்பிடுகிறார் (பக்.27, 45). இலங்கைக்குப் புத்தரின் முதலாவது வருகை என மகாவம்சம் கூறும் காலத்துடன் தொடர்புபடுத்தியே இக்காலக்கணிப்பை அவர் குறிப்பிடுகிறார்.

மேலும், "இயக்கர் குடியிருப்புக்கள் நாடு முழுக்கப் பரவியிருந் தமையும் மட்டக்களப்புப்பிரதேசத்தே மாணிக்ககங்கை (கதிர்காமம்) மற்றும் விந்தனைப்பகுதிகளில் அவர்கள் பரவலாக வாழ்ந்துள்ளமையும் தெரிகின்றது" (பக். 23) எனவும், நாகர்களின் இருக்கைகளாக "மட்டக் களப்புப்பிரதேசத்தே நாகர்பொக்கணை (மன்னம்பிட்டி), நாகர்முனை (திருக்கோவில்), நாகன்சாலை (மண்டூர்), சூரியத்துறை (மட்டக்களப்புப் பெருந்துறை) என்பனவும் குறிப்பிடப்படுகின்றன" (பக்.23) எனவும் வெல்லவூர்க்கோபால் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். "மட்டக்களப்பில் இயக்கர், நாகர் குழுநிலை ஆட்சி அதிகாரத்தில் இருந்தனர் (பக்.45)" எனவும் அவர் குறிப்பிடுகிறார். இவர்கள் ஈழம் முழுவதிலும் வாழ்ந்தவர்களாகவே இவ்வாசிரியர் குறிப்பிடுகிறார்.

இலங்கை வரலாற்றில், கி.மு. 454 தொடக்கம் கி.மு. 437 வரையான காலப்பகுதி, சரியான தகவல்கள் குறிப்பிடப்படாத போதும், உள்நாட்டுக்கலகக்காலம் என வரலாற்றில் சொல்லப்பட்டாலும் மீண்டும் இயக்கர், நாகர் வலிமை பெற்ற காலமாகக் கருதமுடியும் எனவும் வெல்லவூர்க்கோபால் குறிப்பிட்டுள்ளார்.

வெல்லவூர்க்கோபால் அவர்கள் பல தகவல்களைக் குறிப்பிட்டுள்ளபோதும், குறிப்பிடும் தகவல்கள் எவ்வாறு பெறப்பட்டன என்பதனையும் அதன் உண்மைத்தன்மைபற்றி ஆராயவும் இல்லை. ஆதாரங்கள் சரியான முறையில் காட்டப்பவில்லை. நாகர் வாழ்ந்தமைக்கு ஊர்ப்பெயர்களையே ஆதாரமாகக் காட்டுகிறார்.

இந்நூல்கள் மட்டக்களப்பின் பூர்விககுடிகளாக இயக்கர், நாகர்களைக் குறிப்பிடுகின்றன. இயக்கர்களைக் குவேனி வம்சத்துடன் தொடர்புபடுத்தி நோக்கியிருப்பதுடன், கி.மு. 500ஆம் ஆண்டளவில் இவர்கள் மட்டக்களப்பில் குடியேறியதாகவும் கூறப்படுகிறது.

இயக்கர்களைத் திமிலர்களுடன் தொடர்புபடுத்தியுங் கூறப்படுகிறது.

வெல்லவூர்க்கோபால் மட்டக்களப்பின் பூர்விககுடிகளாக இயக்கர், நாகர்களைக் குறிப்பிடுகின்றபோதிலும், நூலில் வரும் "நாகரை (வேடர்)" எனும் தொடரானது, அவர் நாகரை வேடர் எனக் கருதியுள்ளார் என எண்ண இடமளிக்கிறது. 'மட்டக்களப்பு மான்மியம்' மற்றும் 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகிய இரு நூல்களிலும் இயக்கர், நாகர்களை மட்டக்களப்பின் பூர்விககுடிகள் எனக் கூறப்பட்டுள்ள போதிலும் "குலவிருதக்கல்வெட்டில்" கூறப்பட்டுள்ள மட்டக் களப்பிலுள்ள சாதிகளில் வேடர்களைப் பற்றியும் கூறப்பட்டுள்ளமை யானது மட்டக்களப்பில் வேடர்கள் ஒரு பிரதான சமூகமாக இருந்துவந்திருப்பதனை எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் தனித்துவமான சாதிகளாக இனங்காட்டப்படுகிறார்கள்.

புலிந்தர்பற்றி மட்டக்களப்பு வரலாற்று நூல்கள் அதிகம் கவனம் செலுத்தவில்லை. மட்டக்களப்பில் வாழ்ந்த வேடர், புலியர், கழுவந்தர், முக்கியர் எனப்படுவோர் தமது அடையாளங்களை மறந்து தமிழராகி விட்டனர் எனவும் கூறப்படுகிறது.

இவ்விளக்கங்களினால், மட்டக்களப்பின் பூர்விககுடிகளாக வேடர்கள், இயக்கர்கள் மற்றும் நாகர்கள் ஆகிய குலக்குழுக்கள் வாழ்ந்தனர் என்ற முடிவுக்கு வரமுடிகிறது. இயக்கர்கள் மற்றும் நாகர்கள் பற்றி தெளிவற்ற நிலையில், வேடர்களே மட்டக்களப்பின் பூர்விககுடிகள் என்ற முடிவிற்கு வருவதற்கான ஆதாரங்களே பெருமளவு காணப்படுகின்றன. இலங்கையின் பூர்விககுடிகள் இயக்கர் மற்றும் நாகர் எனக் கூறப்படுகிறபோதும், தற்காலத்தில் இலங்கையின் பூர்விககுடிகளாக கருதப்படுபவர்கள் வேடர்களே. அதுபோலவே மட்டக்களப்பின் பூர்விககுடிகளாக வேடர்களையே கருத வேண்டியுள்ளது.

மட்டக்களப்பின் பூர்விககுடிகள் வேடர்கள் எனக் குறிப்பிடுவதற்கு கடுமையான விமர்சனமொன்று முன்வைக்கப்பட்டு வருகிறது. முன்வைக்கப்பட்டு வரும் விமர்சனங்களைக் கருத்தில் கொண்டு "வேடர்கள்" பற்றிய ஒரு குறிப்பை எழுதவேண்டிய தேவையேற் பட்டுள்ளது. "வேடர்கள்" என்ற சொல் தற்காலப்பேச்சுவழக்கில் பின்தங்கிய சமூக பொருளதார கலாசார நிலைகொண்டோரைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, மட்டக்களப்பின் பூர்விக குடிகளை இவ்வாறான ஓர் அர்த்தத்தில் இனங்காட்ட முடியுமா என்ற வினாவும் எழுகிறது. இவர்களை "வேடர்கள்" என்ற சொல்லால் சுட்டும் வழக்கு எவ்வாறு ஏற்பட்டது என்பதுவும் வினாவிற்குரியதே.

இலங்கையின் பிரபல்யமான வரலாற்று நூலான மகாவம்சம் மகியங்கனையில் வாழ்ந்த தொல்குடியினரை யக்சர்கள் (ஆங்கில மற்றும் பாளி மொழி நூலில் எவ்வாறு உள்ளது எனத் தெரியவில்லை) என்றே குறிப்பிடுகிறது. அதேபோல மட்டக்களப்பின் பிரபல்யமான

வரலாற்று நூலான மட்டக்களப்பு மான்மியமும் (மட்டக்களப்பு பூர்வ சரித்திரமும்) மட்டக்களப்பின் பூர்விக குடிகளாக இயக்கர் மற்றும் நாகர் எனும் இருகுலத்தவர்களையே குறிப்பிடுவதுடன் இயக்கரை திமிலராகவும் குறிப்பிட்டுள்ளது. க.தா. செல்வராசகோபால் அவர்கள் வேடர்களை முதுநாகரிகம்மிக்க சமூகமாகக் குறிப்பிடுகிறார். எனவே தற்காலப் பேச்சு வழக்குப் பொருளில் மட்டக்களப்பின் பூர்விக குடிகளை வேடர்கள் என்ற சொல்லினால் அடையாளப்படுத்த முடியாது.

ஆயினும், தற்காலத்தில் குமார — தெய்வ வணக்கமுறைகளைப் பின்பற்றுவோர் மற்றும் பூர்விகதொடர்புகளைப் பேணுவோர் பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளபோதும் தங்களை வேடர்கள் என்றே கூறிக்கொள்கின்றனர் என்பது குறிப்பிட்டாக வேண்டிய விடயமாகும். அது மட்டுமன்றி மட்டக்களப்பிலுள்ள காலத்தால் பழமையான கோவில்களின் பண்டையவரலாறும் வேடர்களுடன் தொடர்பு படுத்தியே பேசப்படுகிறது. சில பண்டையகிராமங்களின் பண்டைய வரலாறும் வேடர்களுடன் தொடர்புபடுத்தியே கூறப்படுகிறது

சில வேளைகளில் பூர்விககாலத்தில் வாழ்ந்த மக்கள், கோவில்கள், ஊர்கள் என்பவற்றின் பழமையைக் குறிப்பிடுவதற்காக அவை வேடர்களுடன் தொடர்பு படுத்தப்படுகின்றதா என்ற வினாவும் எழுகின்றது. ஏனெனில், பிந்திய கணிப்பீடுகளில் இலங்கையில் வாழ்ந்த வேடர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தளவிலேயே காட்டப் பட்டுள்ளது.

எனவே, எண்ணிக்கையில் பெருந்தொகையினரான பழங்குடிமக்கள் மட்டக்களப்பில் வாழ்ந்து வந்திருப்பார்களாயின், அவர்கள் முன்னர் வேறு ஏதேனும் பெயர்களால் அழைக்கப்பட்டார்களா என்ற வினாவும் எழுகின்றது. அல்லது, இயக்கர்கள்தான் வேடர்களாக மாற்ற முற்றார்களா என்ற வினாவும் எழுகின்றது.

அதனால், பின்வரும் விடயங்கள் தொடர்ந்தும் சரிதிட்டமாக விளக்கமுடியாத வினாக்களாக எஞ்சியிருப்பதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

வேடர்களுக்கும் இலங்கையின் பூர்விககுடிகளான இயக்கர் மற்றும் நாகருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது குறித்தும் ஆராயப் படவேண்டும்.

அடுத்து குவேனி குலத்திற்கும் மட்டக்களப்பின் பூர்விககுடிகளான வேடர்களுக்கும் உள்ள தொடர்பு குறித்தும் ஆராயப்படவேண்டும்.

அடுத்து மட்டக்களப்பின் வரலாற்றில் வேடர்களையடுத்து ஆரம்ப கால குடியேற்றவாசிகளாக கருதப்படும் திமிலருக்கும் வேடருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதுவும் விளக்கப்படுத்தப்படவேண்டும்.

அடுத்து, தொல்பொருள் சான்றுகள் மூலம் "வேடர்கள்

மட்டக்களப்பின் பூர்விகக் குடிகள்" என்பதையும் நிரூபிக்க முடியாமலும் உள்ளது. வேடர்கள் மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசங்களிலேதான் (படுவான்கரை மட்டக்களப்பு வாவியின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள வயல், காடு சார்ந்த பகுதி) வாழ்ந்திருக்கமுடியும் என்ற நிலையில், அப்பகுதியில் உள்ள தொல் பொருள் தடயங்கள் கண்டறியப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப் படவேண்டும்.

அதேவேளை, இவ்வேடர்களுக்கும் இராவணன்காலத்து அரக்கர்களுக்கும், புராதன ஈமத்தாழிகள்மூலம் அறியப்பட்ட தொல் குடியினருக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதுவும் மற்றொரு வினாவாகும்.

மௌனகுரு அவர்களின் "குமார சடங்கினைச் செய்பவர்கள் வேடர் மரபில் வந்தோராவர்" என்ற குறிப்பும் (பக்.110) "வேடவெள்ளாளரிடம் நடைபெறும் இச்சடங்கு முறைகள்"(பக்.118) என்ற குறிப்பும் இது குறித்த கள ஆய்வு தளவாயில் உள்ள பிரதான கோயிலை மையமாகக் கொண்டமைந்தது என்பதுவும் வேடர் மரபில் வந்த, ஆனால், தற்போது அச்சமூகநிலையில் இருந்து வேறுபட்ட நிலையில் வாழுகின்ற சமூகத்தினையே அவர் குறிப்பிடுகிறார் என்பதனைக் காட்டுகிறது. அதாவது வேடர் மரபில் வந்தோர் அல்லது வேடவெள்ளாளர் பற்றியே அவர் குறிப்பிடுகிறார். மௌனகுரு அவர்கள், "சில இடங்களில் முக்குவரிடையே வேடவேளாளர் என்ற ஒரு குடியும் காணப்படுகிறது. இது வேடரோடு முக்குவரிற் சிலர் கலந்தமையால் ஏற்பட்ட குடி என்று கூறலாம்" (பக்.93) எனவும் குறிப்பிடுகிறார்.

அப்படியாயின், "இன்று வேடுவர்களாக அறியப்படுகின்ற சமூகங்களில் காணப்படும் தெய்வ—வணக்க முறைகள் எவை? இவர்களுக்கும் மட்டக்களப்பின் பூர்விக குடிகள் எனப்படுகிற வேடர்கள் — இயக்கர்கள் — நாகர்கள் என்போருக்கிடையிலான தொடர்பு என்ன?" என்பனவும் ஆராயப்படவேண்டிய மற்ற வினாக்களாகும்.

# 4. பூர்விககுடிகளின் குமாரதெய்வவழிபாடு

பல்வேறு வினாக்கள் காணப்படுகிற போதும், மட்டக்களப்பு வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு, மட்டக் களப்பின் பூர்விககுடிகள் வேடர்களே என்ற முடிவிற்கு வரமுடிகிறது. மட்டக்களப்பின் பூர்விககுடிகள் வாழ்ந்த இடங்கள் பற்றி, மட்டக் களப்பு வரலாற்றுநூல்களில் பல்வேறு தகவல்கள் கூறப்பட்டுள்ளன.

க.தா.செல்வராசகோபால் அவர்கள் வேடர்கள் "மகியங்கனையை அடுத்த விந்தனை எனும் இடத்திலும் மட்டக்களப்பு வாழைச் சேனையை அண்மித்த கழுவன்கேணியிலும் அம்பாரையை அடுத்த தம்பானை எனும் இடத்திலும் வாழ்ந்து வந்தனர்" எனவும் "இவர்களை விடப் பெருந்தொகையானோர் இத்திசைவழியே கூட்டமாகச் சென்று மட்டக்களப்பைச்சார்ந்த சமவெளியிற் தங்கலாயினர்" (இணையப் பிரதி— பக்.62), எனவும் விபரிக்கிறார். ஆனால், மட்டக்களப்பைச் சார்ந்த சமவெளியில் தங்கியமைக்குப் போதுமான ஆதாரங்கள் முன் வைக்கப்படவில்லை. தற்காலத்தில், விந்தனையிலும் தம்பானையிலும் வேடர்கள் வாழ்ந்து வருகிறார்களெனினுங்கூட அவர்கள் மட்டக் களப்பின் பூர்விககுடிகள் எனக் கூறுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லை. கழுவன்கேணியில் வாழ்ந்த வேடர்கள் பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

வி.சி.கந்தையா அவர்கள் 'மட்டக்களப்புத் தமிழகம்' (1964) என்னும் நூலில் "விஜயன் கி.மு. 540இல், பாண்டியநாட்டிலிருந்து கொண்டுவந்த தமிழ்மக்களைக் 'கதிராகல' என்னும் மலைச்சாரலிற் குடியேற்றினான்" என்றும் "இப்பகுதி அக்காலத்து வேடராற் குடியிருக்கப் பெற்றது" என்றும் சிங்களசரித்திரநூல்கள் கூறுகின்றன. அவற்றுட் குறிப்பிடப் பெற்ற 'கதிராகல' மலைப்பகுதி ஏறக்குறைய 1200 அடி உயரமுள்ள குன்றுகளாக இத்தமிழகத்திலே மட்டுநகரின் தென்மேற்றிசையில் 17 மைல் தூரத்தே இன்றும் உள்ளது" (பக்.6—7) எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இவர் குறிப்பிடும் சிங்கள சரித்திரநூல்கள் எவை என்ற குறிப்பில்லை.

சி.மௌனகுரு அவர்கள் தளவாய் எனும் கடலோரக்கிராமத்தில் வாழ்பவர்கள்பற்றித் தனது ஆய்வில் விபரித்துள்ளார். அங்கு வேடர் வழியில் வந்த வேடவெள்ளாளர் வாழ்ந்து வருவதனை அவர் தனது ஆய்வில் இனம் காட்டியிருக்கிறார்.

சி.மௌனகுரு அவர்கள் மட்டக்களப்பு தளவாயில் வாழும் வேட மரபில் வந்த வேடவெள்ளாளர் பற்றிய ஆய்வில், "வேடருக்குக் குமாரர் பிரதான தெய்வமாகவும்", "வம்சாவழியாக வந்த தெய்வமாகவும்" (பக்.111) குறிப்பிடுகிறார். எனவே, குமார தெய்வம்பற்றியும் குமார தெய்வச் சடங்கு பற்றியும் அறியவேண்டியது தவிர்க்க முடியாததொன்றாக அமைகிறது.

தற்காலத்தில் வாழும் வேடர்கள் மற்றும் குமார தெய்வ வணக்க முறைகள் பற்றிய தகவல்களைத் தேடியபோது, வேடர்கள் என அடையாளப்படுத்தக் கூடியவர்களில் இரு வேறுபட்ட "குலக்குழுக்கள்" அல்லது "சாதிகள்" அல்லது "குடிகள்" மட்டக்களப்புப்பிரதேசத்தில் வாழ்ந்து வருவதனையும், அவர்களின் வாழிடம் மட்டக்களப்பு நகரிலிருந்து வடக்கே வாகரை — கதிரவெளி (படுவான்கரை உள்ளிட்டு) வரையும் அமைவதையும் காணமுடிகிறது.

அவர்களில் ஒரு குழுவினர் மட்டக்களப்பின் பூர்விககுடிகள் என இனங்கண்ட, மிகநீண்டகாலமாக மட்டக்களப்புப்பிரதேசத்தில் வாழ்ந்து வருபவர்களாவர்.

இவர்கள் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளபோதுங்கூட தமது பழைய தெய்வ — வணக்கமுறைகளுடன் (குமாரதெய்வம் மற்றும் அதற்கான சடங்குகள்) தொடர்புபட்டவர்களாக இன்றும் உள்ளனர். ஆனால், தெளிவான ஒரு வாழிடப்பிரதேசத்தினை இனங்காண முடியாதவாறு ஏனைய குடிகளுடன் இணைந்து வாழ்கின்றனர். களுவன்கேணி, தளவாய் ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகிறவர்கள் பல மாற்றங்களுக்குட்பட்டுள்ள போதிலுங்கூடத் தமது பாரம்பரியச் சடங்குகளை மேற்கொண்டு வருபவர்களாகவுள்ளனர்.

மற்றொரு குழுவினர் அண்மைக்காலத்தில் (மகியங்கனைப் பிரதேசத்திலிருந்து) குடியேறி வாழ்பவர்கள். இவர்கள் தனித்துவமான வாழிடப்பகுதி கொண்டவர்கள்.

அண்மைக்காலத்தில் குடியேறிய வேடர்களின் வாழிடங்களில், கிரானிற்குத் தெற்கே படுவான்கரையிலுள்ள கானந்தனை, முறுத்தானை, அக்குறானி எனுமிடங்கள் முக்கியமானவை. அதேவேளை வாகரை — பனிச்சங்கேணி — கதிரவெளிப்பகுதியிலும் இவர்களையொத்த குடிகள் வாழ்கிறார்கள் என்றும் அறியமுடிகிறது. அத்துடன் மன்னம்பிட்டிக்கு அருகில் சீரவண எனுமிடத்திலும் வேடர்கள் வாழ்வதாக அறிய முடிகிறது.

கானந்தனை, முறுத்தானை, அக்குறானி பகுதிகள் ஏனைய வயற்பகுதிகளிலிருந்து வேறுபட்டு காட்டுப்பிரதேசமாக உள்ளன.

1984—85 இல் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் மிகப்பின்தங்கிய சமூக—பொருளாதாரநிலையையே (வேடர் சமூகத்திற்குரியவாறு) கொண்டிருந்தார்கள். போர்க்காலத்தில் இவர்கள் இடம்பெயர்ந்து ஆலங்குளத்தில் (வாழைச்சேனைக்கு அருகே பொலன்னறுவை வீதியில் உள்ள இடம்) வாழ்ந்து தற்போது மீள்குடியேறியுள்ளார்கள். அவர்கள் மத்தியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவர்கள் மகியங்கணையிலிருந்து மூன்று தலைமுறைக்கு முன்னதாக இங்கு வந்து குடியேறியதாகவும், அவர்களில் முன்னோர்கள் சிங்களம் மற்றும் வேடபாசை தெரிந்தவர்களாகவும் கூறப்படுகிறது. ஆனால், தற்போது சிங்களம் தெரியாத அளவிற்கு தமிழர்களாக மாறிவிட்டிருக்கிறார்கள். தற்போது மதச்சடங்குகளைப் பொறுத்தளவில் தலைவராக இருப்பவர் சிங்களப்பெயர் கொண்டவர். ஆனால், அவர்களுடைய வழியில் வந்தவர்களும் ஏனையவர்களும் தமிழ்ப்பெயர்களைக் கொண்டுள்ளனர்.

இவர்களுடைய தெய்வங்கள் வேறுபட்டன. ஆனால், பிரதான தெய்வவழிபாட்டில் குமாரருக்கும் ஒரு பந்தல் போடப்படும், அவருக்கும் சடங்கு செய்யப்படும். ஊரின் நடுவே சிறு பிள்ளையார் கோவில் ஒன்றும் உண்டு. மிக அண்மைக்காலத்தில் (2010 இனை அண்டிய காலகட்டத்தில்) மகியங்கனைப்பிரதேச ஆதிவாசிகள் (வேடர்கள்) இங்கு வந்து அவர்களைச் சந்தித்து சென்றதாகவும் அறிய முடிகிறது. இதனை இக்காலகட்டத்திலே ஆட்சிசெய்த அரசாங்கம் (அமைச்சர் விமல் வீரவன்ச ஊடாக) ஏற்பாடு செய்திருக்கலாம்போலத் தெரிகின்றது .

வாகரை — பனிச்சங்கேணி — கதிரவெளிப்பகுதியில் வாழ்பவர்கள் பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளார்கள் என்றே தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அண்மையில் ஆதிவாசிகளுக்கான வீட்டுத்திட்டம் (மதுரங்கேணிக்குளம்) அரசால் அமைக்கப்பட்டதற்கான விழாவில், பாரம்பரிய உடைகளுடன் கலந்துகொண்டதுடன், வரவேற்பினைப் பாரம்பரிய முறைகளுடன் செய்துமிருக்கின்றனர். அவ்விழாவிற்கும் மகியங்கனை வேடர் பிரதிநிதிகள் அழைத்து வரப்பட்டுமுள்ளனர்.

இதனைவிடச் சல்லித்தீவில் வாழ்பவர்கள் கடற்றெய்வங்கள் குறித்து சடங்கு செய்துவருபவர்கள் எனவும் கூறப்படுகிறது. இப்பகுதியில் வாழும் பழங்குடியினர் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இது பற்றிய விபரங்கள் இன்னமும் வெளிப்படுத்தப் படவில்லை.

இனி, மட்டக்களப்பின் பூர்விக குடிகள் என இனங்கண்ட, மிக நீண்டகாலமாக மட்டக்களப்பு பிரதேசத்தில் வாழ்ந்து வருபவர்கள் பற்றிய தகவல்களைப் பார்க்கலாம்.

இவர்கள் தொடர்பாக, கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் "மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்" என்ற நூலில், முன்னர் வேட்டையாடுதல், மந்தை வளர்த்தல் ஆகிய தொழில்களைச் செய்த வேடர் மரபில்

வந்த, தற்போது கூலி விவசாயத் தொழில், கூடை பின்னுதல், மீன் பிடித்தல், மரம் வெட்டுதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளோரே இச்சடங்கினைச்செய்கின்றனர். இவர்கள் பல இடங்களிற் பரவி வாழ்கின்றனர். தாம் வாழும் இடங்களிலெல்லாம் ஒரு சிறிய குமார கோயிலை வைத்திருப்பர் என்ற தகவலையும் தந்திருக்கிறார்.

மௌனகுரு அவர்களுடைய களவாய்வு தளவாயில் அமைந்துள்ள பிரதான குமாரகோயிலை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. அக்கோயில் வேடர், வேடவெள்ளாளர்களுக்குரியது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் குறிப்பிடும் தகவலில் கவனத்திற்குரியவை:

"இவர்களின் குலதெய்வம் குமார தெய்வமாகும். முருகனையே இவர்கள் குமாரர் என அழைப்பர்."

"இவர்கள் தமிழ் பேசினாலும் வேடபாஷை என இவர்களால் அழைக்கப்படும் பாஷையிலேயே வணக்கமுறைக்குரிய சொற்களையும் பாடல்களையும் கூறுகின்றனர்."

"பந்தலிட்டு இலைகுழை, தென்னோலை, காட்டுப்பூக்கள் ஆகிய வற்றாலே பந்தலை அலங்காரஞ்செய்து தெய்வங்களுக்கு விசேடபூஜை செய்வர்."

"பூஜை நடைபெறும் சமயம், தெய்வத்தோடு சம்பந்தமுடைய பல நிகழ்ச்சிகள் நிகழ்த்திக் காட்டப்படும். (உ—ம் இறுதிநாட்சடங்கில் நடைபெறும் நாடகத்தன்மை வாய்ந்த நிகழ்ச்சிகள்)"

"இத்தெய்வங்களுக்கெனப் பிரத்தியேகமான வணக்கமுறைகளு முண்டு. கொட்டுக்கு ஏற்பச் சன்னதம் கொண்டோர் ஆடும் ஆடலும் அது சம்பந்தமான சடங்குமுறைகளுமே இத்தெய்வங்களுக்குரிய வணக்கமுறைகளாகும்."

தளவாய் குமார கோவில்பற்றி அவர் தரும் தகவலின் முக்கியமான விடயங்கள்:

"மண்ணாலோ கல்லாலோ கட்டப்பட்ட தனிப்பட்ட கோயில் கிடையாது. (கிராமத்தின் அல்லது காட்டின் மத்தியிலுள்ள குறிக்கப்பட்ட மரம் ஒன்றே கோயிலுக்குரிய நிலையமாகும்)"

"ஆண்டுக்கொருமுறை பந்தற்றோரணமிட்டு சடங்கு நடைபெறும். ஆவணி மாதம் கதிர்காமத்திற் தீர்த்தம் நடக்கும் அன்று இவர்களின் சடங்கு தொடங்கி ஏழு நாட்கள் நடைபெறும்."

"பூசை செய்யும் "பூசாரி" கப்புகனார் என அழைக்கப்படுகிறார். சன்னதம் கொண்டு ஆடுபவர்கள் "கட்டாடி" என அழைக்கப் படுகிறார்கள். பூசகரே தெய்வம் ஏறி ஆடுவார். இரண்டு மூன்று பூசகர் இருப்பர்.

மந்திரம் சொல்லப்படுவதில்லை. வேடபாசையில் பாட்டுக்கள் பாடப்படுகின்றன. பாட்டுடன் கொட்டு எனப்படும் பறையும் அடிக்கப்படுகிறது."

“ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான கொட்டு எனப்படும் பறையொலி உண்டு. அதற்குத் தகவே தெய்வம் பிரசன்னமாகி ஆடும். முதல்நாட்சடங்கில் கப்புகனார் வீட்டிலிருந்து குமாரசிலை, மடைச்சாமான்பெட்டிகளைக் கோயிலுக்கு கொண்டு வருதல், குமாரர், அம்மாள், கன்னிமார் மடைவைத்தல், தலைமைக் கப்புகனார் குமாரதெய்வத்திற்கு ஆடுதல், வண்ணான் வெள்ளை கட்டுதல், ஆலத்தித்தெய்வம் வந்தாடுதல் போன்ற சடங்குகள் நடைபெறும்.”

“இரண்டாம்நாட்சடங்கு உத்தியாக்கள் (இறந்தவர்கள்) கப்புகனார்மீது வர, வில் அம்பு எடுத்து ஆடுதல் நடைபெறும். மடை கலைக்கப்பட்டு, புதிய மடை வைக்கப்படும். பின், கப்புகனார் மீது குமாரகலை, அம்மன் கலை, தெவுத்தன் கலை, காட்டுத்தெய்வம், செம்பகனாட்சி, பொய்யனாட்சி, கடற்பகுதிமாறா, பணிக்கமாறா, வதனமாறா, பட்டாணி, புள்ளிக்காரன் ஆகிய தெய்வங்கள் வெளிப் படும். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதமான கொட்டும் ஒவ்வொரு விதமான வேடபாசை என அழைக்கப்படும் பாடலும் உண்டு.”

“தொடர்ந்து ஏழுநாட்கள்வரை நடைபெறும் சடங்கில், அயொத்தியாய, மாந்திய, மனமுந்த, குருவிலிமுந்த, எரிகனுமுந்த ஆகிய தெய்வங்கள் (கூடாதநோய்களைக் கொடுக்கும் தெய்வங்கள்) வெளிப் பட்டு வில், அம்பு எடுத்து விளையாடும்.”

“இறுதிச்சடங்கு நாடகத்தன்மை பொருந்திய சடங்காகும். அதற்கு முதல்நாளிரவு வினாசகப்பானை எழுந்தருளப்பண்ணுவார். அன்று பலகாரம் வடிக்கும் தெய்வம் வந்து முற்படும். அதற்குப் பலகாரம் வடிப்பர். அந்நேரம் மொட்டாக்குத்தெய்வம் முற்பட்டுப் பலகாரம் வடிக்கும். அதன்பின் நள்ளிரவில், வினாசகப்பானை தொடர்பான சடங்கு நடைபெறும்.”

“இறுதிநாட்சடங்கு பகல்வேளையில் நடைபெறும். இதற்கு உயரமான பந்தல் அமைக்கப்படும். அப்பந்தல் உச்சியில் மூன்று கும்பாகுடம், தென்னங்குருத்தோலை, வாழைமடல் கொண்டு அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்படும். மாறாத்தெய்வம் (வேட்டை ஆடும் தெய்வம்) கப்புகனாரில் முற்பட்டு ஆடும். மாறாத்தெய்வம் மீண்டும் வர உயரமான பந்தலில் ஏறி இறங்கும். அதன்பின் கப்புகனார் பக்தர்களால் கொண்டுவரப்படும் தேன்பூச்சி, பெட்டி, கோடாரி என்பவற்றை மற்றொரு வழியால் உயரமான பந்தலுக்குக் கொண்டுசெல்ல, தெய்வமும் ஏறி பந்தலுச்சியில் தேன்பூச்சியைத் தன் தலையிலும் கப்புகனார் தலையிலும் கொட்டி விளையாடி, மூன்று கும்பா குடங்களையும் கோடாரியில் கொத்தி வீழ்த்தும்.”

“பின், மாறாத்தெய்வம் கீழே வர, படகிடை மாறா என்னும் தெய்வம் தென்னம்பாளையின் பூக்களை இதன்மேல் எறியும். மாறாத்தெய்வம்

பூச்சி குத்தியதுபோலப் பாவனைசெய்து தலைக்கட்டாடியின் காலில் விழும். தலைக்கட்டாடி பூச்சிக்கடியின் அகோரம் தணிப்பார்."

"மேலும், பணிக்க மாறா தெய்வம், (யானை பிடித்தலுடன் சம்பந்தமானது) கடற்பகுதி, கப்பற்றெய்வங்கள், ஆச்சா தெய்வம், ஆக்கா தெய்வம் (இவை சிங்களத் தெய்வங்கள்) வைசூரி அம்மன், மணல்வாரி அம்மன், அம்மாள், சின்னமுத்து அம்மன்கள், புள்ளிக்காரத்தெய்வம் என்பனவற்றிற்கான ஆட்டங்களும் நிகழும். மற்றும் கன்னிமார் சடங்கும் (அதனுடன் இணைந்தவர்கள் தெவுத்தன், மாத்தளை தெவுத்தன்) இடம்பெறும்."

குமார தெய்வ சடங்குகள் தளவாயில் மட்டுமன்றி வேறு சில கிராமங்களிலும் இன்றும் நிகழ்த்தப்பட்டு வருகிறது. எனவே அவை பற்றிய தகவலைத் தேடியறிவது அவசியமாகிறது. மட்டக்களப்பு ஆலயங்கள் பற்றிய பதிவுகளில் "கிரான் குமாரகோயில்" இடம் பெற்றிருக்கிறது. இது அம்மக்களால் குமாரத்தன் கோவில் என அழைக்கப்படுகிறது.

கிரான் குமாரத்தன் கோயில் நிலையான இடத்தில் கல்லினால் அமைக்கப்பட்டிருக்கிறபோதும், அவை பந்தல்களாகவே அமைக்கப் பட்டுப் பந்தல்கள் என்றே அழைக்கப்படுகின்றன. வருடத்திற்கொரு முறை ஏழு நாட்கள் "சடங்கு" நிகழ்த்தப்படுகிறது. இன்று மக்கள் தினசரி வழிபாடு செய்து வருகிறபோதும், ஆகம முறையான பூசை நடைபெறுவதில்லை. ஐயர் வழிபாடு நடத்துவதுமில்லை. கப்புகனாரே கோயிற்பூசாரியாக விளங்குகிறார். தினசரி வழிபாடு "நடைப்பூசை" எனக் குறிப்பிடப்படுகிறது. இச்சொல், வருடாந்தம் நடைபெறும் "சடங்கு" எத்தகையது என்பதனைச் சுட்டிக்காட்டுகிறது. வருடாந்தம் நடைபெறும் "சடங்கு" பாரம்பரிய வழிபாட்டுமுறையாக விளங்குகிறது.

இக்கோயில் கிரானிலே குடியேறிய திருமலை, வன்னி உடையார் சாதியினரால் தோற்றுவிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. ஆனால், படுவான்கரையிலுள்ள 'லாவணி' எனும் இடத்தில் வேடர்கள் நிகழ்த்திய சடங்கிற் கலந்துகொண்டபோது, அவர்கள் சடங்கின் மடையொன்றினை வழங்கி, அதனை வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டாம், பொதுவிடத்தில் வைக்குமாறு கூறியதாகவும் அதன் வழியாகவே இக்கோயில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அவர்களுக்கும் மற்றும் ஊரிலுள்ள முக்கியகுடிகளுக்கும் ஏழுநாட் சடங்கினைச் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கப்புகனார் துறைக்காரர் குடியினரின் வம்சாவழி உரிமையாக அமைந்துள்ளது. துறைக்காரர் குடி என்பது துறைக்கடவைத் தொழிலைச் செய்பவர் எனும் தொழில் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால், துறைக்கடவை என்பது தற்போது ஆறும் துறையும் இருக்கும் இடத்திலன்றி முன்னர் வேறுபகுதியில் இருந்தது என்ற செய்தியும் கிடைத்தது. கோயில் ஊரின் மையத்தில்—

பிரதான வீதிக்கு அண்மையில் அமைந்திருக்கிறது. ஆனால், முன்னர் அப்பகுதி காட்டுப்பகுதியாக இருந்தது எனவும், முன்னர் குடியிருப்புக் கள் தற்போது "குடியிருப்புச்சேனை" என அழைக்கப்படும் இடத்தில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

வன்னியனார் எனும் சாதியினர் இங்கே வந்தமை பற்றிய பல செவிவழிச்செய்திகள் இன்றும் பேசப்படுகின்றன; பாடல்களும் உண்டு. வன்னியனார் என்பது யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள் எனவும் பிரித்தானியர் காலத்தில் சமூகத் தலைவர் களாக இருந்தவர்கள் என்ற செய்தியும் உண்டு.

இக்கோயிலின் பிரதானதெய்வம் குமாரர் அல்லது குமாரத்தன் தெய்வம் ஆகும். எனினும், இது கொழும்புக்குமாரன் என அழைக்கப் படுகிறதுடன், வாகனமாகக் குதிரையும் குறிப்பிடப்படுகிறது. குமாரருடைய உருவம், ஓர் அரசிளங்குமரனை ஒத்துள்ளது. பிரதான தெய்வமான குமாரர் அல்லது குமாரத்தன் பந்தல், பந்தலமைப்பிலன்றி சாதாரண கோயில் வடிவில் அமைந்திருக்கிறது. பிரதான பந்தல் வருடத்திற்கு ஒரு முறை நிகழும் சடங்கின்போதுமட்டுமே திறக்கப்படும்.

குமாரர், புள்ளிக்காரன், கழுக்குமார், அம்மாள் மற்றும் பிற பாரம்பரியத்தெய்வங்களுக்குப் பாரம்பரிய முறையிலமைந்த "சடங்கு" வழிபாடு நடைபெறும். சடங்கு பெருமளவுக்குப் பாரம்பரியம் சிதைவடையாது இடம்பெற்றுவருகிறது. தெய்வங்களுக்கெனத் தனியான சிலைகள் இல்லை. பந்தலில் பீடங்கள் காணப்படுகிறன. கழுக் குமாரருக்குக் கழுமரம் குறியீடாக உள்ளது. இக்கோவிற்சடங்கில் கானந்தனை—முறுத்தானைப்பகுதி வேடர்களில் "தலைச்சான்கள்" (மூத்தோர்கள்) கலந்து பணிவிடைகள் செய்வார்கள்.

சித்தாண்டி முருகன் கோவில் வரலாற்றுப்பெருமை வாய்ந்த முருகன் கோவிலாகும். இக்கோவில் திருவிழாவிலும் வேடர்கள் கலந்து கொள்வார்கள். தேன் போன்ற பொருட்களைப் கொண்டுவந்து தருவார்கள் என்ற தகவலும் சொல்லப்பட்டது. ஆனால், இக்கோயிலின் மேற்கே வெளிவீதியில், குமாரருக்கெனத் தனியான ஒரு கோவில் உண்டு. இக்குமாரருக்குத் தனியான சடங்கும் நடைபெறுவதுண்டு. அதனுடன் ஊர்ப்பகுதிகளில் வாழும் வேடர்கள் தொடர்பு பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது. கழுமரமும் ஆயுதங்களும் வைத்து சடங்கு நிகழ்த்தப்படுகிறது. சித்தாண்டி முருகன் கோவில் இன்று மக்கள் செறிந்து வாழும் பகுதியாக உள்ள போதும், முன்னர் காட்டுப்பகுதியாக இருந்ததாகவும், முன்னர் குடியிருப்பு படுவான்கரைப்பகுதியில் அமைந்திருந்ததாகவும், இப்பகுதி இன்றும் குடியிருப்பு என்றழைக்கப்படுவதாகவும் அறியமுடிந்தது.

கிரான் மற்றும் சித்தாண்டியில் சொல்லப்பட்ட தகவல்களில், இவ்விரண்டு இடங்களிலும் முன்னர் குடியிருப்பு அமைந்திருக்க வில்லை என்பதுவும் அது வேறு இடங்களில் அமைந்திருந்தது

என்பதுவும் அப்பகுதிகள் தற்போதும் குடியிருப்புக்கள் என அழைக்கப்படுவதும் கவனிப்பிற்குரிய தகவலாகும். கிரான், சித்தாண்டி எனுமிடங்களில் தற்போது மக்கள் வாழும் பகுதி, பிரித்தானியர் காலத்தின்பின், மட்டக்களப்பு, திருமலை வீதி அமைக்கப்பட்ட பின்னரே ஏற்பட்டிருக்கலாம்.

மட்டக்களப்பு நகரின் விளிம்புப்பகுதியென அடையாளங் காணக்கூடிய ஜெயந்திபுரத்திலும் குமாரர்கோவில் உண்டு. இது தற்போது முருகன் கோவிலாக மாற்றமடைந்து வருகிறது. கோவிலின் பெயரும் “ஸ்ரீ குமாரத்தன் (முருகன்) ஆலயம்” என்றே உள்ளது. பிரதான கோவில் முருகன் என்றே அமைந்துள்ளது. அங்கு ஆகமமுறையிலமைந்த பூசையே நடைபெறுகிறது.

ஆனால் குமாரருக்கென்று சிறுகோவில் உண்டு. இக்குமாரர் கோவிலில் குமாரருக்கான சிலையும் வைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள பிரதான கோவிலில் உள்ள முருகன், வள்ளி தெய்வானை உடனற்றவர்; அதாவது, பாலமுருகன். முருகன் ஏனைய இடங்களிலுள்ளதுபோல் வலக்கையில் வேல் ஏந்தாது இடதுகையில் வேல் ஏந்தி நிற்கிறார் என்பது ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடாகும். அவரைச் “சுப்பிரமணியர்” என அடையாளப்படுத்திப் பூசை நடைபெற்றது.

முருகன்கோவில் வருடாந்தப்பூசையானது, முதலில் குமாரருக்குப் பந்தலிட்டு வேடர்களால் நடாத்தப்படும் சடங்காகவே அமைந்துள்ளது. அதன்பின்பே முருகன்கோவில் திருவிழா நடைபெறும். நீண்டகாலமாகக் குமாரசடங்கினை அப்பகுதியில் வாழ்ந்த வேடர்களே நடத்தியுள்ளார்கள். அண்மைக்காலத்தில் வேறு பகுதிகளிலிருந்து (ஊர்ப்பகுதி) வந்து வேடர்கள் சடங்கை நடத்தியிருக்கிறார்கள்.

இதற்கப்பால், மட்டுநகர் ஸ்ரீமாமாங்கப்பிள்ளையார் ஆலயவரலாறு (திரு.நாகையா—1996) எனும் நூலில், “வேட்டை காரணமாக இப்பகுதிக்கு வந்த விந்தனை வேடர்கள் இங்கு குடியேறி, கொத்துப் பந்தலிட்டு ஆலயம் அமைத்தனர். தமது குலதெய்வமான முருகனுக்கும் வீரபத்திரனுக்கும் கோயில் அமைத்தனர்” எனவும் “இன்றும் வருடாந்த விழாவில் வேடர் சந்ததியினர் பங்கேற்று வருகின்றனர்” என்ற குறிப்பும் மாமங்கன் எனும் வேடனும் பிள்ளையான் எனும் குருகுலத்தவனும் சேர்ந்து அமைத்ததால் இது மாமங்கப்பிள்ளையார் ஆலயம் எனப்பட்டது என்ற குறிப்பும் காணப்படுகிறது. (மட்டக்களப்பு வரலாற்று அடிச்சுவடிகள், இணையப்பிரதி. பக்.—113).

மட்டக்களப்பு சைவக்கோயில்கள் பற்றிய நூல்களில் (வீசிகந்தையா, 1983) “கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் வேடர்களால் ஆரம்பிக்கப்பட்டது” (மட்டக்களப்பு வரலாற்று அடிச்சுவடிகள்— இணையப்பிரதி. பக்.115) என்ற குறிப்பும் காணப்படுகிறது. இக்குறிப்புகள் வேடர்கள் மட்டக்களப்பின் வரலாற்றில் பெற்றிருக்கக்கூடிய முக்கியத்துவத்தினை நன்குணர்த்துகிறது.

மட்டக்களப்பின் பூர்விககுடிகளின் குமாரதெய்வமும் குமாரதெய்வ வழிபாட்டுமுறையும் முருகனுடனும் முருகவழிபாட்டுடனும் இணைத்து நோக்கப்படுகிறன. ஆயினும், இவையிரண்டும் வேறுபட்டவை. இவ் வேறுபாட்டை அறிந்துகொள்ளக் குமாரதெய்வம் மற்றும் குமார தெய்வ வழிபாட்டுமுறைகளின் முக்கியமான அம்சங்களை ஊன்றிக் கவனிக்கவேண்டியிருக்கிறது.

குமாரதெய்வமும் குமாரதெய்வச்சடங்கும் ஏனைய தெய்வங்களிலிருந்தும் வழிபாட்டுமுறைகளிலிருந்தும் வேறுபட்டமைவதனைக் கலாபூஷணம் க.மகேஸ்வரலிங்கம் அவர்கள், "மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்" (2008) என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ளார். இவர் குமாரதெய்வத்தினை முருகன் எனக் குறிப்பிடுகிற போதும் குமார தெய்வத்தினதும் அச்சடங்கினதும் தனித்துவமான பல அம்சங்களை இனங்கண்டுள்ளார்:

"குமாரதெய்வம் சிறுதெய்வம் அல்லது சுதேசதெய்வமாகும். இது மட்டக்களப்புக்கு மட்டும் உருத்துடைய தெய்வங்களில் ஒன்று."

"குமாரதெய்வச்சடங்குமுறை, ஆகமவழிபாட்டிற்கும் தெய்வம் ஆட்டுகின்ற பூசாரி வழிபாட்டிற்கும் வேறுபட்ட ஒன்றாகக் காணப்படுகிறது."

"குமார தெய்வம் தவிர ஏனைய தெய்வங்களிற்கு விக்கிரகம் எதுவும் பயன்படுத்தப்படுவதில்லை."

"கும்பங்கள் வைக்கப்படுவதில்லை. மடைகள்மாத்திரம் வைத்துத் தெய்வங்கள் அழைக்கப்படுகின்றன."

"ஏனைய தெய்வமாடுகின்ற சடங்குகள்போல உருக்கொடுத்தல், கட்டுதல், வெட்டுதல் முதலிய நிகழ்ச்சிகள் இடம்பெறுவதில்லை."

"சடங்குகள் தெய்வங்களை மன்றாடுகின்றமுறையில் அல்லது வேண்டுதல் செய்கின்றமுறையில் நடத்தப்படுகிறன."

"பூசகர் அல்லது கப்புகனும் உருக்கொண்டு ஆடுபவரும் ஒருவரே. கப்புகன் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வோர் உருவத்தையும் வேண்டுதல் செய்துதான் உருக்கொண்டு ஆடிவருவார். கப்புகன் தெய்வங்களுக்குரிய ஆடைகளை அணிந்து ஆடிவருவார். கப்புகனார் தெய்வத்திற்குத் தக்கபடி ஆயுதங்களும், நடித்தல், அபிநயித்தல் என்பனவும் செய்வார். கப்புகனார் சிலம்புச்சதங்கைகளை அணிந்து ஆடுவார்."

"சடங்கில் கட்டுச் சொல்லப்படும். ஆட்டத்திற்கு ஏற்பக் கொட்டு அல்லது பறை அல்லது மத்தளம் அடிக்கப்படும்."

"கப்புகனார் தெய்வங்களாக மாத்திரமன்றி இறந்துபோன மனிதர்களாகவும் உருக்கொண்டு ஆடுவார் போன்ற தகவல்களைத் தனது நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இத்தகவல்கள் முருக வழிபாட்டிற்கும் குமாரச்சடங்கிற்கும் இடையிலான வேறுபாட்டை உணர்த்திநிற்கின்றன."

கலாநிதி சி. மௌனகுரு அவர்களும், "முருகனையே இவர்கள் குமாரர் என அழைப்பர்" (பக்.111) எனக் குறிப்பிடுகிறபோதும் குமாரருக்கும் முருகனுக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டியுமிருக்கிறார்.

"முருகன் போன்ற பெருந்தெய்வவணக்கமுறைகளும் காணப் படுகின்றன. இக்கோயில்களில் ஆகமவிதிப்படி பிராமணர்களே பூசை செய்கின்றனர். இக்கோயில்களிலே தினப்பூசை நடைபெற்று ஆண்டுக்கொரு விழாவும் நடைபெறுகின்றது. பிராமணர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்களாவர். இவ்வழிபாட்டுமுறை மிகப் பிந்தி வந்திருக்கவேண்டும்." (பக்.103) எனவும் குறிப்பிட்டுள்ளார்.

"பிற்காலத்தில் வெளிநாட்டார் குடியேற்றத்தினாலும், கலாசாரத்தினாலும் குமாரதெய்வக்கோவில்கள் பெருந்தெய்வக் கோயில்களாயிருக்கலாம்" (பக்.102) எனக் குறிப்பிடுகிறார். மேலும் "பழைய தெய்வங்களான குமார, மாறா போன்ற தெய்வங்கள் முருகனுடன் சம்பந்தப்படுத்தப்பட்டன" எனவும் "மட்டக்களப்புப் பகுதியிலும் கிராமியத்தெய்வங்களையும், வழிபாட்டுமுறைகளையும் சைவ, வைணவ வணக்கமுறைகள் அணைத்துக்கொண்டன" எனவும், பெருந்தெய்வங்கள் இவற்றைத் தம்முடன் இணைத்துக்கொள்வதற்குப் பதிலாகச் சிறுதெய்வங்கள் பெருந்தெய்வவணக்கத்தைத் தம்மளவில் உள்வாங்கிக்கொண்டன எனவும், "இங்கிருந்த சிறுதெய்வவ ழிபாடுகளினதும் சமூக அமைப்பினது செல்வாக்குமே இதற்குக் காரணம்" எனவும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் குமாரதெய்வ வழிபாட்டுமுறையை "நாடக அமிசம் நிரம்பிய சடங்குகள்" என்றே அவர் குறிப்பிடுகிறார்.

இதனைவிட, "முருகன், பிள்ளையார், சிவன், திருமால் போன்ற பெருந்தெய்வங்களைப் பந்தலிட்டு வணங்கும் வழக்கம் இங்கில்லை. அத்தெய்வங்களுக்குக் கற்கோயில்களே உள்ளன. அவற்றிற்குரிய வணக்கமுறைகள்கூட வித்தியாசமானவை. தெய்வவணக்கமுறைகளுக் குரிய சன்னதம் கொண்டாடல், காவியம் பாடல், உடுக்கு அடித்தல், மடைவைப்பு, மந்திர உச்சாடனம் என்பன இப்பெருந்தெய்வக் கோயில்களில் இல்லை என்பது அவதானித்திற்குரியது" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தற்போதும் குமாரவழிபாட்டைப் பேணுவோரும் குமாரரையும் முருகனையும் ஒன்றாகவே கருதுகின்றனர். புராதனகாலத்தின் குமாரதெய்வவழிபாட்டுமுறைகள் பல மாற்றங்களுக்கு உட்பட்டே தற்காலத்திற் பேணப்பட்டுவருகிறன. குமாரர்கோவில்கள் முருகன் ஆலயங்களாக மாற்றவும்பட்டுள்ளன. ஆயினும், அவற்றிலும் குமாரருக்கும் முருகனுக்கும் இடையிலான வேறுபாடுகளை அவதானிக்கமுடிகிறது.

ஜெயந்திபுரம் கோவிலில் குமாரதெய்வம் கற்சிலையாக அமைந்திருக்கிறது. இது பிள்ளையார் கற்சிலையிலிருந்து சற்று

வேறுபட்டது. ஏனைய குமாரகோவில்களில் இரும்பிலான வாள், கத்தி போன்ற ஆயுதங்களே வழிபடப்படுகின்றன.

குமாரதெய்வம் தனியொரு தெய்வவழிபாடாக இல்லாமல் பல்தெய்வவழிபாடாகக் காணப்படுகிறது. அதில் முக்கியமானது கழுக்குமாரராகும். இதற்குக் கழுமரம் குறியீடாகவுள்ளது. கிரானிலும் சித்தாண்டியிலும் இதனைக் காணலாம். புள்ளிக்குமாரன் எனும் தெய்வமும் முக்கியமானதாகும். இஃது அம்மைநோய்க்குரிய தெய்வமாக விளங்குகிறது. இவற்றைவிட வேறு பல தெய்வங்களும் காணப் படுகிறன்றன.

குமாரதெய்வவழிபாட்டுமுறை சடங்கு எனப்படுகிறது. இச்சடங்குமுறைகள் ஏனைய வழிபாடுகளிலிருந்து வேறுபட்டன. தினப்பூசைகள் நடைபெறுகின்றபோதும் அவற்றிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

குமாரதெய்வச்சடங்குமுறைகளில், குமாரகலை, இராசகலை, வேடகலை ஆகிய கலைகள் குறிப்பிடப்படுகிறன. இக்கலைகளைத் தெய்வங்களின் உட்பிரிவுகள் எனவும் அவை ஆதிக்குமாரர், கொழும்புக் குமாரன், அழகுக்குமாரர், கண்டிக்குமாரர், புள்ளிக்குமாரர், காலிக் குமாரர் எனவும் குறிப்பிடுவர்.

சடங்கை நடத்துபவர் பூசகர் எனப்படுவார். இவர் கப்புகன் என அழைக்கப்பட்டாலும், கப்புகன் முறையிலிருந்து இச்சடங்கு வேறுபட்டமைகிறது. குமாரதெய்வச்சடங்கில் மந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை; பூசகர் அல்லது கப்புகன் தெய்வமாக உருக்கொண்டு ஆடுவார்.

தெய்வத்திற்குரிய ஆட்டமுறைகள் தனித்தனியானவை. சலங்கையணிந்து, வெவ்வேறு ஆடைகளுமணிந்து ஆட்டம் இடம் பெறும்; நடித்தல், அபிநயித்தல் இடம்பெறும்; கட்டும் சொல்லப்படும்.

சடங்குகள் தெய்வங்களை மன்றாடுகிற முறையில் அல்லது வேண்டுதல்செய்கின்ற முறையில் நடத்தப்படுகிறது. வழிபாட்டு முறையில் மன்றாட்டுமுறை முக்கியமானதாகும். குமாரர் மன்றாட்டுத்தெய்வமாகவே கருதப்படுகிறார். இவற்றிலிருந்து குமாரர்— குமாரவழிபாடும் முருகன் — முருகவழிபாடும் வேறுபட்டதனை அறியமுடிகிறது.

குமாரவழிபாடும் முருகவழிபாடும் மட்டக்களப்பில் புராதன காலத்திலிருந்து நடைபெற்று வருபவையாகும். முருகவழிபாடும் குமாரவழிபாடுபோல் தொன்மையான வழிபாட்டுமுறை என்பதானாலுங்கூட, இரண்டும் புராதனகாலத்தில் வேடர்களுடன் தொடர்புபட்டிருப்பதனாலும், முருகனுக்கு வேல் குறியீடாகவும் குமாரருக்கு ஆயுதங்கள் குறியீடாகவும் அமைந்திருப்பதனாலும் இரண்டும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கலாம். சமூகமேல் நிலையாக்கத்தினால் பிற்காலத்தில் முருகவழிபாடு ஆகம

முறைக்கமைவாக மாற்றம்பெற்றுள்ளது. அதன்பின்னர் குமாரர் வழிபாடும் ஆகமமுறையிலமைந்த முருகவழிபாடாக மாற்றம் பெற்றுள்ளது. இதன்காரணமாக குமாரவழிபாட்டில் பழைய வழிபாட்டெச்சங்களை இன்றும் காணமுடிகிறது.

இதேவேளை, 'மட்டக்களப்பிலுள்ள திருப்படைக்கோவில்களான பிரசித்திபெற்ற முருகன்கோவில்கள் முன்னர் குமாரர்கோவில்களாக இருந்தனவா' என்ற கேள்வியும் எழுகிறது. மண்டூர் முருகன் ஆலயத்தில் உட்பிரவாகத்தில் சிறிய குமாரர்கோவில் இருப்பது இதனை உறுதி செய்கிறது. சித்தாண்டி முருகன் ஆலயத்தின் வெளிப்பிரவாகத்தில் குமாரர் ஆலயம் இருக்கிறது. தற்போதுள்ள குமாரகோவில்கள் முருகன் கோவில்களாக மாற்றப்படுகின்றமையும் இக்கருத்தினை உறுதி செய்கிறது.

குமாரர் — முருகன் தொடர்பினை மேலும் அறிவதற்கு, பேராசிரியர் நா.வானமாமலை அவர்களின் 'தமிழர் பண்பாடும் தத்துவமும்' *(1973)* எனும் நூலிலுள்ள, 'முருக—ஸ்கந்த இணைப்பு', 'பரிபாடலில் முருகவணக்கம்' ஆகிய கட்டுரைகள் உதவுகின்றன. வானமாமலை அவர்கள், "மரவழிபாடு, வேல்வழிபாடு உருவவழிபாட்டிற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவை என்பதை மானிடவியலாளர்கள் விளக்கியுள்ளனர்" எனவும் "தமிழ்நாட்டில் வரலாற்று முற்காலமான *(கி.மு.1150)* ஆதிச்சநல்லூர் தாழி அடக்ககாலத்திலேயே ஆரம்பகால முருகவணக்கம் குறித்த சேவல் உருப்பொறித்த திரிசூலம், தங்கவாய்மூடிகள் போன்ற சான்றுகள் கிடைத்துள்ளன" எனவும் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய தாழி அடக்கமுறைகள் மட்டக்களப்பு—கதிரவெளிப்பகுதியிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதுவும் பிரசித்திபெற்ற முருகன்கோவில்கள் முன்னர் வேல் அல்லது திரிசூலம் வைத்து வழிபடப்பட்டது என்ற செய்தியும், குமாரர் ஆலயங்களில் முன்பாக திரிசூலம் வைக்கப்படும் வழக்கம் காணப்படுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது.

இதனைவிட முருகவணக்கமுறைகுறித்து தகவல் கூறப்பட்டுள்ளது. "தமிழ்நாட்டில் மிகப்பழமையான வணக்கமுறைகளில் முருக வணக்கமும் ஒன்று என்ற உண்மையை அனைவரும் ஏற்றுக்கொள்வர். பழந்தமிழ் இலக்கியத்தில் முருகு, முருகன் என்ற இருபெயர்களுடைய தெய்வங்களும் ஒரே தெய்வத்தையே குறிப்பிடுகின்றன. வேலன் இத்தெய்வத்தின் பூசாரி." *(பக்.06)*

"முதல்நிலையில் இத்தெய்வக்கருத்து குறிஞ்சிநிலவாழ்க்கையில் தோன்றியிருக்கவேண்டும். கற்கருவி நாகரிகம் மறைந்து, உலோக நாகரிகம் தோன்றி இரண்டும் கலவையாக நிலைபெற்றகாலத்தில் உலோகக் கருவிகளுக்கும் அக்கருவிகளைப் பயன்படுத்துவோருக்கும் ஏற்பட்ட மதிப்பினால், வேலைப் பயன்படுத்தும் ஒரு தெய்வம் பண்டைத் தமிழர்சிந்தனையில் மதிப்புப்பெற்றது. வேலைத்தாங்கிய பெண் தெய்வங்கள் இருந்ததில்லை.

"பழங்காலக்குறவர், எயினர், தானவர் போன்ற குறிஞ்சிநிலமக்கள் புஞ்செய் அல்லாது நஞ்செய் பயிர்த்தொழிலை மேற்கொண்ட ஆரம்பகாலத்தில் தோன்றிய கடவுட்கருத்து முருகன் ஆகும்."

தமிழ்நாட்டில் மூன்றாம் நூற்றாண்டிற்கும் ஏழாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் ஸ்கந்தபண்பாடு முருகவணக்கத்தோடு இணைந்து ஒன்றுபடுகிறது.

வடநாட்டில் இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் வரும் ஸ்கந்தன் பற்றிய கதையானது, இனக்குழுச்சிறுதேவதைகளில் ஒன்றாகவிருந்து பெருந்தெய்வமானவன் என்பதைப் புலப்படுத்தும். "இந்திரன் பழைய வேதப்பழங்குடிகளில் சிறுவினக்குழுத்தலைவர்களின் சாயலில் இந்திரலோகத்தில் குழுத்தலைவனாகப் படைக்கப்பட்டவன். வேத காலத்தில் மிகப் பிரபலமடைந்திருந்த இவன் செல்வாக்கு குன்றியவன் ஆனான். ஏன்? குழுக்கள் (சிறுமாடு மேய்க்கும் குழுக்கள்) பெரியவை ஆயின. சிலகுழுக்கள் கற்கருவி நிலையினின்றும் 'உலோகக்கருவிநிலை'க்கு முன்னேறின. அப்பொழுது, அவர்கள் கருத்துலகிலும் மாறுதல் தேவையாயிற்று. சிறுகுழுத்தலைவன், பெருங்குழுவைப் பாதுகாக்கும் வலிமையற்றவனாகக் கருதப்பட்டான். பெருங்குழு பல போர்களில் ஈடுபடவேண்டியதாயிற்று. அதற்கேற்றபடி, உடல்வலிமையும் இளமையும் போர்த்துடிப்பும் சிறந்த போர்க் கருவிகளும் உடைய படையும் அதனைக் களத்தில் நடத்துவதற்குத் தலைவனும் வாழ்க்கையில் தேவையாயினான். கருத்துலகில் இதன் பிரதிபலிப்பாக இந்திரனுக்குப் பதிலாக ஒரு போர்க்கடவுள் தேவையாயினான்" என வானமாமலை குறிப்பிடுகிறார்.

ஸ்கந்தன் எதிரிகளோடு போராடச் சக்திவாய்ந்த ஒரு புதிய சேனாதிபதி, சிறுகுழு பெருங்குழுவாகும்நிலையில் பல குழுப் போர்களை நடாத்தும் வலிமைமிக்க போர்க்கடவுள். இக்கருத்துகள் மட்டக்களப்பிலுள்ள குமார முருகவழிபாடுபற்றி புதியவகையில் நோக்க வேண்டி தேவையை உணர்த்துகிறது. மேலும் முருகவழிபாடு குறித்து "முருகனை களத்திலும், ஒரு மன்றிலிலும் வெறியாடி வழிபடுவது பெருவழக்கமாயிருப்பினும், அபூர்வமாகச் சிலவிடங்களில் முருகனுக்குக் கோவில்கள் இருந்தனவென்பதைப் புறநானூற்றில் வரும் முருகன்கோட்டம் என்ற தொடர் காட்டும்.

பழைய முருகவழிபாட்டுமுறைக்கும் பரிபாடல், திருமுருகாற்றுப் படை ஆகிய நூல்கள் (சங்ககால இலக்கியம்) காட்டும் முருகவழிபாட்டு முறைக்கும் வேறுபாடுகள் காணப்படுகிறது" எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், "இளமை, உற்சாகம், மதுவெறி, அழகுணர்ச்சி, காதல், தீமையை ஒழிக்கும் தன்மை, பிறரைக் காத்து நிற்கும் பண்பு இவற்றையெல்லாம் திரட்டி தெய்வவடிவாக உலகில் பல பாகங்களிலும் இலக்கியம் செய்திருக்கிறார்கள் பண்டைக்கால மக்கள். இவர்களுள் இந்தியத் தெய்வங்கள் ஸ்கந்தனும், முருகனும் உள்ளடங்குவர்" (பக். 3) எனக் குறிப்பிட்டுள்ளதுடன், கிரேக்கதெய்வமான பாக்குஸ் டயோனிஸால்,

பழைய ஏற்பாட்டில் வரும் தீர்க்கதரிசி மோசஸ் போன்ற கடவுள்களும் இத்தன்மைகொண்டவர்கள் என்ற முடிவினையும் வானமாமலை குறிப்பிடுகிறார்.

"முடிவில் முருகன் போன்ற தெய்வங்கள் உலக முழுவதிலும், பழங்குடி மக்கள் நிலியிலிருந்த சிறு குழுக்கள், நிலைத்த நாகரிகமடையும் போது உலோக உபயோகத்தைக் கற்றுக் கொண்டு பெருங்குழுக்களாக மாறும் காலத்தில், இளமை, வலிமை, போர்த்திறன், காதல் இயல்பு, இயற்கையை வெல்லும் திறன் (தீயையும் நீரையும் அடக்குபவன்) இவை போன்ற தன்மைகளே உருவான கடவுள்களை மக்கள் கற்பனை செய்துள்ளார்கள். சமூக வளர்ச்சியின் ஏகதேச ஒற்றுமையால் தமிழ்நாட்டுமுருகன் கருத்துவளர்ச்சியும் ஒப்பிடத்தக்கனவாயுள்ளன" (பக்.29) எனக் குறிப்பிட்டுள்ளார். இவை மட்டக்களப்பின் முருக மற்றும் குமார வழிபாடுபற்றி ஒரு புதிய ஆய்வு அணுகுமுறையை எமக்குத் தருகிறது.

இதற்கப்பால், கிராமியத்தெய்வங்கள் பற்றிய ஆய்வுகள் உணர்த்தி நிற்கும் விடயங்கள் குறித்தும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. முன்னர் கொழும்பில் நடைபெற்ற "நாட்டார் வழக்காறுகள்" தொடர்பான கருத்தரங்கில் இந்திய—இலங்கை தமிழறிஞர்கள் இது குறித்து விரிவான ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பித்து கலந்துரையாடல்களையும் மேற்கொண்டிருந்தார்கள். இக்கருத்தரங்கில், குறித்தசமூகத்தின் காவலர்களாக அல்லது நெருக்கடியான காலங்களிற் போரிட்டு அச்சமூகத்தினைக் காத்துநின்றவர்களே கிராமியத் தெய்வங்களாக விளங்குகிறார்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அத்துடன், ஒரு சமூகத்தில் ஏதோ ஒரு காரணத்திற்காக ஒருவர் தண்டிக்கப்படும்போது (குறிப்பாக, பெண்கள்), அவர்களால் தம் சமூகத்திற்குத் தீங்கு ஏதும் நேரலாம் என்ற அச்சம் காரணமாக, அத்தீங்குகளிலிருந்து தங்களைக் காப்பாற்றும் வண்ணம் தண்டிக்கப்பட்டவர்களைத் தெய்வங்களாக வழிபடும் முறையும் உண்டு எனவும் கூறப்பட்டது. தமிழ் நாட்டில் மேற்கொண்ட களவாய்வுகளில் சில கிராமியத்தெய்வச்சிலைகள், காயம்பட்ட அடையாளம் கொண்டோ அல்லது அங்கவீனமான நிலையில் இருப்பதுவும் கண்டறியப்பட்டது எனவும் விபரிக்கப்பட்டது. கண்ணகி சங்க இலக்கியங்களில் "ஒரு முலையறுத்த பெண்ணாக" சித்தரிக்கப்படுவதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும். இதேபோல, பெரும்புகழ் வாய்ந்த காரைக்காலம்மையார் எலும்புருவம், பேயுருவம் தாங்கியமையும் தலையால் நடந்து சென்று இறைவனை தரிசித்தமையும் அவர் வாழ்ந்த இடத்தினை நாயன்மார்களில் ஒருவர் தரிசிக்க அஞ்சி நின்றமையும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

மட்டக்களப்பில் குமாரவழிபாட்டில், கழுக்குமாரர் வழிபாடும் இடம்பெறுவதுண்டு. இதற்குக் கழுமரம் குறியீடாகும் என்பது ஒரு கனத்த தகவலாகும். சித்தாண்டிக்குமாரசடங்கில், பூசாரி ஆடும்போது

கழுமரத்திற் தலையை முட்டுவது போன்ற பாவனை செய்வார் எனக் கூறப்படுகிறது. அதேவேளை ஜெயந்திபுரம் குமார ஆலயத்தில் குமாரசிலைக்கு ஒரு கண் சிவப்பினால் பொட்டு இடப்பட்டிருந்த தனையும் அவதானிக்கமுடிந்தது. இது தற்செயலானதா அல்லது மேலே விபரித்தது போன்ற சமூகச்செய்திகளை மையமாகக் கொண்டு, அதன் எச்சநினைவாக வைக்கப்பட்டதா எனபதனை அறிய வேண்டும்.

உலகிலுள்ள பண்டைக்காலமக்கள்போல, மிகப்பண்டைக்காலத்தில் மட்டக்களப்பில் வாழ்ந்த மக்களின் சமூகவளர்ச்சிநிலை, வேல் வைத்து வழிபடுதல், குமாரவழிபாடு, புராதன முருகவழிபாடு போன்றவை குறித்து நிற்கிறது என்ற முடிவிற்கு வரவேண்டியவர்களாயிருக்கிறோம். குமாரவழிபாடு பின்னர் முருக வழிபாடாக மாற்றம்பெற்றதா அல்லது அவை இரண்டும் தனித்துவமானவையாக வளர்ச்சி பெற்று சில இடங்களில் ஒன்றிணைக்கப்பட்டனவா என்பதுவும் அறியப்பட வேண்டும். கிரான் போன்ற இடங்களிற் குமாரவழிபாடு இன்னமும் பழையமரபுகளுடன் பேணப்படுகிறது.

எச்சமூகக்காரணத்தினால் புதிய இரும்பினாலான திரிசூலம் அல்லது வேலாயுதம், அதுபோல கத்தி, வாள் போன்றவற்றையும் இவர்கள் வழிபட்டார்கள் என்பதுவும் போர்த்தெய்வம் ஒன்றை வழிபடும் தேவை என்ன என்பதுவும் ஆய்வு செய்யப்படவேண்டும். கிழக்குப்பிரதேசத்தில் இடம்பெற்ற குலக்குழுப்போர்கள், பொருளாதாரமாற்றங்கள் போன்றன குறித்து ஆய்வு செய்யவேண்டும். சிங்களவரலாற்றுநூல்களிற் சொல்லப்பட்டுள்ள இயக்கர்கள் அழிக்கப் பட்டமை, கிழக்கில் நடைபெற்ற போர்கள், கண்டி இராசதானிக் காலத்தில் கிழக்கில் இடம்பெற்ற போர்கள், மட்டக்களப்பு வரலாற்றிற் சொல்லப்பட்ட திமிலர்மீதான போர் போன்றன குறித்து நாம் கவனம் செலுத்தவேண்டும்.

எனவே, சிங்களவரலாற்றுநூல்களில் கிழக்குப்பிரதேசம்பற்றிக் கூறப்படும் செய்திகளை அறிவதும் புராதன தொல்பொருட்சான்றுகள் குறித்த தேடலை மேற்கொள்வதுவும் இவ்விடயம் குறித்து மேலும் அறிந்து கொள்வதற்கு அவசியமாகும்.

# 5. இலங்கை வரலாற்று ஆவணங்கள் தரும் தகவல்கள்

மட்டக்களப்பு வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ள தகவல் களையும் மட்டக்களப்பின் பூர்விக குடிகளாகக் கருதப்படுகின்ற வேடர்கள் மற்றும் அவர்களின் வழிபாட்டுமுறைகள்பற்றி அறிந்துகொண்ட தகவல்களையும் "இலங்கை வரலாற்று ஆவணங்கள்" கூறும் தகவல் களுடன் இணைத்து நோக்க வேண்டியது அவசியமாகும்.

இலங்கையின் மிகப்பண்டைய வரலாற்றை அறியக்கூடிய வரலாற்றாவணங்களாகத் தொல்லியற்சான்றுகள், பிராமி சாசனங்கள், இலக்கியச்சான்றுகள் விளங்குகின்றன. ஆயினும், இலங்கையின் ஆரம்பகாலவரலாறு, இலக்கியச்சான்றுகளிலேயே அதிகம் தங்கியுள்ளது.

## இலங்கையின் தொல்லியற்சான்றுகள் தரும் தகவல்கள்

சேனக்க பண்டாரநாயக்கா அவர்கள், "மனிதக்குடியிருப்புப்பற்றிய நீண்டதொரு வரலாற்றைக்கொண்ட இலங்கையில் இத்தகைய மக்கள் குடியமருகையின் சிக்கலான செயன்முறையைக் கவனத்திற்கொண்டு நோக்கும்போது, இலங்கைமக்கள் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்திலும் ஆதிவரலாற்றுக்காலத்திலும் இன்றுபோல் பல்லின இயல்பினராயிருந்த ரென நம்ப இடமுண்டு" (பக்.15) எனக் குறிப்பிடுகிறார். அவர் இலங்கையிற் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற்சான்றாதாரங்களைப் பற்றி விபரிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடுகிறார். இங்கு சேனக்க பண்டாரநாயக்கா இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் ஆதிவரலாற்றுக்காலம்பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதே கவனத்திற்குரிய விடயம், இது கி.மு. 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமாகும். அக்காலத்தில் பல்லியல்பினரான மக்களே இலங்கையில் வாழ்ந்துள்ளார்கள் என்பது அவருடைய கருத்து.

ஆதிகாலத்தில் இலங்கையில் வாழ்ந்த பல்லியல்பினரான மக்களில், மட்டக்களப்பில் பூர்விககாலத்தில் வாழ்ந்த மக்கள் பற்றி அறிந்து கொள்ளமுடியுமா என்பதுவே நம் முன்னுள்ள வினாவாகும்.

மட்டக்களப்பின் பூர்விகவரலாறு மட்டுமல்லாது, தமிழ்மக்களின் வரலாறு தொடர்பில் காணக்கூடிய சிக்கலை "இலங்கைத் தமிழ்மக்களின் வரலாறு சிங்களமக்களுடைய வரலாற்றைப்போல எளிதான ஒரு தனிச்செயன்முறையன்று.." (பக்.21) எனச் சேனக்க பண்டாரநாயக்கா குறிப்பிட்டுள்ளதன் மூலம் உணரமுடிகிறது. இவ்விடயமே அதாவது "ஒரு தனிச்செயன்முறையற்ற தமிழ் மக்கள் வரலாறு" மட்டக்களப்பின் பூர்விகவரலாற்றைக் கண்டறிவதிலுள்ள பிரச்சனையாகவும் அமைந்துள்ளது. எனினும், இவ்விடயம் குறித்த ஆய்வினைத் தூண்டுவதற்குப் போதுமானளவு சான்றாதாரங்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் ஆதிவரலாற்றுக்காலம், பெருங்கற்காலப் பண்பாடு எச்சங்கள் மூலம் அறியப்பட்டுள்ளது. ஆதிவரலாற்றுக்காலத்திற்குரிய பெருங்கற்காலப்பண்பாட்டெச்சங்கள் (ஈமச்சின்னங்கள்) மட்டக் களப்பிலே கதிரவெளியிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது முக்கியமானதொரு தகவலாகும். இத்தகவல் கிழக்கில் மட்டக்களப்பில் நீண்டகாலமாகவே மக்கள் வாழ்ந்துவருகிறார்கள் என்ற கருத்துக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

இப்பெருங்கற்காலப் பண்பாட்டெச்சங்கள் (ஈமச்சின்னங்கள்) இலங்கையில் உலர்வலயப்பகுதிக்குரிய செம்பழுப்புமண் பகுதிகளிற் கண்டுடெடுக்கப்பட்டுள்ளன. மேலும் தென்னிந்திய ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு போன்ற இடங்களிலும் இத்தகைய எச்சங்கள் (ஈமச்சின்னங்கள்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சேனக்க (1969) அவர்கள், "இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் பொதுவான இப்பெருங்கற்காலப் பண்பாட்டின் குணாதிசயங்கள் நன்கு பிரபல்யமானவையாகும். ஒருவகையில் வதிவிடங்களின் தன்மையைப் பொறுத்தமட்டில் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகிறது. சவ அடக்கமுறையும் ஈமச் சின்னங்கள், கற்குவியல்கள், கற்சதுக்கம், ஈமத்தாழிகள் என்பன அடங்குகின்றன" (பக்.30) எனக் குறிப்பிடுகிறார். குணராசா அவர்கள் கதிரவெளி ஈமச்சின்னங்கள் பற்றிக் குறிப்பிடாவிட்டாலும் ஏனைய இடங்களிற் கண்டடெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள்பற்றி, "ஈமத்தாழி அல்லது முதுமக்கள்தாழி முறை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிடமக்களது கலாசாரம் என்பது நிரூபணமாகிவிட்டது" எனக் குறிப்பிடுகிறார். ஆயினும், இதன் காலம் இன்னும் பழமை யானது. கதிரவெளி ஈமச்சின்னங்கள் குறித்துத் தனியாக ஆராய வேண்டும்.

குணவர்த்தன அவர்கள், மிகப்பழைய வரலாற்று ஆவணங்களான பிராமிச்சாசனங்கள் பற்றிய ஆய்வில், "சில சாசனங்கள் கபோஜா, மிலாக, தமடே போன்றவற்றின் குழுத்தனித்துவத்தைக் குறிக்கின்றன. கபோஜா, மிலாக என்பவை குழுநிலைச்சமூகம் போல காணப் படுகின்றன. 'தமடே திராவிடருக்குச் சமமானது' எனப் பரணவிதான குறிப்பிடுகிறார். எவ்வாறாயினும், தமடே தமிழுக்கு அதிகம்

சமமானதாகக் காணப்படுகிறது." (பக். 63) எனக் குறிப்பிடுகிறார். இதன்மூலம் மட்டக்களப்பின் பூர்விகவரலாறு பற்றி ஏதும் அறிய முடியாதபோதிலும் இலங்கையில் மிகநீண்டகாலமாகவே தமிழர்கள் வாழ்ந்துவருகிறார்கள் என்பதனை அறியமுடிகிறது.

சேனக்க பண்டாரநாயக்கா அவர்கள், "இவர்கள் (தமிழர்கள்) ஆரம்ப வரலாற்றுக்காலத்திலிருந்து, நம்பகரமாக ஆதிவரலாற்றுக்காலத்திலிருந்து யாதாயினும் ஒரு வகையில் சிங்களமக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார்கள். மிக ஆரம்பகாலம் முதல் தமிழினத்தின் தனித்துவச் சிறப்பியல்புடைய மக்கள் இங்கு வாழ்ந்துவந்தமைக்குப் பிராமிக் கல்வெட்டுக்கள் சான்று பகிர்கின்றன." (பக்.20) எனவும் குறிப்பிடுகிறார். அவர், இக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களைத் தென்னிந்தியாவுடன் தொடர்புபட்டவர்களாக நோக்குகிறார்.

ஆய்வாளர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் செவ்வியொன்றில், (பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் , 27 மார்ச் 2012) "இலங்கையின் தெற்கில் திஸ்ஸமகராமவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட பழமையான நாணயங்கள் 2200 ஆண்டு பழமையானவை" எனவும், "இவை தமிழ்வணிகர்களின் நாணயங்கள்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகவல்கள் யாவும், இலங்கையின் கிழக்கிலும் தெற்கிலும் ஆதிவரலாற்றுக்காலத்தில் தமிழர்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதனை உறுதிசெய்கின்றன. ஆனால், இதுவரைக்கும் இவ்விடயம் குறித்துப் போதுமானளவு சான்றாதாரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பது உண்மையே.

இவ்வகையில் மட்டக்களப்பிலுள்ள புராதன தொல்லியற்சான்றுகள் குறித்து ஆரம்பநிலைப்பணிகளையாவது மேற்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. இன்று மட்டக்களப்பிலுள்ள புராதன தொல்லியற் சான்றுகள் புதைபொருட்களாகக் கருதப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன எனவும், அவற்றின் முக்கியத்துவம் உணரப்படாத நிலையில் அவை சிதைக்கப்பட்டு வருகின்றன எனவும் அறிய முடிகிறது.

### இலங்கையின் வரலாற்று நூல்கள் தரும் தகவல்கள்.

இனி, இலங்கையின் வரலாற்றுநூல்களில் கூறப்பட்டுள்ள, மட்டக் களப்பின் பூர்விகவரலாறு பற்றிய தகவல்கள் குறித்து நோக்கலாம். இலங்கையின் பண்டையவரலாற்றை ஆராய்ந்த அறிஞர்கள் குறிப்பிடுகின்ற விடயங்கள் முக்கியத்துவமுடையதாக இருக்கின்றன.

குணவர்த்தன அவர்கள், "ஐதீகத்தின்படி சிகளரின் ஆரம்பக் குடியேற்றங்கள் கதம்ப ஆறு (மல்வத்து ஓயா), கம்பீர ஆறு (கணதர ஆகவிருக்கலாம்) ஆகியவற்றின் கரைகளிலும் அவற்றைச் சார்ந்த

பகுதிகளிலும் அமைந்திருந்தன என்பதால், ஆரம்பத்தில் அவையும் சிங்களவுணர்வு, பிரதேசப்பண்பு கொண்டிருந்தன எனலாம். இலங்கையின் கிழக்கு, தென்கிழக்குப்பிரதேசங்களிலிருந்த குடியிருப்புக் களின் வேறுபட்ட மூலத்தை வரண்முறை ஏடுகள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது (மகாவம்சம், 9:7 — 11)" (பக்.77) எனக் குறிப்பிடுகிறார். இலங்கையின் கிழக்கிலும் தென்கிழக்கிலும் நீண்டகாலமாகச் "சிகளர் (சிங்களவர்) அல்லாதவர்கள்" வாழ்ந்துவந்துள்ளார்கள் எனக் குறிப்பிடுவதனைக் கவனத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது.

இலங்கை வரலாற்றுநூல்களில் பிரபல்யமான மகாவம்சம், 'துஷ்டகாமினியின் வெற்றி' எனும் 25ம் அத்தியாயத்தில்,

"7. மஹியங்கனவுக்கு வந்து சேர்ந்த அவன் (துட்ட காமினி கி.மு. 101—77) சத்தன் என்ற தமிழனை வெற்றிகொண்டான். அதே இடத்தில் அவனைக் கொன்றுவிட்டு அம்பதிட்டகத்துக்கு வந்தான்." எனும் செய்யுள் கவனத்திற்குரியதாக அமைகிறது. அநுராதபுரத்திலிருந்து ஆட்சிசெய்த தமிழன் எலராவுடன் போர் புரிவதற்காகச் சென்ற துட்டகாமினி வெற்றிகொண்ட தமிழன் பற்றிய செய்தியை இச்செய்யுள் கூறுகிறது. தொடர்ந்துவரும் செய்யுட்கள், கங்கையின் இக்கரையில் இருந்த மஹியங்கனாவில் தமிழர்கள் பலர் பலமுடன் வாழ்ந்த செய்திகளை விபரிக்கிறது. துட்டகாமினி காலத்தில் (கி,மு. 100 ஆம் ஆண்டளவில்) தமிழர்கள் வாழ்ந்த இம்மஹியங்கனவே, மகாவம்சத்தில் புத்தரின் முதல்வருகையின்போது (கி,மு 500 ஆம் ஆண்டளவில்) பெருமளவு இயக்கர்கள் ஒன்றுகூடும் இடமாக மகாவம்சத்தில் கூறப் பட்டுள்ளது. மகாவம்சத்திற் காட்டப்பட்டுள்ள இலங்கையின் பூர்விக மக்கள் இவர்களே. எனவே, விஜயன்வழியில் நிகழ்ந்த ஆரியக் குடியேற்றங்களுக்கும் பௌத்தமதத்தின் வருகைக்கும் சிங்கள மொழியின் தோற்றத்திற்கும் முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள் பற்றிய "பழமைப்பதிவாக" இத்தகவலைக் கருதலாம். இவ்விடயங்கள், மட்டக்களப்பின் பூர்விகவரலாற்றைப் புதியதொரு தடத்தில் ஆய்வு செய்யவேண்டியதன் அவசியத்தினை உணர்த்துகின்றன.

இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல்கள் பலவாகும். இந்நூல்கள் கூறும் வரலாறு குறித்து பல விமர்சனங்கள் உண்டு. வில்ஹெம் கெய்கர், "இலங்கையின் புராதனநூல்களை நுணுகித் திறனாய்ந்து பார்ப்பதையே வரலாற்று ஆசிரியர் எவரும் சரியானதெனக் கருதுவார். இலங்கை வரலாற்றுநூல்களுக்கு மட்டுமல்ல, அனைத்து வரலாற்று ஆவணங் களுக்கும் இக்கூற்றானது பொருந்தும். இதில் எனக்கு முரண் இல்லை" எனக் குறிப்பிட்டுள்ளார். வில்ஹெம் கெய்கர் குறிப்பிடுவதனைப்போல "நுணுகித் திறனாய்ந்து பார்ப்பதிலும்" பல சிக்கல்கள் உண்டு.

இலங்கையின் பண்டையவரலாற்றைக் கூறும் நூல்களில் பிரபல்யமான வரலாற்றுநூலாக அமைவது மகாவம்சம் ஆகும். மகாவம்சம் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் மகாநாமன்(ர்) என்பவரால் இயற்றப்பட்டது என்பர். "புராதன முனிவர்களாற் தொகுக்கப்பெற்ற

அது (மகாவம்சம்) இங்கே விரிவாகக் கூறப்படுகிறது. பழையநூல் சுருக்கமானது." (அத்1. சூத்.2) எனும் மகாவம்சக்குறிப்பு, அந்நூல் எழுதப்பட்ட முறையை விளக்குகிறது.

பாளி(பாலி) மொழியில் எழுதப்பட்ட மகாவம்சத்தினை "வில்ஹெம் கெய்கர்" 1908ஆம் ஆண்டில் ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். இம்மொழிபெயர்ப்பினை "திருமதி மபெல் ஹேனெஸ் பொடே" ஆங்கிலத்துக்கு மொழிமாற்றினார். "வில்ஹெல்ம் கெய்கர் என்பவரால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு இலங்கை சர்க்காரால் அதிகாரபூர்வமான நூலாக வெளியிடப்பட்ட பதிப்பை" எஸ். சங்கரன் தமிழ்ப்படுத்தி 1962இல் வெளியிட்டுள்ளார். தற்போது இணையத்தில் "வில்ஹெம் கெய்கர்" இன் ஆங்கிலநூலும் அதற்கான தமிழ்மொழி பெயர்ப்பும் காணப்படுகிறது.

மகாவம்சம் எழுதப்பட்டுள்ள முறையும் மகாவம்சம் மொழி பெயர்க்கப்பட்ட முறையும் மகாவம்சத்தில் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மிகப்பழைய வரலாற்றுச்சம்பவங்கள் கூறப்படுவதுவும் உண்மை வரலாற்றை அறிந்து கொள்வதிலே பெரும் இடர்பாடுகளாகக் காணப்படுகின்றன. மேலும், "இலங்கை வரலாற்றுநூல்களில் கூறப்பட்டுள்ளவற்றைவிட கூறப்படாதவை முக்கியமானவை" என்ற கருத்தும் உண்டு. எனவேதான் நுணுகித் திறனாய்ந்து பார்ப்பதிலும் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும் எனக்குறிப்பிட வேண்டியுள்ளது. மகாவம்சத்துடன் ஏனைய வரலாற்றுநூல்கள் குறிப்பிடும் விடயங்களையும், ஏனைய வரலாற்று ஆதாரங்களையும், இணைத்து நோக்குவதினூடாகவே சில முடிவுகளைத் தற்போதைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

முதலில் மகாவம்சத்தில் இலங்கையின் பண்டையவரலாறு பற்றிக் கூறப்படும் தகவல்களில் மட்டக்களப்பு பற்றிய தகவல்கள் கூறப் பட்டுள்ளனவா என ஆராயலாம்.

## நான்கு புத்தர்களின் வருகை

மகாவம்சத்தில் கூறப்படும் இலங்கை தொடர்பான முதல் வரலாற்றுத் தகவல் நான்கு புத்தர்களின் வருகையுடன் தொடர்பு பட்டவையாகும்.

மகாவம்சத்தின் பதினைந்தாவது அத்தியாயமான "மகாவிகாரை" யின் 51ஆவது செய்யுளிலிருந்து 55ஆவது செய்யுள்வரை, 'தீவின் நண்பரான மஹிந்ததேரர் பின்னால் மகாஸ்தூபம் ஏற்பட்ட இடத்திற்குச் சென்றார்' எனவும், 'அரண்மனைப்பூங்காவுக்குள் இருந்த காகுத தடாகத்தின் மேல்கரையில் சண்பகமலரால் அர்ச்சனை செய்தபோது பூமி அதிர்ந்தது' எனவும், 'காவலன் காரணத்தை கேட்ட போது தேரர் அதற்கான காரணத்தைக் கூறினார்' எனவும் விபரிக்கப் பட்டுள்ளது. காவலனுக்கு மஹிந்ததேரர் கூறிய காரணங்கள் 56ஆம்

செய்யுளிலிருந்து கூறப்பட்டுள்ளன.

56. பேரரசனே! நான்கு புத்தர்களும் விஜயம் செய்த இதே இடம் ஸ்தூபம் கட்டுவதற்கு மிகவும் ஏற்றது. அது ஜீவர்களுக்கு ஆசியும், ஆனந்தமும் அளிப்பதாக இருக்கும்.

57. இந்த உலக யுகத்தில் முதலாவதாகக் காகசந்தர் என்பவர் இருந்தார், சத்தியமுணர்ந்த அவ்வித்தகர், உலகமனைத்திலும் இரக்கங் கொண்ட உத்தமர்.

58. அப்போது இம்மகாமேகவனத்துக்கு மகாதிட்டு என்ற பெயர். தலைநகரான அபாய கிழக்கே கடம்பநதியின் மறுகரையில் இருந்தது.

59. அபயன் என்பவன் அதன் அரசனாக இருந்தான். அப்போது இத்தீவுக்கு ஓஜதீபம் எனப் பெயர்.

60. பூதங்களையுடைய சக்தியால் இங்கு மக்களிடையே கொள்ளை நோய் பரவியது. பத்து அபூர்வசக்திகளையும் பெற்றிருந்த காகசந்தர் இதையறிந்தார்.

61. இதற்கு முடிவுகட்டி, இங்குள்ள மக்களை மதம்மாற்றித் தர்மத்தைப் பரப்புவதற்காக அவர் இரக்கசிந்தனையாலே தூண்டப்பட்டு,

62. நாற்பதாயிரம் சீடர்களுடன் ஆகாயமார்க்கமாக இங்கு வந்தார்.

63. வந்து, தேவகூடமலைமீது நின்று கொண்டார்.

இலங்கை தொடர்பான முதல்வரலாற்றுத் தகவல் இதுவே எனலாம்.

மகாவம்சத்தின் 91ஆவது செய்யுளிலிருந்து இரண்டவதாக இலங்கைக்கு வந்த புத்தர் பற்றிய விபரிப்பு இடம்பெறுகின்றது.

91. இரண்டாவதாக இந்த யுகத்தில் அவதரித்த புத்தர் கோநாகமனர். எல்லாமறிந்த அவர் உலக மக்களிடம் இரக்கங்கொண்டவர்.

92. அச்சமயம் இந்த மகாமேகவனத்துக்கு மகாநோமா என்று பெயர். தலைநகர் வர்த்தமானா தெற்குப்புறம் இருந்தது.

93. அந்தப்பகுதியை அப்போது ஆண்ட அரசனுடைய பெயர் சமிதன் என்பதாகும். அப்போது இத்தீவுக்கு வரதீபம் என்று பெயர்.

94. வரதீபத்தில் அப்போது பஞ்சக்கொடுமை நிலவியது. இதையறிந்த கோநாகமனர் அதற்கு முடிவுகட்டவும்,

95. பின்னர் தமது மார்க்கத்தை இத்தீவிற் பரவச்செய்து மக்களை மாற்றுவதற்காகவும் அவர்,

96. இரக்க உணர்வினால் உந்தப்பட்டு முப்பதாயிரம் சீடர்களுடன் ஆகாயமார்க்கமாக வந்து

97. சுமணகூடமலை மீது நின்று கொண்டார்.

125 ஆவது செய்யுளிலிருந்து மூன்றாவதாக இலங்கைக்கு வந்த

புத்தர் பற்றிய விபரிப்பு இடம்பெறுகின்றது.

125. மூன்றாவதாக இந்த யுகத்தில் அவதரித்த புத்தர் காச்யபர். எல்லாம் அறிந்த இவர் ஏழைகளிடம் இரக்கங்கொண்டவர்.

126. மகாமேகவனத்துக்கு (அப்போது) மகாசாகரம் என்று பெயர்.

127. விசாலா எனப்பட்ட தலைநகரம் மேற்குப்புறம் இருந்தது. அதையாண்ட அரசனுடைய பெயர் ஜெயந்தன் என்பது. அப்போது இத்தீவுக்கு மந்ததீபம் என்று பெயர்.

128. அப்போது அரசன் ஜெயந்தனுக்கும் அவனுடைய தம்பிக்குமிடையே பயங்கரமான போர் மூண்டது.

129. பத்து விசேச சக்திகளைப் பெற்ற காச்யபர், போரினால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கொடுமைகளை அறிந்து இரக்கங்கொண்டார்.

130. அதற்கு முடிவுகட்டவும் பின்னர் தீவில் ஜீவர்களை மாற்றவும் தமது மார்க்கத்தைப் பரப்பவும்

131. இரக்கத்தினால் உந்தப்பட்டவராக அவர் இருபதாயிரம் சீடர்களுடன் ஆகாயமார்க்கமாக இங்கு வந்து, சுபகூடமலைமீது நின்று கொண்டார்.

160ஆவது செய்யுளிலிருந்து நான்காவது புத்தர் வருகை பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.

160. இந்த யுகத்தில் நான்காவது புத்தராக கோதமர் அவதரித்தார். முழுமையாகச் சத்தியத்தை அறிந்த அவர் உலகிடம் இரக்கங்கொண்டவர்.

161. அவர் முதன்முறையாக இங்கு வந்துபோது யக்ஷர்களை இங்கிருந்து விரட்டினார். இரண்டாவதுமுறையாக மீண்டும் வந்துபோது நாகர்களை அடக்கினார்.

162. கல்யாணியில் நாகமணியகி வேண்டிக்கொண்டதற்கிணங்க மூன்றாவதுமுறையாகத் திரும்பிவந்த அவர், பிக்குகளுடன் அங்கு உணவருந்தினார்.

மகாவம்சத்தின்படி, நான்கு புத்தர்களின் வருகையில் முதல் புத்தரின் வருகையின்போது, இலங்கைத்தீவு ஓஜதீபம் என அழைக்கப்பட்டுள்ளது. அரசன் அபயன். தலைநகரம் அபாய. இரண்டாவது புத்தரின் வருகையின்போது, இலங்கைத்தீவு வரதீபம் என அழைக்கப்பட்டுள்ளது. அரசன் சமிதன். தலைநகர் வர்த்தமானா. மூன்றாவது புத்தரின் வருகையின்போது, இலங்கைத்தீவு மந்ததீபம் என அழைக்கப் பட்டுள்ளது. அரசன் ஜெயந்தன். தலைநகரம் விசாலா. இந்த விபரிப்பிற் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களிலிருந்து குறிப்பான முடிவினைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது.

## பகவன் புத்தரின் வருகை

மகாவம்சத்தில் பதினைந்தாவது அத்தியாயமான "மகாவிகாரை" யிலும் "புத்தர்வருகை" எனும் முதல் அத்தியாயத்திலும் பகவன் புத்தர் இலங்கைக்கு மும்முறை மேற்கொண்ட விஜயம்பற்றி விபரிக்கப் பட்டுள்ளது. முதல் விஜயத்தின்போது, மகாநாகவனத்தில் (மஹியங்கனவில்) வாழ்ந்த இயக்கர்களை (யக்ஷர்கள்) அங்கிருந்து விரட்டுவதற்காகச் சென்றார் எனவும் இரண்டாவது விஜயத்தின்போது, நாகர்களான மகேதரனுக்கும் குலாதரனுக்கும் இடையில் மூண்ட போரைத் தீர்த்துவைப்பதற்காக நாகத்வீபத்திற்குச் சென்றாரெனவும், (நாகர்களை அடக்கினார் எனவும்) மூன்றாவது விஜயத்தின் போது, நாகமன்னன் மணியக்கியன் அழைத்ததன்பேரில் கல்யாணி நாட்டிற்குச் சென்றார் எனவும் கூறப்பட்டுள்ளது. "புத்தர்வருகை" எனும் முதல் அத்தியாயத்தில்,

*19. போதிஞானமடைந்த ஒன்பதாவது மாதத்தில் பூச பௌர்ணமியன்று இலங்கையில் தமது தர்மத்தைப் போதிப்பதற்காகத் தாமே அங்குப் புறப்பட்டார்.*

*20. தமது மார்க்கம் பிற்காலத்தில் புகழுடன் திகழப்போகும் இடம் இலங்கை என்பது அவருக்கு அப்போதே தெரிந்திருந்தது. அப்போது, இலங்கையில் யக்ஷர்கள் (Yakkhas) நிரம்பியிருந்தனர். அவர்களை அங்கிருந்து முதலில் விரட்டவேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.*

*21. இலங்கையின் மத்தியில் அழகிய நதிக்கரையில் மூன்று யோசனை நீளமும் ஒரு யோசனை அகலமும் உள்ள, மனதுக்கு ரம்யமூட்டும் மகாநாகவனத்தில் யக்ஷர்கள் வழக்கமாகக் கூடும் இடம் உள்ளது என்பதும் அவருக்குத் தெரியும்.*

*22. அப்போது தீவிலுள்ள எல்லா யக்ஷர்களும் அந்த இடத்தில் கூடியிருந்தனர்.*

*23. அப்போது யக்ஷகர்ளின் பேரவைக்கூட்டத்துக்குப் பகவன் புத்தர் சென்றார். அங்கு கூட்டத்தின் நடுவில்,*

*24. அவர்களுடைய தலைக்குமேலாக, பிற்காலத்தில் மஹியங்கன ஸ்தூபம் அமைந்த இடத்தில் அவர் வானத்தில் நின்றார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து,*

*27. "இங்கே நான் உட்காருவதற்கு ஓர் இடம் கொடுங்கள்" என்று கூறினார். 'யக்ஷர்கள் "இறைவனே எங்கள் தீவு முழுவதையும் வேண்டுமானாலும் தருகிறோம். எங்களுக்குப் பயத்திலிருந்து விடுதலை அளியுங்கள்" என்று கூறினார்கள்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

பகவன் புத்தர் போதிஞானமடைந்த ஒன்பதாவது மாதத்தில் இலங்கை வந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. புத்தர் காலம் கி.மு. 563 ஈ கி.மு. 483 ஆகும். எனவே, கி.மு. 500 களில் பகவன் புத்தரின் முதலாவது இலங்கை வருகை இடம்பெற்றிருக்காலம். இக்குறிப்புக்களாற்றான்,

புராதன காலத்தில் புத்தரின் முதல் வருகைக்கு முன்னரே இயக்கர்கள் — யக்ஷர்கள் இலங்கையில் பல பகுதிகளிலும் வாழ்ந்து வந்துள்ளார்கள் அவர்கள் மஹியங்கனையில் (மகாநாகவனத்தில் மஹியங்கனவில்) பேரவைக்கூட்டத்துக்கு அவர்கள் ஒன்று கூடினார்கள் என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

மகாநாகவனம் (பிற்காலத்தில் மஹியங்கன ஸ்தூபம் அமைந்த இடம்) மூன்று யோசனை நீளமும் ஒரு யோசனை அகலமும் கொண்டது எனக்குறிப்பிடப்படுகிறது. குணராசா அவர்கள், 'ஒரு யோசனை தூரம் என்பது ஏறத்தாழ 10 மைல்' என்கிறார் (பக். 11). எனவே, முப்பது மைல் நீளமும் பத்து மைல் அகலமும் கொண்ட பிரதேசமாக மகா நாகவனம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புத்தரின் இலங்கை வருகையுடன் இலங்கைத்தீவு முழுவதும் வாழ்ந்த யக்ஷர்கள் அவர்கள் வாழ்ந்த இடத்திலிருந்து கிரீத்விபத்திற்கு விரட்டப்பட்டார்கள். இதன் பின்னர்,

32. 'தேவர்கள் கூட்டத்தில் பகவர் புத்தர் தமது தர்மத்தைப் போதித்தார். கோடிக்கணக்கான ஜீவர்கள் மதம் மாறினர். கணக் கற்றவர்கள் திரிசரணமடைந்து சீலத்தைப்பெற்றனர்' எனக் கூறப் பட்டுள்ளது.

எச்.டபிள்யு.கொடிறின்றன், "கௌதமபுத்தர் வருகை அல்லது அவருக்கு முந்திய புத்தர்களின் வருகைகளைப்பற்றி வரலாற்றுச் சான்றுகள் கிடையா. பழங்கதைகளின்படி இந்நாட்டின் பழங்குடி மக்கள் இயக்கர், நாகர், தேவர் ஆகியோராவர். இப்பெயர்களில் யாதாயினும் உண்மை மறைந்திருக்கலாம்" (பக். 6) எனக் குறிப்பிடுகின்றார். எனவே, விஜயன் வழியில் நிகழ்ந்த ஆரியக்குடியேற்றங்களுக்கும், பௌத்தமதத்தின் வருகைக்கும் சிங்களமொழியின் தோற்றத்திற்கும் முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள் பற்றிய "பழமையான வரலாற்றுப்பதிவுகளாக" இத்தகவல்களைக் கருதலாம்.

## விஜயன் காலம்

இலங்கைக்கு விஜயன் வந்தமைபற்றி மகாவம்சம் ஆறாவது அத்தியாயம் 'விஜயன் வருகை' எனும் பகுதியில்,

47. 'விஜயன் என்னும் பெயர்பெற்ற வீரனான இளவரசன் இலங்கையில் தம்மபண்ணி என்றழைக்கப்படும் பகுதியில் கரை யிறங்கினான். ததாகதர் நிர்வாணமடைவதற்காக இரட்டைச் சாலவிருட்சங்களிடையே அமர்ந்த அதேநாளில் இது நடந்தது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் புத்தரின் நிர்வாண ஆண்டு கி.மு. 544 என்பதே வழக்கு என வில்ஹெம் கெய்கர் குறிப்பிட்டுள்ளதனை முன்னர் கண்டோம். கொடிறின்டனும் விஜயன் காலத்தை கி.மு. 543 எனக் குறிப்பிட்டுள்ளார்.

*மகாவம்சத்தின் ஏழாம் அத்தியாயம் "விஜயனின் பட்டாபிஷேகம்" எனும் பகுதியில்,*

*9. அங்குப் பெண்நாய் உருவில் ஒரு யஷிணி தோன்றினாள். அவள் குவன்னா என்பவளுடைய பரிவாரத்தைச் சேர்ந்தவள்.*

*11. விஜயனைச் சேர்ந்தவர்களில் ஒருவன் இளவரசன் தடுத்ததையும் கேளாமல் அவளைப் பின்தொடர்ந்து சென்றான்.*

*12. அவன் சென்ற இடத்தில் நாயுருவில் இருந்த யஷிணியின் எஜமானி குவன்னா என்பவள் மரத்தடியில் சந்நியாசினியைப் போல் நூல் நூற்றுக் கொண்டு அமர்ந்திருந்தாள்.*

*எனவே புத்தரின் மகாநாகவனத்திற்கான முதல் வருகையின் போது அங்குப் பௌத்த மதம் பரவச் செய்யப்பட்டபோதும், யக்ஷர்கள் அவர்கள் வாழ்ந்த இடத்திலிருந்து விரட்டப்பட்டபோதும், குறுகிய ஒரு காலத்தில் மீண்டும் இலங்கையில் யக்ஷர்கள் ஒரு ராஜ்யத்தை அமைத்து வாழ்ந்துள்ளார்கள் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. தொடர்ந்து,*

*16. போனவர்கள் யாரும் திரும்பிவராததைக் கண்ட விஜயன் பயமடைந்தான். ஐந்து ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு புறப் பட்டான்.*

*17. அங்கு யாரும் மனிதர்கள் வந்ததற்கான காலடிச்சுவடு தென்பட வில்லை. சந்நியாசி உருவில் யஷிணியை மட்டும் கண்டான். எனவும்,*

*20. வில்லை அவளுடைய கழுத்தில் மாட்டி இழுத்து அவளுடைய தலைமயிரை இடக்கையினால் பற்றித் தூக்கி நிறுத்தி வலது கையினால் கையிலிருந்த வாளை ஓங்கிக்கொண்டு கத்தினான்.*

*21. "அடிமையே! என்னுடைய ஆட்களைத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடுவேன்." யஷிணி பயத்தினால் நடுங்கியவளாக,*

*22. தன் உயிருக்கு மன்றாடினாள். 'என்னைப் பிழைக்கவிடுங்கள். நான் உங்களுக்கு ஒரு ராஜ்யத்தையே தருகிறேன்' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இம் மகாவம்சக்குறிப்புக்களிலிருந்து இயக்கர்கள் ஒரு ராஜ்யத்தை அமைத்து சிறப்புடன் இலங்கையில் வாழ்ந்து வந்ததை அறியமுடிகிறது. மேலும் மகாவம்சம் இயக்கர்கள் பற்றிய சில தகவல்களைத் தருகிறது.*

*30. இரவு நகர்ந்து கொண்டேயிருக்க, இசை ஒலியையும் பாடுவதையும் அவன் கேட்டான். அருகில் படுத்திருந்த யஷிணியை 'இச்சத்தத்தின் பொருள் என்ன?' என்று கேட்டான்.*

*31. 'எனது எஜமானுக்கு அரசுரிமையைத் தருவேன். எல்லா யக்ஷர்களை கொன்றுவிடவேண்டும். இல்லாவிட்டால், மனிதர்கள் இங்கு என் மூலமாக வாழத்தொடங்கியதால் அவர்கள் என்னைக்*

கொன்றுவிடுவார்கள்” என்று யஷிணி எண்ணினாள்.

32. அவள் அரசனிடம் கூறினாள்: 'இதோ இங்கு சிரிஸவத்து என்னும் பெயருடைய யக்ஷ நகரம் ஒன்றிருக்கிறது.'

33. 'இலங்கைநகரில் வசிக்கும் யக்ஷர் தலைவனுடைய மகள் இலங்கையிலிருந்து இங்கு அழைத்து வரப்பட்டிருக்கிறாள்; அவளுடன் அவளுடைய தாயும் வந்திருக்கிறாள்.

34. 'திருமணத்திற்காக அங்கே பெரிய கொண்டாட்டம் நடைபெறுகிறது. அஃது ஏழுநாட்கள் நடக்கும். அச்சத்தம்தான் இது. ஏராளமான பேர் அங்கு கூடியிருக்கிறார்கள்.

இந்தக்குறிப்பிலிருந்து, இயக்கர்கள் இலங்கை நகரில் வசித்து வந்ததனையும், ஓர் அரசமைப்பை அவர்கள் பெற்றிருந்ததனையும் திருமணத்தினைப் பெருங்கொண்டாட்டமாகக் கொண்டாடியமையை யும் அறிய முடிகிறது. பகவன் புத்தரினால் தேவர்கள் மற்றும் ஜீவர்கள் மதம் மாற்றப்பட்டபோதிலும் அம்மதம் வளர்ச்சியுற்றது என்ற தகவல் சொல்லப்படவில்லை. இது குறித்து, குணவர்த்தனா, “விஜயனின் கதை பற்றி மகாவம்சத்தில், சில கூறுகள் புத்தரின் வருகைபற்றி இதேநூல் கூறும் சில சம்பவங்களுடன் முரண்படுகின்றன. முதற்றடவை புத்தர் இலங்கைக்கு வந்தபோது இங்கு இயக்கர்களைக் கிரிதீபத்துக்குத் துரத்தியதாகக் கூறுகிறது. ஆனால் விஜயன் இலங்கைக்கு வந்தபோது இங்கு இயக்கர்களின் வளம்மிகுந்த அரசு இருந்ததென்றும் கூறுகின்றது.” (பக். 69) எனக்குறிப்பிடுகிறார்.

இயக்கர்கள் கூடிய சிரிஸவத்து பற்றி கொடிறின்டன், “சிறீவத்து என்பது விசயன் இறங்கிய இடத்துக்கு அண்மையில் இருந்தது என்பதாகும். ஏனெனில் அங்கு நடந்து திருமண விளையாட்டுக்களின் ஓசையை அவன் கேட்டுஞ்” எனக் குறிப்பிடுகிறார். அத்துடன், “இவ்வியக்கர்களின் முக்கிய இடங்கள் சிறீவத்து, இலங்காபுரம் ஆகியவையாம். பின்னர் இவை “லொக்கலை”, “லக்கலை” என்னும் குன்றுகளேயாம் எனக் கருதப்பட்டன” (பக். 7) எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், விசயன் இலங்கை வருகை குறித்து வேறு பல மரபுக்கதைகள் குறித்து விளக்கும் கொடிறின்டன், “இதிலிருந்து அறியக்கிடப்பது யாதெனில் விசயனின் கதை பழைய கட்டுக்கதைகளைச் சேர்ந்த ஒன்றாகும்” எனக் குறிப்பிடுகிறார். ஆனால், இக்கட்டுக்கதைகளில் இலங்கையில் வாழ்ந்த இயக்கர்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனாற்றான் அவர், “பழங்கதைகளின்படி இந்நாட்டின் பழங்குடிமக்கள் இயக்கர், நாகர், தேவர் ஆகியோராவர். இப்பெயர்களில் யாதாயினும் உண்மை மறைந்திருக்கலாம்” (பக். 6) எனக் குறிப்பிடுகிறார்.

இதன் பின்னர் விஜயன் அரசனாக முடிசூட்டிக்கொள்ள, உயர்குலமங்கை ஒருத்தியைத் தேடி “தென்னிந்தியாவிலுள்ள மதுரை மாநகரிலுள்ள” “பாண்டியமந்திரிகளிடம்” தங்களுக்கும் தங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பெண் கேட்க சிலர் விஜயனுடைய மந்திரிகளாலே

தூது அனுப்பப்பட்டனர். அவர்கள் தூதினால் பாண்டியனும், தனது மகளையும், தேர்ந்தெடுத்த பெண்களையும், கைத்தொழிற்கலைஞர் களையும், பதினெண்குடிமக்களின் ஆயிரம் குடும்பங்களையும் கொண்ட "பெருவாரியான மக்களை" அனுப்பிவைத்தான். அவர்கள் இலங்கைத்தீவில் மகாதிட்டு (மாந்தோட்டை) எனப்படும் இடத்திற் கரையேறினர்.

இவ்விடயம் பற்றிக் கூறும் குணவர்த்தனா, "56—57 செய்யுள்கள் மதுரையரசன் அனுப்பிய சேவை செய்யும் சாதியினரின் ஆயிரம் குடும்பங்கள் பற்றிக் கூறுகின்றன. விஜயனின் பரிவாரங்களான 'எழு நூறு பேரின்' வழித்தோன்றல்கள் சிகளர் எனவும் ஆயிரம் குடும்பங் களின் வழித்தோன்றல்களை இக்குழுவிலிருந்து தவிர்த்துக்கொள்ளும் போதும், ஆயிரம் குடும்பங்களின் வழித்தோன்றல்கள் சிகளருடன் சேர்த்துக் கொள்ளப்படக்கூடாது என்பதை வம்சத்த பகசினி அழுத்தமாகச் சுட்டுகிறது எனலாம்" (பக். 75) எனக் குறிப்பிடுகிறார். அதேவேளை பாண்டிய இளவரசிக்கும் விஜயனுக்கும் குழந்தைகள் பிறக்கவில்லை என வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இதன் பின் விஜயன்,

*60. "அன்பே! குழந்தைகளை விட்டுவிட்டு நீ இப்போது போய்விடு. அமானுஷ சக்தி படைத்தவர்களைக் கண்டால் மனிதர்கள் எப்போதும் பயப்படுகிறார்கள்" என்றான்.*

*61. இதைக் கேட்டதும் அவளுக்கு யக்ஷர்கள் பற்றிய பயம் பற்றிக்கொண்டது. "தாமதிக்காதே, உனக்கு ஆயிரம் பணம் செலவிட்டுப் பூஜை போடுகிறேன்" என்று விஜயன் யஷிணியிடம் சொன்னான்.*

*62. மீண்டும் மீண்டும் அவள் மன்றாடிக் கேட்டது பயனில்லாமற் போகவே தன் இரு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு லங்கா புரத்துக்கு அதனால் தீங்கு நேரும் என்பதை அவள் அறிந்த போதிலும் சென்றுவிட்டாள்.*

*63. வெளியே குழந்தைகளை விட்டுவிட்டு அவள் மட்டும் நகருக்குட் சென்றாள். நகரத்திலிருந்த யக்ஷர்கள் அவளை அடையாளம் கண்டு கொண்டனர்.*

*64. அவர்களுடைய பயத்தில் அவளை உளவுகாண வந்தவளாகக் கருதிப் பரபரப்படைந்தனர். முரடனான ஒருவன் முஷ்டியினால் ஒரே குத்தில் அவளைக் கொன்றுவிட்டான்.*

*65. அவளுடைய தாய்மாமனான ஒரு யக்ஷன் நகரத்துக்கு வெளியே சென்றபோது அங்குக் குழந்தைகளை கண்டு, அவர்களை "நீங்கள் யாருடைய குழந்தைகள்"? என்று கேட்டான்.*

*66. அவர்கள் குவன்னாவின் மக்கள் என்பதை அறிந்ததும் அவன் "இங்கே உங்களுடைய தாயாரைக் கொன்றுவிட்டார்கள். உங்களைப் பார்த்தாற் கொன்றுவிடுவார்கள்." என்றான்.*

67. விரைவாக அங்கிருந்து ஓடிய இவர்கள் சுமணகூடத்தை அடைந்தனர். இவர்களில் மகன்தான் மூத்தவன்.

68. உரிய வயதையடைந்ததும் அவன் தன்னுடைய தங்கையையே மனைவியாக்கிக் கொண்டான். நிறையக் குழந்தைகளைப் பெற்றுப் பெருக்கிக்கொண்டு மலையப்பகுதியில் அரசனது அனுமதியுடன் அவர்கள் வசித்து வந்தனர். இவர்களிடமிருந்து தோன்றியவர்கள்தான் புலிந்தர்கள்.

விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்த பிள்ளைகளின் வாரிசுகளாகவே புலிந்தர்களின் தோற்றம் காட்டப்பட்டுள்ளது.

குணவர்த்தனா அவர்கள் "வம்சத்தபகசினி, இயக்கர்கள் பற்றிய மேலும் தகவலை தருகிறது. இயக்கர்களுடைய தலைவன் மகாகலசேன எனவும் அவன் சிறிசவத்து என்ற இடத்தில் இருந்தான் எனவும் கொண்டா என்ற இயக்கினியின் புதல்வியான பொலமிதாவை அவன் மணமுடித்தான் எனவும் இந்நூல் கூறுகிறது. குவேனியின் இரு பிள்ளைகளும் ஜீவகத்தா, தீபல்ல என அழைக்கப்பட்டனர் எனவும் இது கூறுகிறது" (பக் 69) எனக் குறிப்பிட்டுள்ளார். சிங்கள வரலாற்றுநூலில் குவேனியின் சகோதரன் "குமார" எனக் கூறப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்று நூல்களில் இயக்கர்கள் பற்றிய விபரிப்பு, அவர்களை அமானுஷ்யசக்தி படைத்தவர்களாகக் காட்டுகிறது. புத்தரின் வருகையின் போது (கி.மு. 500) அவர்கள் இலங்கைத்தீவில் வாழ்ந்தவர்கள். விஜயன் வருகையின்போது அவர்கள் இலங்கையில் சிறப்பானதொரு நிலையில் வாழ்ந்துவந்தவர்கள். பின்னர், பண்டு அபயன் (கி.மு. 437), துஷ்ட காமினி (கி.மு. 205. — 161) ஆகியோர் பற்றிய விபரிப்புக்களிலும் இயக்கர்கள் பற்றிய விபரிப்பு இடம் பெறுகிறது. இவ்வகையில் அவர்களுடைய வரலாறு கி.மு. 500இலிருந்து கி.மு. 160வரை ஏறக்குறைய 350 வருடங்கள் கொண்டதாக காணப்படுகிறது. எனவே இலங்கையின் பண்டையவரலாற்றில் முக்கியமானதொரு மக்கள்பிரிவினராக இவர்களைக் கருத வேண்டும்.

பௌத்தமதப்பரவலாக்கத்தின்போது அழிந்துபோனவர்கள் அவர்கள் என்ற கருத்தினையும் வந்தடைய வேண்டியுள்ளது. சிலவேளை இவர்கள் விஜயனுடன் ஆரம்பித்த குடியேற்றவாசிகளுடன் ஒன்று கலந்திருக்க வேண்டும்; அல்லது, தமது தனித்துவத்தினைப் பேணிக்கொண்டு ஒதுங்கி, அநுராதபுர இராச்சியத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் வாழ்ந்திருக்கவேண்டும். அவ்வாறான பிரதேசம் இலங்கையின் வட கிழக்கு மற்றும் உருகுணைப் பிரதேசங்களாகும்.

பண்டைய இலங்கை வரலாற்றுநூல்களில், நாகர்கள் பற்றிய தகவல் நட்புரீதியிலானதாக விபரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இயக்கர்கள் பற்றிய விபரிப்பு அவர்களை எதிரிகளாகக் காட்டும் வகையில் இடம் பெறுகிறது.

மகாவம்சம் மட்டுமன்றி, தீபவம்சம், வம்சத்தபகசினி, திவ்யவதனா போன்ற இலங்கையின் பண்டையவரலாற்றை விளக்கும் நூல்கள் பலவும் இயக்கர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. இது குறித்து விளக்கும் குணவர்த்தனா, "மேலே காட்டப்பட்ட பெரும்பாலான ஐதீகங்கள் இலங்கையின் முதன்முதலாக இயக்கர்களே இருந்தனர் என்பதைக் கூறுகின்றன. ஆனால், எல்லாக்கதைகளும் இயக்கர் பற்றிய பகை நோக்கினையே கொண்டுள்ளன. புத்தர் இயக்கர்களைத் துரத்தினார் எனத் தீபவம்சம் கூறுகிறது. ஆனால் திவ்யவதனாவும் ஹியன்—சாங்கின் இரண்டாவது கதையும் சிம்களவே அவர்களைத் துரத்தினான் எனக் கூறுகின்றன." (பக். 69—70) எனக் குறிப்பிடுகிறார்.

இயக்கர்கள் இலங்கைத்தீவின் பல பாகங்களிலும் வாழ்ந்தவர்கள் மஹியங்கனையில் ஒன்றுகூடுபவர்கள் என்ற மகாவம்சக்கதையினாலும் மஹியங்கனையிலே தற்காலத்தில் வேடர்கள் வாழ்ந்துவருவதனாலும் இயக்கர்கள் தற்கால வேடர்கள் என்ற முடிவினை மேற்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளதுபோலும். மஹியங்கனை மட்டக்களப்பின் மேற்கெல்லையில் அமைந்திருந்திருப்பதனாலும், மட்டக்களப்பில் பூர்விககுடிகளாக வேடர்கள் வாழ்ந்து வந்தமையாலும் மட்டக்களப்பின் பூர்விககுடிகள் இயக்கர்கள் (யக்ஷர்கள்) என்ற முடிவு ஏற்பட்டிருக்காலம்.

நாகர் என்ற தொடரினால் வரும் ஊர்ப்பெயர்கள் காரணமாக (நாகர்முனை) நாகர்கள் மட்டக்களப்பில் வாழ்ந்திருக்காலம் என்ற முடிவினை எட்டியிருக்கலாம். ஆனால் மகாவம்சத்தில்,

84. 'எதிர்காலத்தில் இலங்கையின் உய்வையெண்ணி அப்போது இலங்கையில் இருந்த நாகர்களுக்கும் அசுரர்களுக்கும் அதிகமான அளவு நன்மைகளைச் செய்வதற்காகப் பேரருள் பெருந்தகை இவ்வாறாக இந்த அழகிய தீவுக்கு மூன்று முறை விஜயம் செய்தார். உண்மையின் ஒளிவீசி ஜொலிக்கும் இத்தீவு அதனால்தான் பௌத்தர்களுடைய பெருமதிப்புக்கு உள்ளானதாயிற்று' எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இயக்கர்கள் என்பதற்குப் பதிலாக அசுரர்கள் (asura) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம். எனவே, இயக்கர்கள் (யக்ஷர்கள்) எனும் சொல்லினால் குறிப்பிடப்படுபவர்கள் யார் என்பதனை அறியமுடியாமலுள்ளது. மேலும் 12ஆம் அத்தியாயத்தில்,

20. 'இதேபோல் இமாலயத்திலுள்ள எண்பத்திநாலாயிரம் நாகர்களும் ஏராளமான கந்தர்வர்களும் யக்கர்கள் கும்பந்தர்களும் புத்த மார்க்கத்துக்கு வந்தனர்' என்ற குறிப்பும் காணப்படுகிறது. இதுபோன்ற பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதன்மூலம் யக்ஷர்கள் என்பது, பழங்குடிமக்களைக் குறிக்கப் பயன்பட்ட ஒரு சொல்லாக இருக்கலாமெனக் கருத இடமுண்டு. தற்காலத்தில், யக்ஷர்கள் இந்திய இலங்கை தொல்குடியினர் என்றே குறிப்பிடப்படுகிறார்கள். அவ்வாறெனில், உண்மையில் இயக்கர்கள்

எனக் குறிப்பிடப்பட்டோர் யார் என்பதனைக் கண்டறியவேண்டும்.

மகாவம்சத்தில், பாண்டுஅபயன் பட்டாபிசேகம் எனும் 10ஆம் அத்தியாயத்தில், 95ஆவது செய்யுளில் "இதற்கு வடக்கே, (சண்டாள கிராமம்) இதற்கும் பாசானமலைக்குமிடையே வேடுவர்களுக்கான குடிசைகள் வரிசையாகக் கட்டப்பட்டன. (அருகிலுள்ளது காமினி வாபி— கரம்பவக்குளம்)" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து யக்ஷர்ககளும் வேடுவர்களும் வேறுபட்டவர்கள் என மகாவம்சம் காட்டுவதனை அவதானிக்கமுடிகிறது. மேலும் தமிழர்கள் என்ற சொல்லின் பயன்பாடும் மகாவம்சத்தில் காணப்படுவதனால் யக்ஷர்களும் தமிழர்களும் வேறுபட்டவர்கள் என மகாவம்சம் குறிப்பிடுவதாகவே கருதவேண்டியள்ளது.

எனவே இயக்கர்கள் பற்றிய விரிவானதொரு தேடல்மூலமே பல வினாக்களுக்கு விடை கண்டறியலாம்.

இதே வேளை குணவர்த்தனா அவர்கள், 'இலங்கையில் மூன்று பிரதான மக்கட்குழுக்கள் இருந்ததை விஜயன் பற்றிய ஐதீகம் கூறுகிறது. இது சிங்களவருடைய மூலம்பற்றி விரிவாகக் கூறும் அதேசமயம் புலிந்தர்கள், சேவை செய்யும் சாதியினர் ஆகியோர் மூலம் பற்றியும் கூறுகிறது' எனவும், "எனினும் இராச்சியத்தில் இருந்த சகல மக்களையும் இணைக்கக்கூடிய சிங்கள உணர்வின் வளர்ச்சியை இக்காலத்திற் தொழிற்பட்ட சில காரணிகள் தடுத்தன என்று தோன்றுகின்றது" (பக். 74) எனவும் குறிப்பிடுகிறார். சேவை செய்யும் சாதியினர் என்பது மதுரை இளவரசியுடன் வந்த ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்தவர் குழுமத்தையொட்டியதாகும்.

மட்டக்களப்பில் பூர்விககாலத்தில் புலிந்தர்கள் வாழ்ந்தார்கள் என்ற செய்தியும் கவனிப்பிற்குரியது. மதுரை இளவரசியுடன் வந்த சேவை செய்யும் குடியினர்பற்றியும் அறியவேண்டும். இலங்கை வரலாற்று நூல்கள், இடப்பெயர்வுகள் குறித்துக் காட்டிய அக்கறையை உள்ளூர்ச்சனத்தொகைப்பெருக்கம் தொடர்பாகக் காட்டவில்லை என்ற கருத்தும் கவனத்திற்குரியது.

## பாண்டு அபயன் காலம்

மகாவம்சத்தில், "பாண்டு அபயன் பட்டாபிசேகம்" எனும் பத்தாம் அத்தியாயத்தில், "பண்டுலா என்னும் பெயருடைய பிராமணன் பணக்காரன்; வேதங்களைக் கற்றவன்; அவன் தென்பகுதியில் பண்டுலகாமக என்னும் கிராமத்தில் வசித்து வந்தான்" (செய். 20) எனும் செய்யுளிற் குறிப்பிடப்படும் தகவலானது, வேதங்களைக் கற்ற பிராமணன் தென்பகுதியில் வாழ்ந்துவந்தமைபற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இப்பிராமணனுடைய மகன் சந்தன். இவர்கள் இருவரிடமும்

பாண்டு அபயன் ஆட்சி நடத்துவதற்குரிய கலைகளைக் கற்றுக் கொண்டான் எனவும் பண்டுலா, பாண்டு அபயனுக்கு நூறாயிரம் பணத்தைப் படை வீரர்களைத் திரட்டுவதற்குக் கொடுத்தார் எனவும் பிராமணனுடைய மகன் சந்தன் என்பவன் பாண்டு அபயனுக்கு உதவியாகச் சென்றான் எனவும் மகாவம்சச்செய்யுளிற் கூறப்பட்டுள்ளது. வெற்றிபெற்ற பாண்டு அபயன் சந்தனைத் தனது மந்திரியாக நியமித்தான். பாண்டு அபயன் காலம் கி.மு. 437 ஆகும். பிராமணர்கள் பற்றிய குறிப்பு பல இடங்களிலும் இடம் பெற்றுள்ளது.

### துஷ்டகாமினி காலம்

மகாவம்சத்தில் "ஐந்து அரசர்கள்" எனும் 21 ஆவது அத்தியாயத்தில் "சோழ நாட்டிலிருந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இங்கு வந்த, உயர்குடியில் பிறந்த, தமிழன் ஏலாரா, அசேலனைத் தோற்கடித்து நாட்டைப்பிடித்து நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஆண்டான்" (செய். 13) எனக் குறிப்பிடப்படுகிறது. தமிழன் ஏலாராவின் காலம் கி.மு. 205. 161 ஆகும். இக்காலத்தில் உருகுணை இராச்சியம் வளர்ச்சிகண்டது. உருகுணையிலிருந்து படைதிரட்டிய துஷ்டகாமினி எல்லாளனுடன் போரிட்டு வெற்றி பெற்றான்.

மகாவம்சத்தில் "படைவீரர்களைத் திரட்டல்" எனும் 23ஆவது அத்தியாயத்தில் துஷ்டகாமினி பலமிக்க பத்துத்துணைவர்களைத் திரட்டிய விபரம் விபரிக்கப்பட்டுள்ளது. இவர்களில் நந்த மித்திரன் எல்லாளனுடன் தொடர்புபட்டவனாகக் கூறப்பட்டுள்ளான். மற்றையோர் நிமிலன், மகா சோனன், கோதாயிரம்பன், தேர புத்ர அபயன், பரணன், வேலு சுமணன், கஞ்ச தேவன், பூஸ தேவன், லபிய வசபன் என்போராவர். இவர்கள் "இரண்டு யோஜனை தூரத்துள் வசிக்கும் பிரபுக்குடும்பத்திலிருந்து" (செய். 18) காவலுக்கு வரவைக்கப்பட்டோராவர். வேலு சுமணன் "குடும்பியங்கானா" கிராமத்தைச் சேர்ந்தவன். இதிலிருந்து உருகுணை இராச்சியத்தில் பல சமூகக்குழுக்கள் வாழ்ந்துள்ளமையை அறியமுடிகிறது. இவர்கள் தமிழர்களா என்பது குறித்து ஆராயப்படவேண்டும்.

தற்போது, திஸ்ஸமகராமத்துக்கு அருகில் நடைபெற்றுவரும் அகழ்வில் 2200 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்வணிகர்களின் நாணயங்கள் கிடைத்துள்ளமை இத்தகைய ஆய்வின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகிறது.

மகாவம்சத்தின், "துஷ்டகாமினியின் வெற்றி" எனும் 25ஆம் அத்தியாயத்தில், "அரசன் துஷ்டகாமனி, 'மார்க்கத்துக்குப் பெருமை தேட'ப் பெரும்படையைத் திரட்டிக்கொண்டு நதியின் மறுகரைக்குச் செல்வதற்கு முடிவெடுத்து, திசமகாராமாவுக்குச் சென்று பிக்குகளையும் அழைத்துக் கொண்டு, மலையத்திற்குச் சென்று அங்கிருந்து சாலையை (அநுராதபுரத்திற்கான) சீர்படுத்திக்கொண்டு

குத்தஹாலாவை அடைந்தான். பின், (காமினி கி.மு 101—77)

7. மஹியங்கானவுக்கு வந்துசேர்ந்த அவன் சத்தன் என்ற தமிழனை (Damila Chatta) வெற்றிகொண்டான். அதே இடத்தில் அவனைக் கொன்று விட்டு அம்பதிட்டகத்துக்கு (Ambatitthaka) வந்தான். அங்கு நதியில் ஒரு சுரங்கவாயில் இருந்தது.

8. தித்தம்பன் என்ற தமிழனை எதிர்த்து அவன் நான்குமாதகாலம் கடுமையாகப் போரிடவேண்டியிருந்தது.

9. பலமுள்ள எதிரியை அவனால் சூழ்ச்சியாற்றான் வெற்றிகொள்ளமுடிந்தது. தாயாரைக்காட்டி அவனை வெற்றி கொண்டான்.

10. பிறகு நதியைக் கடந்து வந்து அரசன் ஒரே நாளில் ஏழு தமிழர்களை வெற்றிகொண்டு அமைதியை நிலைநாட்டினான். போரில் கொள்ளையடித்த பொருள்களைத் தனது படைவீரர்களுக்குக் கொடுத்துவிட்டான். அதனால், அவ்விடத்துக்குக் கோமாராமா என்ற பெயர் வந்தது.

11. அந்தர சோபாவில் அவன் மகாகொத்தனை வெற்றி கொண்டான். டோண காவரத்திலும், ஹாலபொல இஸாரியத்திலும், நாழிசோப நாழிகாவிலும் அவனுக்கு வெற்றி கிடைத்தது.

12. தீகாபய கல்லகத்தில் அதேபோல் தீகாபயனை வெற்றி கொண்டான். நான்கு மாதங்களுக்குள் கச்சதிட்டத்தில் கபிசீகனை வென்றான்.

13. கோதானகரத்தில் கோதனைப் போரிட்டு வென்றான். வஹித்தலையில் தமிழன் வஹித்தனை முறியடித்தான்.

14. கும்பாகம கும்பா, நந்திகாம நந்திகா, கானுகாமத்தில் கானு, மாமனும் மருமகனுமான தம்பா, உனமா ஆகியவர்களையும் அவன் தோற்கடித்தான்.

15. ஜம்புவும் அவன் வசப்பட்டது. அவன் கைப்பற்றிய ஒவ்வொரு கிராமமும் படைத்தலைவர்களின் பேரால் அழைக்கப்பட்டது.

என்ற விபரிப்புக்களில், மட்டக்களப்பின் மேற்கெல்லையில் உள்ள மஹியங்கனையில் வாழ்ந்த தமிழர்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளது.

இக்காலத்திற்கு முன்பு, மதுரை இளவரசியுடன் வந்த சேவை செய்யும் குடியினர், அநுராதபுரியினை ஆண்ட தென்னிந்திய தமிழரசர்கள் பற்றிய தகவல் காணப்படுகின்றது. எல்லாளன் அநுராதபுரியை ஆட்சிசெய்ததுமட்டுமன்றி மகாவலிகங்கைவரை தனது படைகளை விஸ்தரித்திருந்தான். ஆனால், அவனது படையினைரைச் சேர்ந்தவர்கள்தான் இம்மஹியங்கனையில் வாழ்ந்த தமிழர்கள் எனக் கூறமுடியாதுள்ளது.

ஏற்கனவே மஹியங்கனை இயக்கர் ஒன்றுகூடும் இடமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. மஹியங்கனையில் அழிக்கப்பட்டவர்கள்பற்றி மகாவம்சத்தில், 'தன்னைச் சேர்ந்தவர்களையே யாரென்று தெரிந்து கொள்ளாமல் அரசன் தன் மக்களையே கொல்கிறான்" (அத், 25: செய். 16) என்ற மகாவம்சச்செய்யுளினால் அழிக்கப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவருகிறது.

இச்செய்தி மூலம் மஹியங்கனையிலிருந்து பொலன்னறுவை வரையிலான பகுதியில், மஹியங்கானவில் சத்தன் என்ற தமிழன், அம்பதிட்டகத்தில் தித்தம்பன் என்ற தமிழன், நதிக்கப்பாலிருந்த (கோமாராமா) ஏழு தமிழர்கள், அந்தர சோபாவில் மகா கொத்தன், டோண காவரத்திலும், ஹாலபொல இஸாரியத்திலும், நாழிசோப நாழிகாவிலும் இருந்தவர்கள், தீகாபய கல்லகத்தில் தீகாபயன், கச்ச திட்டத்தில் கபிசீகன், கோதானகரத்தில் கோதன், வஹித்தலையில் தமிழன் வஹித்தன், கும்பாகம கும்பா, நந்திகாம நந்திகா, கானுகாமத்தில் கானு, மாமனும் மருமகனுமான தம்பா, உனமா மற்றும் ஜம்பு ஆகியோர்கள் வாழ்ந்தமைபற்றி அறியமுடிகிறது. இதில் பலர் தமிழர்கள் ஆவர்.

## பொலன்னறுவைக்காலம்

கொடிறின்றன் அவர்கள், "முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கைப்பதிவுகள் கன்னடர், கேரளர், தமிழர் ஆகியோரைப் பெயர் கொண்டு குறிக்கின்றன" (பக். 65) எனக் குறிப்பட்டுள்ளார். முதலாம் பராக்கிரமபாகு கி.பி.1153 முதல் 1186 வரை பொலன்னறுவை இராச்சியத்தின் மன்னாக இருந்தவனாவான்.

குணவர்த்தனா அவர்களின் கருத்துப்படி, (பக். 91—92) இக்காலத்திலே தென்கிழக்காசியாவிலிருந்து ஜாவகர் குடியேற்றங்கள் நிகழ்ந்தமைபற்றியும் அறியமுடிகிறது. ஆறாம் பராக்கிரமபாகு (1412—67) காலத்தில் தனது தெமல, சிங்கள, மலல, கன்னட, தொலுவர ஆகிய எதிரிகளை முறியடித்து ஒரு பூரண தனியரசை ஸ்தாபித்தான். இக்காலப்பகுதியில் யாழ்ப்பாண இராச்சியத்தின் வளர்ச்சி ஏற்படத்தொடங்குகிறது.

ஆறாம் பராக்கிரமபாகுவின் மகளை மணம் செய்தவன் தமிழ் இளவரசன் நன்னுருத்தன் ஆவான். இக்காலத்தில் சிங்களமக்கள் மத்தியில் தமிழ்க்கவிதைகளும் பாடல்களும் பிரபல்யம் பெற்றிருந்தன. கோகில சந்தேஸ எனும் நூலில் தமிழ், பாளி, மற்றும் சமஸ்கிருத மொழிகளிலே தொகுக்கப்பட்ட கவிதைகள் ஆறாம் பராக்கிரம பாகுவின் சபாமண்டபத்தில் பாடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கோகில சந்தேஸ ஆசிரியர் கூற்றுப்படி "மகாவலிகம" எனுமிடத்தில் தமிழ்ப்பாடல்கள் இசைக்கப்பட்டதாக அறியப்படுகிறது. அத்துடன் கணபதி, பத்தினி ஆகிய தெய்வவழிபாடுகளின் வளர்ச்சியும்

ஏற்படுகிறது. கண்டி இராச்சியத்திலும் தமிழ்நூல்கள் சிங்களமொழியிற் பெயர்க்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக முதலாவது இலங்கைத் தமிழ்நூலான சரசோதிமாலை தென்னிலங்கையிலே தோற்றம் பெறுகிறது. கண்டி இராசதானியின் இறுதிக்காலத்தில் (1815இல்) ஆங்கிலேயருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திற் கண்டி இரசாதானி சார்பான பிரதிநிதிகள் தமிழிற் கையொப்பமிட்டுள்ளமையும் கவனத்திற்குரியது. கண்டி இராசதானிக்காலத்தில் மட்டக்களப்பிற்கும் கண்டி இராசதானிக்கும் இடையிலான தொடர்பு வளர்ச்சியடைந்திருந்தாகக் கூறப்படுகிறது. இதனை விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

மட்டக்களப்புப்பூர்விககுடிகள் பற்றிய கட்டுரைத் தொடரை நிறைவுசெய்யமுன் முக்கியமான வினாவொன்றை முன்வைக்க வேண்டியிருக்கிறது.

மட்டக்களப்பின் பூர்விககுடிகள் வேடர்கள் எனப் பல மட்டக்களப்புவரலாற்றுநூல்கள் கூறுகின்றன. மட்டக்களப்பின் தெய்வ வழிபாடுபற்றி விபரிக்கும் நூல்களும் இவ்வாறே கூறுகின்றன. மட்டக்களப்புக்கிராமங்களின் வரலாறுபற்றிய கட்டுரைகளும் இக்கருத்தையே குறிப்பிடுகின்றன. விடயம் தொடர்பான ஆர்வலர்களும் இக்கருத்தையே குறிப்பிடுகின்றனர். ஆனால், தகவலின்படி இலங்கையில் வாழ்ந்த வேடுவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவானதாகும், அதிலும், மட்டக்களப்பில் வாழ்ந்த வேடர்களின் எண்ணிக்கை மிகச்சொற்பமானதே.

தரவுகளின்படி மிகக்குறைந்த எண்ணிக்கையிலான வேடர்கள், வரலாற்றுவிபரிப்புக்களில் எவ்வாறு பல கோவில்களின், கிராமங்களின் தோற்றத்திற்கு காரணமாயினர்? அதேவேளை வேடர்கள் என்ற சொற்பயன்பாடு எவ்வாறு அறிமுகமாகிறது என்பதுவும் கண்டறியப் படவேண்டும். இதனூடாக, மட்டக்களப்பின் பூர்விககுடிகள் வேடர்கள் முன்னர் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார்களா என்பதனை அறியவேண்டும். அப்பெயர்கள் இலங்கையின் பண்டையகாலத்தில் வாழ்ந்த மக்களுடன் தொடர்புபட்டனவா என்பது முக்கியமானதொரு வினாவாகும்.

## உசாத்துணைகள்.


மௌனகுருசி, மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள், மட்டக்களப்பு, 1998.

வெல்லவூர்க்கோபால், மட்டக்களப்பு வரலாறு, மட்டக்களப்பு, 2005.

நடராஜா.எவ்.எக்.ஸி, மட்டக்களப்பு மாண்மியம், கொழும்பு, 1962.

சண்முகலிங்கம்.க, இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும், கொழும்பு, 2011.

வானமாமலை.நா, தமிழர் பண்பாடும் தத்துவமும், சென்னை, 1990.

குணராசா.க, ஈழத்தமிழர் வரலாறு, கொழும்பு, 2000.

கமலநாதன்.சா.இ, கமலா கமலநாதன், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், கொழும்பு, 2005.

சேனக்க பண்டாரநாயக்கா, இலங்கை மக்கள் வசிப்பிடமாதல்: தேசியப் பிரச்சினை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள், இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், கொழும்பு, 1985.

சுசந்த குணதிலக, இலங்கைப் பண்பாட்டின் உருவாக்கம்: இலக்கிய தொல்லியல் சான்றுகள் பற்றிய மறு விளக்கம், இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், கொழும்பு, 1985. .

குணவர்த்தன.ஆர்.ஏ.எல்.எச், சிங்கத்தின் வழிவந்தோர் — வரலாற்றிலும் வரலாற்றியலிலும் சிங்கள உணர்வு, இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், கொழும்பு, 1985.

வில்ஹெம் கெய்கர், சிங்கள வரலாற்று நூல்களின் நம்பகத் தன்மை, சென்னை, 2002.

செல்வராசகோபால்.க.தா, கனகசபாபதி.எஸ்.பி, மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள், கனடா, 2005.

*செல்வராசகோபால்.க.தா, கனகசபாபதி.எஸ்.பி, மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்றுச் சுவடுகள் பாகம் இரண்டு, கனடா, 2005.*

*கந்தையா.வி.சீ, மட்டக்களப்பு தமிழகம், யாழ்ப்பாணம், 1964.*


*சங்கரன். எஸ், (தமிழாக்கம்), மகாவம்சம் — இலங்கைத் தீவின் புராதன வரலாறு, சென்னை, 1962.*

MENDIS.G.C, THE EARLY HISTORY OF CEYLON, CULCUTTA, 1945.

## குறிப்புக்கள்

# குறிப்புக்கள்

மட்டக்களப்பின் பூர்விக வரலாறும், பூர்விக வழிபாட்டு முறைகளில் ஒன்றான குமார தெய்வ வழிபாடும் இந்நூலில் ஆய்வு செய்யப்படுகின்றன. பண்பாடு சார்ந்த அம்சங்களைக் கொண்ட வரலாற்றெழுதியல் முறைமை என்ற போதிலும், இந்நூலில் பெரும்பாலான தர்க்கங்களும் தகவல் மூலங்களும் கடந்தகால ஆவணங்களில் இருந்தும் அனுபவம் மற்றும் கள ஆய்வு சார்ந்தும் எடுத்தாளப்பட்டுள்ளன.



ISBN 978-93-80244-97-6

50 INR, 100 SLR, 6 USD, 4 EUR